
கல்கி



KALKI மார்ச் 30, 1952

4 அணா



"லக்ஸ் டாய்லட் சோப்
என்
சருமத்திற்கு
விசேஷ
நன்மையளி-
க்கிறது"
என்று சொல்கிறார்
பி.எஸ்.ஸரோஜா
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!
'சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்'
LTS. 324-X30 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 11 இதழ் 35 | 1952 மார்ச் 30 | கர ௵ பங்குனி 17

ராஜாஜியின் தலைமை	(தலையங்கம்)	...	3
என்ன சாதிக்கவில்லை?	...	...	4
தூய்மை அடையுமா?	(கார்ட்டூன்)	...	5
இலங்கையின் சோகம்	...	...	6
அகில உலகச் சிறுகதைப் போட்டி முடிவு	...	...	6
திறப்பு விழா!	(போட்டோ)	...	7
பொன்னியின் செல்வன்	கல்கி	...	8
வட்ட மேஜை	...	...	14
பேட்டி கிடைக்குமா?	கார்ட்டூன்	...	15
அரசிகள் வளருகின்றனர்	ரா. கி.	...	19
தேவராஜன் (பாப்பா மலர்)	விஜயம்	...	25
பிரிவு உபசாரம்	வசுமதி ராமஸ்வாமி	...	29
ராஜாளி மடம்	கி. ரா. கோபாலன்	...	33
வீரனின் வஞ்சம்	ஆர். பி. குல்கர்ணி—வாஞ்சி	...	39
குறும்பு மணி!	சாமா	...	45
தம்பியின் கடிதம்	ராசு	...	46
அல்லிக்குளம் வள்ளி	பகீரதன்	...	49
ஆரோக்கிய ரகசியம்	வி. என். குமாரசாமி	...	57

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சகல காரியங்களுக்கும்

பெர்குசன்

டிராக்டர்

விலை ரூ. 7,300/-

லோகல் வரி பிரத்யேகம்

சுலபமாக ஓட்டக் கூடியது.

உங்கள் பண்ணையிலேயே சேவையளிக்கும் வசதியுள்ளது.

உங்கள் அருகாமையிலேயே ஸ்பேர் பாகங்கள் கிடைக்கும்.

மிகக் குறைந்த செலவான பாதி விலையில் மேலான உணவு

உங்கள் பண்ணையில் டெமான்ஸ்ட்ரேஷன் செய்து காண்பிக்க எழுதுங்கள்

விபரங்களுக்கு:

கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்

"சாகர் மான்ஷன்" - 2, ஜோன்ஸ் தெரு - பிராட்வே - மதராஸ்


ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (எஸ். ஐ.) லிட்.

கோயமுத்தூர் - கோழிக்கோடு - உதகமண்டலம் - திருவனந்தபுரம்


FERGUSON SYSTEM

அதன் கலப்புதான்
அதிமுக்யமானது


பெண்ட்லீஸ்
உயர்தர
தேயிலைகள்



ப்ரோகன்
ஆரஞ்ச் பீகோ



தேயிலை தூள்



ப்ளவரி
ஆரஞ்ச் பீகோ

ஆகியவை தமது
- நறுமணத்திற்கும்
- உயர் ரகத்திற்கும்
- நிறத்திற்கும், பானத்திற்கும்

பிரசித்தமானவை

நிபுணர்களால் கலப்பு செய்யப்பட்டு பாக் செய்யப்பட்டது

பெண்ட்லீஸ் ப்ராட்யூஸ் கம்பெனி

கூனூர் (நீலகிரி)

BPZ-1 TM

கல்கி

மலர் 11

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 35

ராஜாஜியின் தலைமை-நடவாத வெறும் பேச்சு!

கோயில்களில் உள்ள தெய்வங்களுக்கு ஏராளமாக நிவேதனங்கள் வைக்கிறோமே? என்ன தைரியத்தினால் தெரியுமா? சுவாமி சாப்பிட மாட்டார் என்ற தைரியத்தினால்தான். விநாயகர் கொழுக்கட்டையைச் சாப்பிட்டு விடுவார் என்றும், ஆஞ்சநேயர் வடை மாலையை விழுங்கி விடுவார் என்றும், பெருமாள் பொங்கல் பிரஸாதத்தைச் சுவீகரித்துக் கொள்வார் என்றும், பழனி ஆண்டவர் பஞ்சாமிர்தத்தை உண்டு உவப்பார் என்றும் ஏற்பட்டு விட்டால், அப்புறம் அத்தெய்வங்களுக்கு இவ்வளவு பிரஸாதங்கள் படைக்கப்படுமா?—இந்தக் கேள்வியைச் சில பிரசங்கிகளும் அதிகப் பிரசங்கிகளும் ஹாஸ்யமாகக் கிளப்புவார்கள்.

அம்மாதிரி நிலைமை ஒன்று தற்சமயம் தமிழ் நாட்டு அரசியலில் ஏற்பட்டிருக்கிறது. புதிய சென்னைச் சட்டசபையின் காங்கிரஸ் கட்சித் தலைமையை ராஜாஜி ஏற்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் ஒரு சிலர் இப்போது வெகு உருக்கமாகக் கோருகிறார்கள். ராஜாஜி ஒரு நாளும் ஏற்க மாட்டார் என்ற தைரியத்தினால்தான்!

ஆயினும் அந்த வெறும் பேச்சு,—போலிக் கோரிக்கை,—வேறு சிலருக்குப் பீதியை உண்டாக்கி யிருக்கிறது. "ஐயையோ! ஒரு வேளை ராஜாஜி வந்தே விடுவாரோ?" என்று கறுப்புமார்க்கெட் பெருச்சாளிகள், லஞ்சப் பிசாசுகள், கள்ளரக்கனின் பரிவாரங்கள், பதவி மோகங் கொண்டவர்கள், கலகப் பிரியர்கள் எல்லாரும் அலறத் தொடங்கி யிருக்கிறார்கள்.

"வேண்டாம்; அப்படிப் பயந்து அலற வேண்டாம்!" என்று மேற்படியார்களுக்கெல்லாம் ஆறுதல் கூற விரும்புகிறோம்.

ராஜாஜி மறுபடியும் இம்மாகாண அரசியல் சேற்றில் காலை வைக்கப் போவதில்லை. அவரை அழைப்பவர்களும் அவர் வருவார் என்ற நம்பிக்கையுடன் அழைக்கவில்லை. ஏதோ ராஜாஜியையும் கேட்டு விட்டதாக ஒரு பேச்சைக் கிளப்பலாம் என்று கிளப்பி யிருக்கிறார்கள். "ராஜாஜி தலைமை வகிக்கா விட்டாலும் அவருடைய யோசனைகள் எப்போதும் எங்களுக்குக் கிடைத்துக் கொண்டே யிருக்கும்" என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

இரண்டும் வெறும் பேச்சு,—நடவாத காரியங்கள் என்று நாம் கருதுகிறோம்.

* * * *

தமிழ் நாட்டின் நலத்தில்,—சென்னை மாகாணத்தின் முன்னேற்றத்தில்,—உண்மையான அக்கறையுள்ள நண்பர்கள் பலரும் இருக்கத்தான் இருக்கிறார்கள். அவர்கள் ராஜாஜியின் தலைமை ஒன்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் சென்னை மாகாணத்தைக் காப்பாற்றக்கூடும் என்று மனப்பூர்வமாக நம்புகிறார்கள். இவற்றை நாம் அறியாமலில்லை. சர்தார் வேதரத்தினம் போன்றவர்களின் தூய நோக்கத்தைப்பற்றிச் சந்தேகம் என்ன இருக்க முடியும்? அப்படிப்பட்ட பல உத்தமர்கள் ராஜாஜியின் தலைமை தற்சமயம் சென்னை மாகாணத்துக்கு இன்றியமையாதது என்று கருதுகிறார்கள் என்பது உண்மையே. பொதுமக்கள் பலரும் அவ்வாறு விரும்புவதும் இயல்புதான்.

சென்னை மாகாணத்தை இப்போதைய சங்கடத்திலிருந்து கைதூக்கி விடும் ஆற்றல் ராஜாஜிக்கு உண்டு, அவரால் அது முடியும் என்பதைப் பற்றியும் நமக்கு யாதொரு சந்தேகமும் இல்லை.

ஆயினும் ராஜாஜியின் அரசியல் தலைமையை இப்போது சென்னை மாகாணத்துக்குக் கோருவது காலங் கடந்த ஆசை என்று நாம் கருதுகிறோம்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னால் ராஜாஜியின் தலைமை இந்த மாகாணத்துக்கு ஏற்பட்டிருந்தால் சென்னையின் முன்னேற்றம் இந்தியாவுக்கு முன்மாதிரியா யிருந்திருக்கும்; உலகத்துக்கே ஓர் எடுத்துக் காட்டாகவும் இருந்திருக்கும்.

அந்தச் சந்தர்ப்பம் தவறிப் போய் விட்டது.

மற்றவர்களுடைய தவறுகளினாலும் மற்றும் பல சந்தர்ப்ப விபரீதங்களினாலும் இப்போது சென்னை இந்தக் கதியை அடைந்து விட்டது.

"மற்றவர்கள் கெடுத்து விட்ட காரியத்தை நான் வந்து சரிப்படுத்தினேன்" என்ற பெருமையை ராஜாஜி அடைய விரும்ப மாட்டார். அந்தகைய பெருமை அவருக்கு வேண்டியதில்லை.

"நாம் எதை வேண்டுமானாலும் கெடுத்து வைக்கலாம்; யாராவது வந்து சரிப்படுத்தி விடுவார்கள்" என்ற எண்ணத்தை வளர்க்கக்கூடாது.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவம் என்ன! தவறு செய்யக்கூட உரிமை வேண்டும் என்பதுதான். இந்தியா இப்போது ஜனநாயகத்தை அடைந்திருக்கிறது. ஜனநாயகத்தில் தவறுகளும் நடக்கலாம் என்பதற்குச் சென்னை மாகாணம் உதாரணமாக ஏற்பட்டிருக்கிறது. தவறுகளைச் செய்வதற்கும் ஜனநாயகத்தில் உரிமை உண்டு; நடந்து விட்ட தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும் உரிமை உண்டு.

"தவறு செய்வதற்கு மட்டும் நமக்கு உரிமை; திருத்திக் கொடுப்பது பெரியவர்களின் கடமை" என்ற எண்ணம் பரவ விடக் கூடாது.

நாம் தவறு செய்தால் அதன் பலன்களை அநுபவித்து அந்த அநுபவத்தைக் கொண்டு நாமே சீர்திருத்திக் கொள்ளுவதுதான் முறை.

* * *

—அரசியல் வாழ்விலிருந்து விலகிக் கொள்ளும் எண்ணம் ராஜாஜிக்கு மூன்று வருஷங்களுக்கு முன்பே உண்டாகி விட்டது.

ஆனால் தேச நன்மைக்காகப் புது டில்லியில் அவர் இருக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டிருந்தது. சர்தார் படேல அவர்களும் ஜவாஹர்லால்ஜியும் மனப் போக்கில் பல அம்சங்களில் மாறுபட்டவர்கள். அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுப் பிளவு அதிகமானால் தேசம் குட்டிச் சுவராய்ப் போயிருக்கும். அப்படி ஏற்படாமல் தடுத்து இருவருக்கும் மத்தியில் இருந்து சிநேக உறவை நிலைநாட்டி வரும் துறையில் ராஜாஜியின் சேவை புது டில்லியில் தேவையாயிருந்தது.

சர்தார் படேல் காலமான பிறகு அந்த அவசியம் இல்லாமற் போயிற்று. ஆகவே, ராஜாஜியும் உத்தியோக பதவியை உதறிவிட்டு வந்துவிட்டார்.

தற்போது அவருடைய தூய உள்ளம் பாரமார்த்திகத் துறையில் ஈடுபட்டிருப்பதை நாம் அறிவோம். "பஜகோவிந்தம்" கட்டுரைகளின் மூலம் நேயர்களும் அறிந்திருப்பார்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அரசியல் துறையை மட்டும் பொறுத்திருக்கவில்லை; மற்றும் பல துறைகளும் இருக்கின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்தியா தேசத்துக்குச் செய்த தொண்டைப்போல் எந்த அரசியல் தலைவராவது செய்ததாகச் சொல்ல முடியுமா!

ராஜாஜியை இப்போது சென்னை அரசியல் தலைமைக்கு அழைப்பது, ரமண ரிஷியை "முனிசிபல் கமிஷனர் வேலையை ஒப்புக் கொள்ளுங்கள்" என்று கூறுவது போலாகும்.

* * *

சென்னை மாகாணத்தைப் பழையபடி உன்னத நிலைமைக்குக் கொண்டுவரும் பொறுப்பு இம்மாகாணத்தின் மற்ற அரசியல் தலைவர்களைச் சேர்ந்தது. பொது மக்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

என்ன சாதிக்கவில்லை?

கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அ. இ. கா. கமிட்டியும் என்ன சாதித்தன! இவ்விதம் கேட்பவர்களைப் பார்த்து "அவை என்ன சாதிக்கவில்லை!" என்று திருப்பிக் கேட்க வேண்டியதாயிருக்கிறது.


காலஞ்சென்ற தேச பக்தர்களைக் குறித்த அநுதாபத் தீர்மானத்தைச் சாதிக்கவில்லையா! அதில் பாகிஸ்தானைச் சேர்ந்த சுதந்திர வீரர் காஜி அதாவுல்லா ஷாவின் பெயர் முதலில் விட்டுப் போயிருக்க, பிற்பாடு ஜவாஹர்லால்ஜி தனியாக அவர் பெயரைக் குறிப்பிட்டு மிக மிக அநுதாபப் பட வில்லையா! இத்தனைக்கும், காலஞ் சென்றவர்களின் அபிப்பிராயங் கூடக் கேட்கப்படவில்லை. அவர்களில் சிலர் இந்தியாவை விட்டும் பாகிஸ்தானை விட்டும் மறு உலகம் சென்றதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டிருக்கலாம். இருந்தால் என்ன! அவர்களுடைய அபிப்பிராயத்தை எதற்காகக் கேட்க வேண்டும்! காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் அங்கத்தினர் அபிப்பிராயம் கேட்கப்படுகிறதா, என்ன! அப்படியிருக்க, அநுதாபத் தீர்மானத்துக்கு மட்டும் சம்பந்தப் பட்டவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்பானேன்! ஆகவே, ஜனாப் அதாவுல்லாஷாவின் பெயரையும் சேர்த்து அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது ஒரு பெரிய சாதனைதான்.

பிறகு சென்ற தேர்தலில் நாடெங்கும் பெரும்பாலும் பொதுமக்கள் காங்கிரஸிடம் காட்டியிருக்கும் நம்பிக்கையைக் குறித்த தீர்மானமும் ஒரு சாதனைதான். அதனால் காங்கிரஸ்காரர்களின் பொறுப்பு அதிகமாகி விட்டதை உணர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அத் தீர்மானம் என்ன சொல்கிறது தெரியுமா! ஜனங்களிடம் காங்கிரஸின் நன்றியைத் தெரிவிப்பதற்காக ஐந்து வருஷத் திட்டத்தை மற்றொரு முறை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. ஐந்து வருஷத் திட்டத்தைக் கேவலம் மூன்று வருஷமாகவோ, இரண்டு வருஷமாகவோ குறைத்து விடவில்லை. அல்லது நன்றி உணர்ச்சி காரணமாகப் பொறுப்பில்லாமல் ஐந்து வருஷத் திட்டத்தை இரட்டித்துப் பத்து வருஷத் திட்டமாகவும் ஆக்கிவிடவில்லை. ஐந்து வருஷத் திட்டம் இன்றும் ஐந்து வருஷத் திட்டமாகவே இருந்து வருகிறது. அதைக் குறைக்கவும் இல்லை; கூட்டவும் இல்லை!

இது சம்பந்தமாகச் சென்னையில் நடந்த காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. "காங்கிரஸ் தேர்தலில் தோற்றதேன்!" என்ற கேள்விக்கு, "கம்யூனிஸ்டுகள் தலைக்கு ஐந்து ஏக்கரா நிலம் தருவதாகச் சொன்னார்கள். நாமும் அடுத்த தேர்தலில் ஐம்பது ஏக்கரா தருவதாகச் சொன்னால் ஜயித்துவிடுவோம்!" என்றார் அநுபவசாலியான ஓர் ஊழியர். இதை எல்லாரும் உற்சாகமாக ஆமோதித்தபோது ஒருவர் மட்டும் எழுந்து "ஐம்பது ஏக்கரா புன்செய்யா, நன்செய்யா!" என்று கேட்டார். சிலர் 'நன்செய்' என்றார்கள்; சிலர் 'புன்செய்' என்றார்கள். இந்த விவாதம் வளர்ந்து முற்றிக் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது!

அப்படி ஒன்றும் நேராமல் ஐந்து வருஷத் திட்டத்தை ஐந்து வருஷமாக வைத்தது அ. இ. கா. கமிட்டியின் ஒரு பெரிய சாதனை அல்லவா!

தூய்மை அடையுமா?



காங்கிரஸ் ஸ்தாபனத்தில் புகுந்து விட்ட மாசுகளைப் போக்கிப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று கல்கத்தாவில் கூடிய அ. இ. கா. கமிட்டி தீர்மானம் செய்திருக்கிறது.

அடுத்தபடியாக, நாட்டிலிருந்து சமூக வாதம் மாகாண வாதம், சாதி வாதம், பிடி வாதம், மூடக்கு வாதம், இல் வாதம் ஆகியவற்றை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று பாபு புருஷோத்தம் தாஸ் டாண்டன் கொண்டு வந்த தீர்மானமும் ஒரு பெரிய சாதனை என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் பேசிப் பேசித் தலைவேதனை உண்டாக்கும் ஒரு விஷயத்தைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பது சாதனை அல்லவா!

காங்கிரஸ் புனரமைப்பு சம்பந்தமான தீர்மானம், எல்லாவற்றிலும் பெரிய சாதனை. பழைய படி காலணாச் சந்தாவை ஏற்படுத்திப் பெருந்திரளாகக் காங்கிரஸ் அங்கத்தினரைச் சேர்க்க வேண்டும் என்பது மேற்படி தீர்மானத்தின் முக்கியமான அம்சம். இன்னும், காங்கிரஸில் புதிய மனிதர்கள் சேர்வதற்குக் காங்கிரஸ் கமிட்டிகள் இடங் கொடுக்க வேண்டும் என்று அத்தீர்மானம் சொல்கிறது. சொல்லட்டும், சொல்லட்டும், சும்மாச் சொல்லிவிட்டுப் போகட்டும்! தாதன் சங்கு ஊதுகிறபோது ஊதினால் பொழுது விடிகிற போது விடிந்து விட்டுப் போகிறது.

கடைசியாக, ஆங்காங்கு காங்கிரஸ் முன்னணிப் படைகள் அமைக்க வேண்டும் என்ற நமது தாழ்மையான யோசனைக்கும் அ. இ. கா. கமிட்டி பேராதரவு அளித்திருக்கிறது. பல இடங்களில் பொதுத் தேர்தல்களின்போது காங்கிரஸ் கமிட்டிகள் இயங்கவே இல்லை. தனிப்பட்ட முறையில் பல தேச பக்தர்களும் காங்கிரஸ் அபிமானிகளும் முன் வந்து காங்கிரஸ் வெற்றிக்கு உழைத்தார்கள். அவர்களுடைய உழைப்பு இல்லாமல் காங்கிரஸ் கமிட்டிகளை மட்டும் நம்பியிருந்தால் நிலைமை இன்னும் படுமோசமாகப் போயிருக்கும். அப்படி வேலை செய்தவர்கள் அனைவரும் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து, காங்கிரஸ் முன்னணிப் படைகளை அமைத்துத் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். அ.இ.கா. கமிட்டியின் தீர்மானம் அத்தகைய காங்கிரஸ் அபிமானிகள் ஆங்காங்கு அட்ஹாக் கமிட்டிகள் ஏற்படுத்திக்கொண்டு வேலை செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கமிட்டிகள் பல இடங்களில் சரியாக இயங்கி வேலை செய்யவில்லையென்பதையும், இயங்கிய இடங்களிலும் அவற்றின் வேலை போதவில்லை என்பதையும் அ. இ. கா. கமிட்டி ஒப்புக்கொண்டு தான் மேற்கண்டவாறு தீர்மானித்திருக்கிறது.

மற்ற மாகாணங்களைக் காட்டிலும் நமது மாகாணத்துக்கு இந்தத் தீர்மானத்தில் அடங்கிய யோசனை மிக முக்கியமானதாகும். இங்கே காங்கிரஸ் கமிட்டிகள் புனர் அமைப்புப் பெறும் என்றே தோன்றவில்லை. பழைய பெருச்சாளிகள், உற்சாகத்துடன் புதிதாக வேலை செய்ய வருகிறவர்களுக்கு இடங் கொடுப்பார்கள் என்றும் நம்ப இடமில்லை. அப்படியெல்லாம் காங்கிரஸ் உருப்பட வேண்டும் என்ற நல்லெண்ணம் மாகாண நிர்வாகிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. துரியோதனனையரைப் போல் "நம்முடன் காங்கிரஸ் அழிந்து போய் விடவேண்டும்" என்று விரும்புவதாகவே காணப்படுகிறது.

ஆதலின், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மறுபடியும் புத்துயிர் பெற வேண்டும் என்று விரும்பும் தேச பக்தர்கள், இப்போதுள்ள உளுத்துப் போன காங்கிரஸ் கமிட்டிகளை மறந்து விட்டு விட்டு, வேலை செய்ய விருப்பமுள்ள அனைவரையும் சேர்த்துக் கொண்டு காங்கிரஸ் முன்னணிப் படைகள் அமைப்பது மிக மிக அவசியம். தென்னாட்டில் காங்கிரஸ் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு முன்னணிப் படைகளை அமைத்து வேலை செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது.

இலங்கையின் சோகம்

இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ டான் ஸ்டீபன் சேனநாயகா குதிரைமீதிருந்து விழுந்ததால் படுகாயமுற்று இவ்வுலகை நீத்தார் என்ற செய்தி இலங்கையையும் இந்தியாவையும் திடுக்கிடச் செய்துவிட்டது. இலங்கை தேசத்தின் தந்தையும் சுதந்திரச் சிற்பியுமான ஸ்ரீ சேனநாயகாவின் மரணம் இலங்கைக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

அரசியல் பயிற்சியோ உயர்தரப் படிப்போ இல்லாமல் குடியானவராகப் பிறந்து வளர்ந்த ஸ்ரீ சேனநாயகா மந்திரி பதவியைத் திறம்பட வகிக்க முடியும் என்பதை உலகத்துக்கு நிரூபித்துக் காட்டி விட்டார். விவசாயத்தில் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த அவர் பதினறு வருஷ காலம் இலங்கையின் விவசாய மந்திரியாக இருந்து மேற்படி துறையில் பல அபிவிருத்திகளைச் செய்து புகழ் பெற்ருர். சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி பதவியை ஏற்ற பின் அவர் செய்த பல அரிய சாகசங்கள் அவர் சிறந்த ராஜதந்திரி என்பதையும் நிரூபித்தன.

அப்படிப்பட்ட தலைவரின் மரணத்தைக் குறித்து நமது இலங்கை நிருபர் ரஜனி குறிப்பிட்டுள்ள உருக்கமான விவரங்களைக் கீழே காணலாம் :

" இலங்கையின் தேச பிதாவான ஸ்ரீ சேனநாயகா திடீரென்று மறைந்துவிட்டார். தலைவனை இழந்த குடும்பத்தைப் போல இன்று இலங்கை மக்கள் கலங்கி நிற்கிருர்கள். சுதந்திரம் பெற்ற நூன்காண்டுகளுக் குள்ளாக இந்நாட்டு மக்களுக்கு இத்தனை பெரிய துக்கம் ஏற்பட்டது பெரும் துரதிர்ஷ்டமாகும். அமெரிக்காவிலிருக்கும் இலங்கை ஸ்தானிகர் ஸ்ரீ ஜி. வி. எஸ். கொரியா கூறியதைப் போல, ஸ்ரீ சேனநாயகாவுடன் இலங்கையின் நீண்ட சரித்திரத்திலே ஒரு சகாப்தம் முடிவடைந்து விட்டது. அடுத்த சகாப்தத்தில் தேசத்தை வழி நடத்திச் செல்ல ஸ்ரீ சேனநாயகாவுக்கு நிகரான ஒரு தலைவர் கிடைப்பாரா வென்று மக்கள் கலக்கம் அடைந்திருக்கின்றனர்.

ஸ்ரீ சேனநாயகா ராஜ தந்திரத்திலும், சிரித்துச் சிரித்துப் பேசி எதிரிகளைக் கவருவதிலும் ஈடு இணையற்றவர். இலங்கை இந்தியர் பிரச்னையிலும் வேறு பல பிரச்னைகளிலும் அவர் தவருன கொள்கையைப் பிடிவாதத்துடனும் தீர்க்க தரிசனமில்லாமலும் கடைப் பிடித்து நடந்திருக்கலாம். ஆயினும் அவருடைய தேசப் பற்றையோ சேவா இலட்சியத்தையோ அவரது தீவிர அரசியல் விரோதிகள் கூடக் குறை சொல்ல மாட்டார்கள். இலங்கை சுதந்திர மடைந்து, உலக சுதந்திர நாடுகளில் ஒன்ருகத் திகழ்வதற்குக் காலஞ் சென்ற பெரியார் சேனநாயகாவே மூல காரணமென்ருல் மிகையாகாது. அவருடைய பிரிவு இலங்கையின் அரசியலில் ஒரு பெரிய சூன்யத்தை உண்டுபண்ணி விட்டதென்று இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ கே. ராஜலிங்கம் சொல்லியிருக்கிருர். படுகாயமடைந்த பிரதமரைக் குணப்படுத்த அவரது சகாக்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். உலகின் பல மூலைகளிலிருந்தும் நிபுணர்களைத் தருவிக்க ரேடியோச் செய்திகள் பறந்தவண்ண மிருந்தன. பிரதமரின் அத்யந்த நண்பர்களில் ஒருவரான ராஜா ஸர் முத்தையாச் செட்டியாரால் அனுப்பப்பட்ட ஒரு மூளை சத்திர சிகிச்சை நிபுணரே முதலில் வந்து சேர்ந்தார். அவர் சிகிச்சையை ஆரம்பிக்கச் சந்தர்ப்பம் கொடாமல் ஸ்ரீ சேனநாயகா தேச மக்களை ஆருத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு இம் மண்ணுலகை நீத்துச் சென்ருர்.

ஜனப்பிரதிநிதி சபை மண்டபத்தில் பிரதமரின் பூதவுடல் வைக்கப்பட் டிருக்கும் இடத்துக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலங்கிய கண்களுடன் சென்று தங்கள் கடைசி மரியாதைகளைத் தெரிவித்த வண்ண மிருக்கின்றனர். உலகின் நாலாபாகங்களிலுமுள்ள தலைவர்களிட மிருந்தும் நூற்றுக்கணக்கான மலர் வளையங்கள் வந்து வரிசையாக வைக்கப்பட் டிருக்கின்றன. சென்னை "கல்கி" "சுதேசமித்திரன்" ஆகிய பத்திரிகைகளின் அதிபர்கள் சார்பாகவும் மலர் மாலைகள் வைக்கப்பட்டுள்ளன. மார்ச்சு மாதம் இருபத்தொன்பதாந் தேதி சனிக்கிழமை பிற்பகலில் தகனக் கிரியை நடக்கின்றது."




ஸ்ரீ சேனநாயகா

இலங்கைக்கு ஏற்பட்ட இந்த மாபெரும் நஷ்டத்தைக் குறித்து நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இலங்கை மக்களைச் சோகத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்த பிரதமர் ஸ்ரீ டான் ஸ்டீபன் சேனநாயகாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அகில உலகச் சிறுகதைப் போட்டி முடிவு

பிரபல அமெரிக்கப் பத்திரிகையான நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன் ஆரம்பித்த அகில உலகச் சிறுகதைப் போட்டி முடிந்துவிட்டது. இம் முயற்சியில் இந்தியா உள்பட இருபத்து மூன்று தேசங்களைச் சேர்ந்த பிரசித்தமான பத்திரிகைகள் ஒத்துழைத்தன. உலகப் போட்டிக்காக மொத்தம் ஐம்பத்தொன்பது சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் பிரஞ்சு தேசத்திலிருந்து வந்த இரண்டு கதைகளுக்கும், பின்லாந்திலிருந்து வந்த ஒரு கதைக்கும், நார்வேயிலிருந்து வந்த ஒரு கதைக்கும் முதல் பரிசான 5,000 டாலர் (ரூ. 22,250) பகிர்ந்தளிக்கப்பட்டது. சென்னை மாகாணம் பீமாவரத்தைச் சேர்ந்த ஸ்ரீ பி. பத்மராஜு எழுதிய "புயல்" என்ற தெலுங்குக் கதைக்கு இரண்டாவது பரிசான 800 டாலர் (ரூ. 3500) கிடைத்தது. அகில இந்தியா சிறு கதைப் போட்டியிலும் "புயல்" கதைக்கு இரண்டாவது பரிசு (ரூ. 1000) கிடைத்தது வாசகர்களுக்கு ஞாபக மிருக்கலாம். மேற்படி கதை 1951 மே-27ல், ஜூன்-3ல "கல்கி" இதழ்களில் பிரசுரமாகி யிருந்தது. உலகப் போட்டியில் முதல் பரிசுபெற்ற நாலு கதைகளும் "கல்கி"யில் ஏப்ரல் 13-ந் தேதி இதழிலிருந்து வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



திறப்பு விழா

தென்காசியில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டிருக்கும் பரதன் தியேட்டர் நிகழும் மார்ச்சு மாதம் 21ல கோட்டையூர் ஸ்ரீ கே. வி. ஏஎல். எம். ராமநாதன் செட்டியார் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. ஸினிமாக் கொட்டகைகளைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய அவசியம் பற்றியும் உயர்தரமான தமிழ்ப் படங்களை எடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் ஸ்ரீ ராமநாதன் செட்டியாரும், தலைமை வகித்த "கல்கி" ஆசிரியரும் வற்புறுத்தினர்கள்.





பதினைந்தாம் அத்தியாயம்

காலாமுகர்கள்

உதய சூரியனுடைய செங்கதிர்கள் வந்தியத்தேவனுடைய முகத்தில் சுளீர் என்று பட்டு அவனைத் துயிலெழுப்பி விட்டன. உறக்கம் தெளிந்ததும் எழுந்திருக்க அவனுக்கு மனம் வரவில்லை. கண்ணை விழித்துப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் பயங்கர ரூபமுள்ள இரண்டு சாமியார்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய திரித்து விட்ட சடை, ஒரு கையில் பிடித்த திரிசூலம், இன்னொரு கையில் அக்கினி குண்டம் இவற்றிலிருந்து அவ்விருவரும் காலாமுக வீர சைவர்கள் என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இவர்களுடன் வாதப் போர் செய்வதற்கு ஆழ்வார்க்கடியான் இங்கு இல்லையே என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அந்தக் காலாமுகச் சாமியார்கள் போகும் வரையில் கண்ணை மூடிக் கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதென்று தீர்மானித்தான்.

அவர்கள் அவன் பக்கத்தில் வந்து நிற்பதாக அவன் உணர்ந்தபோதும் கண்களைத் திறக்கவில்லை. அவர்களில் ஒருவர் அருகில் வந்து கனைத்தபோதும் அவன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை.

"சிவோஹம்! பையன் நல்ல கும்பகர்ணனாயிருக்கிறான்" என்றார் ஒருவர்.

"சிவோஹம்! இவனைப்போல் ஒரு வாலிபப் பிள்ளை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்று சொன்னார் இன்னொரு சாமியார்.

"சிவோஹம்! ஆளைப் பார்த்து, முகம் களையாயிருக்கிறதே என்று சொல்லுகிறாய்! இவனால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. வெகு சீக்கிரத்தில் இவனுக்கு ஒரு பெரிய ஆபத்து வரப் போகிறது!" என்றார் முதல் வீர சைவர்.

மேலும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்வது மூச்சு விட முடியாமல் திணறும் உணர்ச்சியை வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. எனினும் அச்சமயம் விழித்தெழுந்தால் தன் பாசாங்கு வெளியாகிவிடும். மேலே அவர்கள் ஏதாவது பேசுவதைக் கேட்க முடியாமலும் போய் விடும். தனக்கு என்ன பெரிய ஆபத்து வரப்போகிறது என்பதையும் இவர்கள் ஒருவேளை சொல்லலாம் அல்லவா?......

ஆனால் அவன் எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை.

"சிவோஹம்! அவனவனுடைய தலையெழுத்து! நீ வா போகலாம்!" என்று

பொன்னியின் செல்வன்



ஒரு வீர சைவர் கூற, இருவரும் அங்கிருந்து நகர்ந்து சென்றார்கள்.

அவர்கள் சற்றுத் தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு வந்தியத்தேவன் எழுந்தான். "சீக்கிரத்தில் இவனுக்குப் பெரிய ஆபத்து வரப்போகிறது!" என்ற வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

பழைய காபாலிகர்களின் பரம்பரையில் வந்தவர்கள் காலாமுகர்கள். காபாலிகர்களைப் போல் அவர்கள் நரபலி கொடுப்பதில்லை. மற்றப்படி காபாலிகர்களின் பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். அவர்கள் மயானத்தில் அமர்ந்து கோரமான தவங்களைச் செய்து வருங்கால நிகழ்ச்சிகளை அறியும் சக்தி பெற்றிருந்ததாகப் பலர் நம்பினார்கள். சாபங் கொடுக்கும் சக்தி அவர்களுக்கு உண்டு என்றும் பாமர ஜனங்கள் எண்ணினார்கள். ஆகையால் காலாமுக சைவர்களின் கோபத்துக்கு ஆளாகாதவண்ணம் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யப் பலர் ஆயத்தமாயிருந்தனர். சிற்றரசர்கள் பலர் ஆலயங்களில் காலாமுகர்களுக்கு வழக்கமாக அன்னமளிப்பதற்கு நிவந்தங்கள் விட்டிருந்தனர். இதுவரையில் சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் மட்டும் காலாமுகர்களுக்கு எவ்வித ஆதரவும் காட்டவில்லை.

கொள்ளும் ஆசை அவன் மனதை விட்டு அடியோடு அகன்று விடவில்லை.

வந்தியத் தேவன் எழுந்து நின்று பார்த்தபோது அந்தக் காலாமுகர்கள் சற்றுத் தூரத்தில் ஒரு பழைய மண்டபத்தின் அருகில் போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். மண்டபத்துக்கு அருகில் செயற்கைக் குன்றம் ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு குகை சிங்க முகத்துடன் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. பழைய நாட்களில் திகம்பர ஜைனர்கள் கட்டிக்கொண்டிருந்த அந்தக் குகைகளை காலாமுகர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே சென்று அவர்களுடன் சிறிது பேச்சுக் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. குதிரையைக் கட்டியிருந்த இடத்திலேயே விட்டு விட்டுச் செய்குன்றை நோக்கிப் போனான். மண்டபத்தை நெருங்கியபோது காலாமுகர்கள் குகையின் மறு பக்கத்தில் நின்று பேசியது அவன் காதில் லேசாக விழுந்தது.

"அந்தப் பையன் பொய்த் தூக்கம் தூங்கவில்லை. உண்மையாகவே தான் தூங்கியிருக்க வேண்டும்" என்று சொன்னார் ஒருவர்.

"அது எப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?" என்றான் இன்னொருவன்.



"இவனைப் போன்ற வாலிபர்கள் எதற்காக? இன்னும் கொஞ்ச நாளில் இந்தச் சோழநாட்டின் சிம்மாதனம் ஏறப் போகிறவனை காலா முகத்தைச் சேரப் போகிறான்......"

"யாரைச் சொல்லுகிறாய்?"

"வேறு யாரை? மதுராந்தகத் தேவனைத்தான் சொல்லுகிறேன்! இதுகூட உனக்குத் தெரியவில்லையா?"

" அது எப்படி? மற்ற இரண்டு பேர்!"

"ஒருவன்தான் கடலில் மூழ்கி இறந்து விட்டானாம். இன்னொருவனுடைய காலம் குறுகிக் கொண்டிருக்கிறது...."

வந்தியத் தேவன் அதற்கு மேல் அந்தக் காலாமுகச் சாமியார்களின் 'பேச்சைக் கேட்கச் சிறிதும் விரும்பவில்லை. அவர்களுடன் பேச்சுக் கொடுக்கவும் எண்ணவில்லை.

விரைவிலே பழையாறையை அடைந்து இளவரசியிடம் செய்தியைச் சொல்லி விட்டுக் காஞ்சிக்குப் போக விரும்பினான். எல்லாருக்கும் மேலாகத் தான் அதிகம் கடமைப் பட்டிருப்பது ஆதித்த கரிகாலருக்கு அல்லவா? அவரை எத்தனையோ வித அபாயங்கள் சூழ்ந்திருப்பது உண்மை. பார்த்திபேந்திரன் கூடப் பழுவூர் ராணியின் மாயவலையில் விழுந்து விட்டான். எந்தக் காரியத்திலும் பட படப்புடன் இறங்கக் கூடியவரான ஆதித்த கரிகாலர் எப்போது எந்த வித அபாயத்துக்கு உள்ளாவாரோ, தெரியாது. அவரிடம் சென்று அவரைக் காத்து நிற்பது தன் முதன்மையான கடமை. வழியில் வீண் பொழுது போக்குவது பெருங் குற்றம். இந்தக் கணமே சென்று விடவேண்டும்.

வந்தியத் தேவன் சத்தமில்லாமல் திரும்பிச் சென்று குதிரை மீது ஏறிக் கொண்டான். குதிரையை வேகமாகத் தட்டி விட்டான். காலா முகர்களின் குகை யோரமாகச் சென்ற போது அவர்கள் தன்னை வெறித்து நோக்குவதைக் கண்டான். ஒரு முகம் அவன் எப்போதோ பார்த்த முகம் போலத் தோன்றியது. ஆனால் நின்று பார்க்க விருப்பமின்றி மேலே சென்றான்.

வழியில் ஜன நெருக்கமான பல கிராமங்களை அவன் பார்த்தான். அங்கேயெல்லாம் இளவரசர் கடலில் மூழ்கியது பற்றிய செய்தி இன்னும் பரவவில்லை யென்று தெரிந்தது. ஏனெனில் ஜனங்கள் சாவதானமாக அவரவர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அதுவரையில் நல்லதுதான். இளவரசரைப் பற்றிய செய்தி பழையாறையை அடை



வதற்குள் தான் அங்கே போய்ச் சேர்ந்து விட வேண்டும். இளைய பிராட்டியிடம் உண்மையை அறிவித்து விட வேண்டும். குந்தவை தேவியின் காதில் வேறு விதமான செய்தி விழுந்தால் ஏதாவது விபரீதம் நேரிட்டு விடலாம் அல்லவா? இளைய பிராட்டியாவது நம்புவதற்குத் தயங்கலாம். அந்தக் கொடும்பாளூர் இளவரசி உயிரையே விட்டாலும் விட்டு விடுவாள்!...இந்த எண்ணம் வந்தியத்தேவனுக்கு மிக்க பரபரப்பை உண்டாக்கிற்று. ஆனால் அவனுடைய அவசரம் குதிரைக்குத் தெரியவில்லை. கால்களில் புதிதாக லாடம் அடிக்கப் பட்டிருந்த அக் குதிரை வழக்கமான வேகத்துடனே கூட ஓட முடியாமல் தத்தளித்தது. கடைசியாகப் பிற்பகலில் சூரியன் அஸ்தமிப்பதற்கு இரண்டு நாழிகை இருந்த போதுதான் பழையாறைக் கோட்டையின் பெரிய சுவர் அவனுக்குப் புலப்பட்டது.

அதோ கோட்டை வாசல் துர்க்கையின் கோவில் தெரிகிறது. கோட்டைக்குள் எப்படிப் பிரவேசிக்கிறது என்பதைப் பற்றி எத்தனையோ யோசனைகள் அவன் உள்ளத்தில் மின்னல் வேகத்தில்படை எடுத்து வந்தன. ஆனால் ஒன்றும் காரிய சாத்தியமாகத் தோன்றவில்லை. பனை முத்திரை மோதிரமோ இங்கே பயன்படாது. ஏனெனில், அந்த மோதிரத்துடன் வருவான் என்பது முன்னமே கோட்டைக் காவலர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. இப்போது மோதிரத்தைப் பார்த்ததும் வேறு விசாரணையின்றிச் சிறைப்படுத்தி விடுவார்கள். பின்னப் பழுவேட்டரையரிடம் அவனை அனுப்பி விடுவார்கள். இளைய பிராட்டி குந்தவை தேவியைப் பார்ப்பதற்கு முன்னால் அவ்விதம் அகப்பட்டுக் கொள்ள அவன் சிறிதும் விரும்பவில்லை.

யோசனை செய்த வண்ணம் குதிரையின் வேகத்தை அவன் குறைத்துக் கொண்டு கோட்டை வாசலை நெருங்கியபோது மற்றொரு திசையிலிருந்து





ஒரு கூட்டம் வருவதைக் கண்டான். வேல் பிடித்த வீரர்கள், விருதுகளைச் சுமந்தவர்கள், குதிரைகள் மேல் ஏறி வந்தவர்கள்,—இவ்வளவு பேருக்கும் நடுவில் தாமரைப் பூ வடிவமாக அமைந்த ஒரு தங்க ரதம். ஆஹா! அந்த ரதத்தில் வீற்றிருப்பது யார்? இளவரசர் மதுராந்தகத் தேவர் அல்லவா? கடம்பூர் அரண்மனையிலும் தஞ்சாவூர்ப் பொக்கிஷ நிலவறையிலும் பார்த்த அதே இளவரசர்தான்! — கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு யுக்தி என்னவென்பது உடனே வந்தியத் தேவன் மனத்தில் தோன்றி அவனுக்கு உணர்ச்சி யூட்டிவிட்டது.

"ஆபத்து வரப் போகிறது என்ற வார்த்தை காதில் விழுந்தால் அதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பாதவனை இதுவரை நான் பார்த்ததில்லை."—இவ்விதம் காலா முகர்களில் ஒருவர் கூறிய வார்த்தைகள் அவன் மனத்தில் பதிந்திருந்தன. அவனே அந்த ஆவலுக்கு இடங் கொடுத்து விட்டான் அல்லவா? அந்தக் காலாமுகரின் யுக்தியை இங்கே கையாண்டு பார்க்க வேண்டியதுதான்.

தாமரை மலரின் வடிவமான தங்க ரதத்தை நோக்கி வந்தியத்தேவன் களைப்படைந்திருந்த தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான்.

மதுராந்தகத் தேவருடைய பரிவாரங்களில் யாரும் அவ்விதம் [illegible]ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு கீழே விழுந்தவனைப் பார்த்து எல்லாரும் சிரித்தார்கள். மதுராந்தகரும் சிரித்தார். அதற்குள் ரதம் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் கையைக் காட்டிச் சமிக்ஞை செய்யவே, வீரர்கள் இருவர் வந்தியத் தேவன் அருகில் சென்று அவனைத் தூக்குவதற்குச் சென்றார்கள். அதற்குள் அவனே எழுந்து உட்கார்ந்திருந்தான். வீரர்களுடைய உதவியில்லாமல் குதித்து எழுந்து நின்றான். தான் விழுந்ததுபற்றிச் சிறிதும் கவனியாதது போல் இளவரசர் மதுராந்தகரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவனை இப்படி அருகில் கொண்டு வாருங்கள்!" என்றார் இளவரசர்.

வீரர் இருவரும் வந்தியத் தேவனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று ரதத்தின் பக்கத்தில் நிறுத்தினார்கள். இன்னமும் அவனுடைய கண்கள் மதுராந்தகர் முகத்தின்பேரிலேயே இருந்தது.

"அப்பனே! நீ யார்?" என்று இளவரசர் கேட்டார்.

"நான்......நான்தான்! சக்கரவர்த்திப் பெருமானே! என்னைத் தெரியவில்லையா?" என்றான் வந்தியத் தேவன்.

"என்ன உளறுகிறாய்?...... அடே! நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்!" என்றார் மதுராந்தகர் மற்ற வீரர்களைப் பார்த்து. வீரர்கள் விலகினார்கள்.

"இந்தக் காலத்தில் எதைத்தான் நிச்சயமாய்ச் சொல்ல முடிகிறது? ஒருவரைப்போல் இன்னொருவர் இருக்கிறார். ஒருநாள் மூடு பல்லக்கில் இருந்தவர் இன்னொரு நாள் ரதத்தில் இருக்கிறார்..."

"என்ன சொன்னாய்?" என்று மதுராந்தகர் சிறிது திடுக்கிட்ட குரலில் வினவினார்.

"ஒருவரைப் போல் இன்னொருவர் இருப்பதால் நிச்சயமாய்ச் சொல்லமுடியவில்லை என்றேன்!"

"நான் யாரைப்போல இருக்கிறேன்?"

"இரண்டு தடவை தங்களை நான் பார்த்திருக்கிறேன். அல்லது தங்களைப் போன்றவரைப் பார்த் திருக்கிறேன். தாங்கள் தாங்கள்தானா அதாவது நான் பார்த்தவர்தானா என்று சந்தேகமாயிருந்தது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்...சற்று முன்..."

"குதிரை மேல் ஏறி நின்று அப்படி உற்றுப் பார்த்தாயா?"

"ஆம், ஐயா!"

"என்ன தெரிந்து கொண்டாய்?"

"தாங்கள் நான் பார்த்தவராகவும் இருக்கலாம், இல்லாமலு மிருக்கலாம் என்று தெரிந்து கொண்டேன்."

மதுராந்தகருக்குக் கோபம் உண்டாகத் தொடங்கிய தென்பது அவருடைய முகத்திலிருந்தும் குரலின் தொனியிலிருந்தும் தெரிந்தது.

"நீ சுத்தப் போக்கிரி. உன்னை..."

"இளவரசே! கோபிக்க வேண்டாம். நான் தங்களையோ, தங்களைப் போன்றவரையோ பார்த்தது எங்கே என்று சொல்கிறேன். பிறகு, தாங்களே நிர்மாணித்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் சொல், சீக்கிரம்!"

"ஒரு பெரிய கோட்டை. நாலா புறமும் நெடிய மதின் சுவர். வீராதி வீரர்கள் பலர் அங்கே கூடியிருந்தார்கள். நடு ராத்திரி. சுவரில் மாட்டிய பெரிய அகல் விளக்கிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுவர் ஓரமாக ஒரு பல்லக்கு இருந்தது. அந்த வீரர்களின் தலைவரை மற்றவர்கள் ஏதோ கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டார்கள். அவருக்குக் கோபம் வந்து விட்டது. வேகமாக எழுந்து போய்ப் பல்லக்கின் அருகில் நின்றார். பல்லக்கை மூடியிருந்த பட்டுத் திரையை விலக்கினார். பல்லக்கின் உள்ளே யிருந்து ஒரு சுந்தர புருஷர் வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே கூடியிருந்த வீரர்கள் அனைவரும் 'வாழ்க! வாழ்க!' என்று கோஷித்தார்கள். 'பட்டத்து இளவரசர் வாழ்க!' என்றும் சிலர் கூவினார்கள். 'சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷித்ததாகவும் ஞாபகம். ஐயா! அப்போது பல்லக்கிலிருந்து வெளி வந்தவருடைய முகம் தங்கள் முகம் போலத்தான் இருந்தது. ஏதாவது நான் தவறாகச் சொல்லி யிருந்தால் தயவு செய்து மன்னிக்க வேண்டும்."

நடுவில் குறுக்கிடாமல் இத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருந்த மதுராந்தகத் தேவருடைய நெற்றியில் வியர்வை துளிக்கலாயிற்று. அவருடைய முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது.

"நேற்று முதல் உண்மை சொல்லுகிறவனே! அந்த வீரர்களின் கூட்டத்தில் நீ இருந்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! சத்தியமாக இல்லை."

"பின் எப்படிக் கூட இருந்து பார்த்தது போலச் சொல்கிறாய்?"

"நான் கண்ட காட்சி உண்மையாக நடந்ததா அல்லது கனவிலே கண்டதா என்று எனக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. இன்னொரு காட்சியையும் கேளுங்கள். இருள் அடர்ந்த ஒரு நிலவறை. அதில் ஒரு சுரங்கப் பாதை. வளைந்து வளைந்து கீழே இறங்கி மேலே ஏறிப் போக வேண்டிய பாதை. அதன் வழியாக மூன்று பேர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் ஒருவன் தீவர்த்தி பிடித்துக் கொண்டு போனான். பின்னால் ஒருவன் காவல் புரிந்து கொண்டு வந்தான். நடுவில் ஒரு சுந்தர புருஷர்—வடிவத்தில் மன்மதனை யொத்த ராஜகுமாரர்—வந்து கொண்டிருந்தார். தீவர்த்தியின் வெளிச்சம் அந்த நிலவறையின் மூலை முடுக்குகளில் பரவிய போது, அங்கே யெல்லாம் பொன்னும் மணியும் வைடூரியங்களும் ஜொலிப்பது போலத் தோன்றியது. அது மன்னாதி மன்னர்களின் இரகசியப் பொக்கிஷங்களை வைக்கும் நிலவறையாக இருக்கலாம் என்று தோன்றியது. தூண்களில் கோரமான பூத வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அத்தகைய சுரங்க வழியில் வந்து கொண்டிருந்த மூன்று பேரிலே நடுவில் வந்த சுந்தர புருஷரின் முகம் தங்கள் திருமுகம் போலிருந்தது. அது உண்மையா, இல்

லையா என்பதைத் தாங்கள் தான் சொல்ல வேண்டும்...''

இளவரசர் மதுராந்தகர், ''போதும்; நிறுத்து!'' என்றார். அவருடைய குரலில் பீதி தொனித்தது.

வந்தியத்தேவன் சும்மா இருந்தான்.

''நீ நிமித்தக்காரனா?''

''இல்லை, ஐயா! அது என் தொழில் இல்லை. ஆனால் நடந்ததையும் சொல்லுவேன்; இனிமேல் நடக்கப் போவதையும் சொல்லுவேன்.''

மதுராந்தகர் சிறிது யோசித்து விட்டு ''குதிரை மேல் நின்ற போது ஏதோ கத்தினாயே, அது என்ன?'' என்று கேட்டார்.

''அபாயம் என்று கத்தினேன்.''

''யாருக்கு அபாயம்?''

''தங்களுக்குத்தான்!''

''என்ன அபாயம்?''

''பல அபாயங்கள் தங்களைச் சூழ்ந்

றைக் குறித்துச் சாவகாசமாகச் சொல்ல வேண்டும். என்னுடைய கத்தியைக் கூடத்தான் தங்கள் வீரர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டார்களே? தங்களுடன் என்னைக் கோட்டைக்குள் அழைத்துக் கொண்டு போனால்...''


''ஆகட்டும்; என்னுடன் வா! சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்!''

மதுராந்தகத் தேவர் தம்முடன் வந்த வீரர்களின் தலைவனைக் கை காட்டி அருகில் அழைத்தார். வந்தியத்தேவனைச் சுட்டிக் காட்டி அவனை அவர்களுடன் கோட்டைக்குள் அழைத்து வரும்படி கட்டளை யிட்டார். அந்தக் கட்டளை அவ்வீரர் தலைவனுக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. ஆயினும் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து வந்தியத்தேவனையும் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

சற்று நேரத்துக் கெல்லாம் பழையாறைக் கோட்டைக் கதவு திறந்தது.

மது

பேட்டி கிடைக்குமா ?



ராஜீனுமாவில் கையெழுத்துப் போடுவதற்காக அழைக்கப்பட்ட பேனு, பேட்டி கிடைக்காத சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறது.

சீர்குலைத்துப் பரிசளிக்கும் ஒரு தகாத செய்கையில், பணத்தைத் துஷ்பிரயோகம் செய்வது மாபெரும் குற்றமாகும்.

ஆகவே, இந்தப் போட்டியானது "ஒரு அர்த்த மற்ற அவமானச் சின்னம்" என்பதைத் தவிர இதற்கு 'அழகுப் போட்டி' என்னும் பெயர் கொடுப்பது கொஞ்சமும் பொருந்தாது.

பாரதப் பெண் குலத்துக்கு நேர்ந்த இந்தப் பகிரங்கமான அவமானத்தைக் கேட்டு என் உள்ளம் கொதிக்கிறது.

வேலூர்
17—3—52

சசிதேவி

*

வள்ளுவர் காட்டிய வழி !

எது அழகுப்போட்டி ! எந்த இலட்சணத்தை வைத்து நமது தேர்வாளர்கள் தேர்ந்தெடுத்தனர்! வெள்ளை மேனியிலும் வேற்று நாட்டான் நாக ரிகத்திலும் தானு அழகை உறுதிப்படுத்த முடியும்! அழகென்பது யாது என்று நம் நாட்டு அறிஞர்கள் எவ்வளவோ பேர் எழுதி வைத்துள்ளனர்.

கற்பல்லவோ பெண்களுக்குக் குறையாத அழகு!

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

என்று வள்ளுவப் பெருந்தகையும் வழி காட்டிப் போந்துள்ளார். அந்த உண்மை அழகை நன்ருக உணர்ந்த எத்தனையோ நம் சகோதரிகள் அவ லட்சணப் போட்டியில் கலந்து கொள்ள விரும்ப வில்லை. அதனுல் அவர்க ளெல்லாம் அழகில் குறைந்தவர்களாகக் கருதப்படலாமா !

பழனி
15—3—52

ஆ. காந்திமதி நாதன்

வியாதிக்கு மருந்து !

"கல்கி" இதழில் வெளியான "மனச் சோர்வு ஒரு பெரும் வியாதி" என்ற தலையங்கத் தில் கண்டுள்ள கூற்றை ஒப்புக் கொள்ளும் தமிழர்களுள் யானும் ஒருவன்.

'சம்சாரம்' போன்ற படத்தைக் கண்டவுடன் நம் நடுத்தர வகுப்பினருள் குறிப்பாகப் புது வாழ்க்கை புக விருக்கும் இளைஞர்கள் மனத்தில் மிகுந்த தளர்ச்சி உண்டாகிறது.

மக்கள் மனேபாவத்திற்குத் தகுந்த படங்கள் மாத்திரம் வெளியிடுதல் போதாது. மக்கள் வருங் கால வாழ்க்கையின் தன்னம்பிக்கையுடன் உயரிய குறிக்கோள் வகுக்க வழிகாட்டியான நல்ல படங் களையும் சித்திரித்தலே நல்லது.

மக்களின் மனேபாவம் மாறி வருகின்ற இந் நாளில் பணக்காரரை மண்டையிலடிப்பது, டாக் டர் குரல்வளையை நெரிப்பது போன்ற காட்சிகள் விரும்பத் தக்கதல்ல. மஞ்சுளாவின் கற்பின் நிலை ரத்தை வேறு எத்தனையோ சிறந்த வழிகளில் சித்திரித்து மக்களின் மனத்தில் மேற் கண்ட பயங்கரக் கொள்கை வேரூன்ற விடாதிருக்கலாம். எடுத்ததற்கெல்லாம் வசனங்களை எதுகை, மோனை யுடன் புகுத்தி மக்களை அனாவசியமாக உணர்ச்சி வசப்படுத்துவது மட்டும் போதாது. அத்தகைய வசனங்களும் படத்தாரும் சமுதாய வாழ்க்கை உயரவும், எத்தகைய கஷ்டம் வரினும் திண் மையுடன் எதிர்த்து வாழ்க்கையில் உழைப்பி னுலோ, யுக்தியினுலோ, உயரிய கொள்கையி னுலோ அல்லது விடா முயற்சியினுலோ வெற்றி பெறும் முறையில் வெளியிடுதல் சாலச் சிறந்தது. இதுவே சினிமா உலகம் வளரும் இந்நாளில் மக்க

ளுக்கு உண்மையில் செய்யும் சேவையாகும். 'மனச் சோர்வு' எனும் வியாதிக்கு மா மருந்துமாகும்.

திருநெல்வேலி
10—3—52 நா. இராமசுவாமி

★

அழிக்கப் பார்க்கிறார்கள்!

பழமையும், பதிவிரதா தர்மமும், பண்பும், பெருமையும் படைத்த இந்தப் புண்ணிய பூமியின் பெண்களுக்கு அவர்கள் அழகைப் பரிசோதிக்க ஒரு போட்டி நடத்தியிருப்பது மிகவும் மோசமான செய்கையாகும்.

இந்தப் போட்டியை ஒரு சாதனமாக வைத்துக் கொண்டு தங்கள் வியாபாரத்தை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காகப் பரிசுகளின் மூலம் பெண்களுக்கு ஆசை காட்டி அவர்களுடைய அச்சம், மடம், நாணம் முதலிய பாரத நாட்டின் பெண் குலப் பண்புகளை அழிக்கப் பார்க்கிறார்கள்.

உடுமலைப் பேட்டை
17—3—52 ஆர். ராமரத்தினம்

★

என்ன செய்யும்?

சென்ற மாசி மாதம் 24உ 'கல்கி'யில் வெளியான "மனிதன் எப்படி உயர்கிறான்!" என்ற கட்டுரையை இங்குள்ள மக்களனைவரும் படித்து, அக் கட்டுரைக்கு மனம் உவந்து ஆதரவளித்தனர்.

கஷ்டத்தையும் துன்பத்தையும் அதிர்ஷ்டத்தால் வெல்லலாம் என்பதை விடுத்து, அவற்றை விடா முயற்சியால் வெல்லலாம் என்பதை நமது தமிழ்ப் படங்கள் இனிமேலாவது எடுத்துக் காட்டுமா! அல்லது, தொட்டுத் தாலி கட்டின துணைவியையும், பெற்ற பிள்ளைகளையும் கஷ்டத்திலும், துன்பத்திலும் நடுத் தெருவில் விட்டுச் செல்லும் மார்க்கத்தையே இனியும் போதிக்குமா!

இலங்கை
2—3—52 அ. சின்னையா

★

ஓர் உதாரணம்

சென்ற வாரத்துக் 'கல்கி'யில் 'அலலட்சணப் போட்டி' என்ற தலைப்புள்ள தலையங்கம் படித்து நானும் என் நண்பர்களும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தோம். சென்னையில் லட்சக் கணக்காக அழகிய மங்கைகள் இருக்க இந்த அலலட்சணப் போட்டியில் மிக்க குறைவான மங்கையர்களே கலந்து கொண்டார்கள். போட்டியில் கலந்துகொள்ளாத இதர மங்கைகளுக்குச் சென்னை மாகாணமே சபாஷ் சொல்வதுடன் அவர்களைக் குறித்துப் பெருமைப்படுகிறது. மேல்நாட்டு நாகரிகம் எவ்வளவு தூரம் நம் நாட்டிலும் பரவி மக்களை ஆட்டி வைக்கின்றதென்பதற்கு இப்போட்டி ஓர் உதாரணமாகும். ஆரம்பத்திலேயே இந்த அநாகரிகப் போட்டி முளையிலேயே கிள்ளி எறியப் பட்டுவிட்டதைப் பற்றி நம்மில் ஒவ்வொருவரும் சந்தோஷப்பட வேண்டும்.

மதுரை
15—3—52 ஏ. பி. வரதன்

★

புத்துணர்ச்சி

சென்ற 9—3—52 "கல்கி" இதழில் காங்கிரஸ் முன்னணிப்படை என்ற தலையங்கத்தைக் கண்டு புத்துணர்ச்சி பெற்ற பல தேசத் தொண்டர்களில் நானும் ஒருவன்.

அதோடு தஞ்சை ஜில்லாவுக்கென்று தனி யோசனையும் கூறியுள்ளீர்கள். அவைகளெல்லாம் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் அன்பர்களின் மனதில் பதியுமா என்று கவலையுறுகிறேன். ஜில்லாவின் நன்மையைக் குறித்து உங்கள் யோசனையை ஏற்று நடத்த உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகான் அருள்புரிவாராக.

"காங்கிரஸ் முன்னணிப் படை"யை எங்கள் நன்னிலம் தாலுகாவில் அமைக்க முயற்சி எடுத்துக் கொள்கிறேன். அவ்வாறே ஒவ்வொரு தாலுகா காங்கிரஸ் ஊழியர்களும் முயற்சி செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

வீதிவிடங்கன்
10—3—52 மு. மா. கிருஷ்ணசாமி

★

மகத்தான உண்மை!

மார்ச் 9உ "கல்கி" இதழ் வட்டமேஜையில் 'ஹிந்திப் படமா!' என்ற தலைப்பில் பிரசுரிக்கப் பட்டிருந்த ஸ்ரீமதி விஜயா ஸ்ரீனிவாசன் கடிதத்தைக் கண்டு வியந்தேன்.

அவரது சவுக்கடிக்குப் பாத்திரமாகும்படி அவாரா படம் அருவருக்கத் தக்கதாயில்லை. அந்தக் கதையை எழுதிய ஜனாப் அப்பாஸ் சிறந்த எழுத்தாளர். அவர் கதையின் போக்கும் முடிவும் மனித மனோபாவத்திற்கு ஒத்ததாக உள்ளன.

நவ இந்தியாவின் நவயுவர்களும், அதிகாரிகளும் பெரும்பாலும் "ஸூட்"டில் இருக்கும்பொழுது அந்தச் சமூகத்தைப் பற்றிய சித்திரத்தில் சங்கு சக்கரமும் கிரீடமும் வருமா!

"நாம் மேற்கத்திய முறைகளிலும் உடைகளிலும் மோகம் கொண்டிருக்கிறோம்" என்ற மகத்தான உண்மையை மேல் நாட்டுக் கலைஞர்கள் சென்னை, சௌபாத்தி கடற்கரைகளில் கட்டாயம் பார்த்திருப்பார்கள். இதற்கு "அவாரா" என்ற ஹிந்திப் படம் என்ன செய்யும்!

லால்குடி
9—3—52 எல். எஸ். பார்த்தசாரதி

பாரதி காட்டிய பாதை

கட்டுரைப் பரிசுப் போட்டி

● ● ●

விவரங்கள் அடுத்த இதழில் எதிர்பார்க்கவும்.

எல்லா வீட்டிற்கும் உகந்த

ஊறுகாய்



டி.எஸ்.ஆர்
ஊறுகாய்

கைதேர்ந்தவர்களால் சிறந்த முறையில் கைபடாமல் தயாரிக்கப் பட்டு அழகிய ஸீல் வைத்த பாட்டில்களில் விற்கப்படுகிறது.





ஒவ்வொருவர் ருசிக்கும் தகுந்த பல விதங்கள்:

பல காய்கறி ஊறுகாய்
எலுமிச்சை ஊறுகாய்
மாங்காய் ஊறுகாய்
முதலியவை.


இந்த மார்க்கைப் பார்த்து வாங்கவும்

டி.எஸ்.ஆர் & கோ., கும்பகோணம்

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஸ்வராஜ் ஏஜென்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோட்
திருவல்லிக்கேணி, மதராஸ்.

கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜெண்டு:
B. பாலபட்டாபி, (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)
கோயமுத்தூர்

போனோமின்ட்
பேதியாகும் ச்யூயிங் கம்



போனோமின்ட் மலச்சிக்கலை விரைவில் ஒழிக்கிறது. மலச்சிக்கலின் விளைவாகிய தலைவலி, ஆலசியம், களைப்பு முதலிய உபாதைகளுக்கு இதை உட்கொள்ளுவது நலம். போனோமின்ட் பேதியாகும் ச்யூயிங்கம்மையே கோரவும்.

2, 6, 16 வில்லைகள் கொண்ட பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

ஏஜெண்டுகள் :

ஓரியண்டல் மெர்கண்டைல் ஏஜென்ஸி, 99-A, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

SISTAS: WL 8

B. I. S. N. கம்பெனி லிமிடெட்

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை	புறப்படும்	தேதி	—	1952 ஏப்ரல் 2உ
நாகப்பட்டினம்	புறப்படும்	தேதி	—	1952 ஏப்ரல் 3உ

கப்பல் புறப்படும் தேதி காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்படமாட்டா.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

சென்னையிலிருந்து 2-4-52: பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 10 மணிக்கும் ஏனையோர் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

நாகப்பட்டினத்திலிருந்து 3-4-52: பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும் ஏனையோர் டிக்கெட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 2-4-52 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி, விரும்பத்தக்க எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பரார்த்திக அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இன்ஜெக்ஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லுபடியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்	முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

அரசிகள் வளருகின்றனர்

ரா. கி.

"பல நண்பர்களும் விரோதிகளும் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் மிக மிக என்னை வற்புறுத்துகிறபடியால் சென்னைக் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடத் தீர்மானித்துவிட்டேன். இனி முன் வைத்த காலைப் பின் வாங்கப் போவதில்லை. பத்து வந்தாலும் சரிதான்; இரண்டு போனாலும் சரிதான்!" என்ற தோரணையில் சில அறிக்கைகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால் இப்படிப் பல தேசபக்தர்களையும் அரசியல் வாதிகளையும் அவர்களுடைய நண்பர்களும் விரோதிகளும் வெகுவாக வற்புறுத்தினார்கள். "சென்னைச் சட்ட சபைக்கு நில்லுங்கள்; இல்லாவிட்டால் இந்திய பார்லிமெண்டுக்காவது நில்லுங்கள்; அதுவும் இஷ்டமில்லாவிட்டால் ஜனாதிபதி ஸ்தானத்துக்காவது நில்லுங்கள்; அதெல்லாம் ஒன்றும் இயலாவிட்டால், சற்றே சந்நியிலாவது நில்லுங்கள்!" என்று தூண்டித் துளைத்து வற்புறுத்தினார்கள்.

அத்தகைய வற்புறுத்தலுக்கு இணங்கி, அநேகர் காங்கிரஸ் அபேட்சகர்களாவதற்கு ஐந்நூறு ரூபாய் அல்லது ஆயிரம் ரூபாய் கட்டணப் பணத்துடன் விண்ணப்பம் போட்டார்கள். இவர்களிலே பலருக்குக் காங்கிரஸ் பொறுக்குக் கமிட்டியார் நாமம் போட்டு விட்டார்கள். மற்றும் சிலருக்கு வோட்டர்கள் பட்டை நாமத்தைச் சாத்தி விட்டார்கள்.

இந்தத் தொல்லைகளி லெல்லாம் அகப்பட்டுக் கொள்ளாத தமிழ் நாட்டுத் தேசபக்தர்களில் ஒருவர் சர்தார் ஏ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள். இவர் பழைய சென்னைச் சட்டசபையில் அங்கத்தினரா யிருப்பவர். கூட்டத்துக்கே வராத தண்டச் சம்பள அங்கத்தினர் அல்ல; பேசா மடந்தை அங்கத்தினருமல்ல: தூங்கு மூஞ்சி அங்கத்தினருமல்ல. மிக மிக விழிப்புடனிருந்து முக்கியமான விவாதங்களி லெல்லாம் கலந்து கொண்டு மக்களின் தேவைகளை எடுத்துச் சொன்னவர். சென்ற ஐந்து வருஷத்துச் சென்னைச் சட்டசபையின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தெரியும். ஒரு சட்டசபைக் கூட்டத்துக்காவது சர்தார் ஏ. வேதரத்தினம் ஆஜராகாம லிருந்தது கிடையாது. எந்த முக்கியமான விவாதத்திலும் கலந்து கொள்ளாம லிருந்தது கிடையாது. வட நாட்டுக்குச் சர்வோதயக் கூட்டம் முதலிய முக்கிய காரியங்களுக்குப் போயிருந்த நாட்களைத் தவிர மற்றப்படி சட்டசபை கூடிய எல்லாத் தினங்களிலும் அவர் ஆஜராயிருந்தவர். சர்க்காரைக் கண்ணை மூடிக்கொண்டு அவர் ஆதரித்ததுமில்லை; அகாரணமாக எதிர்த்துத் தாக்கியது மில்லை. சென்னை மாகாண மக்களின் மொத்தமான நலன்களுக்காக ஓயாது போராடி யிருக்கிறார். அவர் எந்த ஜில்லாத் தொகுதியிலிருந்து வந்தாரோ, அந்த ஜில்லாப் பொது மக்களின் கட்சியைச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்.

சர்தார் வேதரத்தினம் தேசத் தொண்டுக்கே தம்மை அர்ப்பணம் செய்தவர்; சென்னைச் சட்டசபை அங்கத்தினரா யிருக்கப் பரிபூரணத் தகுதி வாய்ந்தவர்; ஹிந்தி நன்கு பயின்றவரானபடியால் இந்தியப் பார்லிமெண்டு அங்கத்தினராவதற்கும் யோக்யதை உடையவர்.

அத்தகையவரை இந்தப் பொதுத் தேர்தலில் அபேட்சகராக நிற்கும்படி பல நண்பர்கள் உண்மையிலேயே வற்புறுத்தத்தான் செய்தார்கள். ஜில்லாப் பிரமுகர்கள் வற்புறுத்தினார்கள். மாகாணத் தலைவர்களும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆயினும் சர்தார் ஏ. வேதரத்தினம் மறுத்து விட்டார். அவர் இப்படி மறுத்ததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று சென்னை மாகாண காங்கிரஸ் நிர்வாகத்தில் கோஷ்டிப் பூசல்கள் வளர்ந்து விட்டதைக் கண்டு அவருக்கு ஏற்பட்டிருந்த வருத்தம்.

மற்றொரு முக்கியமான காரணம் காந்தி மகானின் நிர்மாண திட்டங்களில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் உள்ள மகிழ்ச்சியை அவர் பூரணமாய் அறிந்திருந்ததேயாகும். ஸ்ரீ விநோபா பாவே ஏன் தேர்தலுக்கு நிற்கவில்லை? அதே காரணத்தினால் ஸ்ரீ வேதரத்தினமும் தேர்தலுக்கு நிற்கவில்லை யென்று சொல்லுவது மிகையாகாது.

"தில்லை வெளியிலே கலந்துவிட்டால் அவர்
திரும்பவும் வருவாரோ?"


என்ற பாடலில் குறிப்பிட்ட ஆத்மானந்த அநுபவத்தை அவர் காந்தி மகானின் நிர்மாண வேலைகளில் அடைந்து விட்டார். அதனால் திரும்பவும் அரசியல் சேற்றில் காலை வைக்க விரும்பவில்லை.

சில மாதங்களுக்கு முன்னுலென்றால், மேற்கூறிய இரண்டாவது காரணத்தை என்னால் அறிந்திருக்க முடியாது; யாராவது சொல்லியிருந்தாலும் நம்பி யிருக்க முடியாது.

ஆனால் பொதுத் தேர்தலுக்குக் கொஞ்ச காலத்துக்கு முன்புதான் வேதாரண்யம் போய் வந்த

குருகுலத்தின் பிரதான வாசலில் விருந்தினரை வரவேற்கப் பெண் குழந்தைகள் அணிவகுத்து நிற்கின்றனர்.





குருகுலத்துப் பெண் குழந்தைகள் கொடி வணக்கம் செய்வதற்காக வருகிறார்கள்.

படியால் அதை அறிந்து கொள்ளவும் பாராட்டவும் இயலுவதாயிற்று.

வேதாரண்யத்துக்கு மிக அருகில் மகாராஜபுரம் என்று ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. அதில் அன்னை கஸ்தூரிபாவின் புனிதமான திருநாமத்துடன் விளங்கும் கன்யா குருகுலம் சென்ற ஆறு ஆண்டுகளாக நடந்து வருகின்றது. கவர்னர் பவநகர் மகாராஜா முதல், மந்திரிமார்கள், காங்கிரஸ் பிரமுகர்கள், நிர்மாணத் தொண்டர்கள் பலர் அந்த அருமையான ஸ்தாபனத்துக்குச் சென்று பார்வையிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

சென்ற வருஷத்திலேதான் எனக்கு அந்தப் பாக்கியம் கிடைத்தது. கிடைத்தபோது ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகக் கிடைத்தது. ஒரு முறை திடும் பிரவேசமாகக் கோடிக்கரை பார்க்கப்போன இடத்தில் கன்யா குருகுலத்தையும் பார்த்து விட்டு வந்தேன். இன்னொரு முறை கன்யா குருகுலத்தின் ஆண்டு விழா நடந்த சந்தர்ப்பத்தில் போயிருந்தேன்.

குருகுலத்தில் பிரவேசிக்கும்போதே ஒரு புதிய புனிதமான உலகத்தில் பிரவேசிக்கிறோம் என்னும் உணர்ச்சி உண்டாகிறது. குருகுலத்தின் பிரதான வாசலுக்குப் பசுங் கொடிகள் படர்ந்த இயற்கைப் பந்தல் அழகு தருகிறது. அதன் அடியில் ஒரே விதமாக உடை அணிந்த பெண் குழந்தைகள் வரிசையாக நின்று வரவேற்பு அளிக்கின்றனர்.

உள்ளே சென்றால், பத்து ஏக்கரா நிலத்தில் இனிய இயற்கைக் காட்சிகளிடையே அமைந்திருக்கும் பல்வேறு ஆசிரமக் கட்டிடங்கள், பழைய பாரத நாட்டில் கண்வ ரிஷி ஆசிரமம் சரபங்கரின் ஆசிரமம், பரத்வாஜர் ஆசிரமம், முதலியவை குறித்து இதிகாசங்களில் படிக்கிறோமே, அவற்றை ஞாபகப்படுத்துகின்றன.

விருந்தினருக்கென்று ஒரு கூரைக் கட்டிடம் குருகுலத்தின் முகப்பிலேயே இருக்கிறது. அதைப் பார்த்தால் கூரைக் கட்டிடம் இவ்வளவு கலை அழகு பொருந்தியதாய் அமைக்கலாம், இவ்வளவு தூய்மையாக வைத்திருக்கலாம் என்பதற்கு உதாரணம் இது என்று தோன்றும்.

அதன் சுத்தமான தரையில் போட்டிருக்கும் விதவிதமான கோலங்கள் அழகுக்கு அழகு செய்வதாயிருக்கும்.

வேதாரண்யப் பிரதேசம் தஞ்சை ஜில்லாவில் அவ்வளவு இயற்கை வளம் பொருந்திய பிரதேசமன்று. ஆயினும் குருகுலத்தின் தோற்றம் சோழ நாட்டின் இயற்கை வளத்தை நினைவூட்டுகிறது. தென்னை, வாழை, சோளம், கறிகாய்கள், மலர் தரும் மரங்கள் முதலியவை பரவலாகக் காணப்படுகின்றன. இவ்வளவுடன் சிறிய தாமரைக்குளம் ஒன்று இருக்கிறது. அதில் தாமரை மலர்களும் இருக்கின்றன. குருகுலத்துக்கும் ஆசிரமத்துக்கும் தகுந்த சூழ்நிலை இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்க முடியும்!

மூன்று வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் உள்ள சுமார் 150 பெண் குழந்தைகள் இந்தக் குருகுலத்தில் காந்தி மகானுக்கு உகந்த ஆதாரக் கல்வி முறையில் படித்து வருகிறார்கள். இவர்களில் பலர் அனாதைக் குழந்தைகள். நூறு குழந்தைகளுக்கு மேலே ஆசிரமத்திலேயே உணவும் உடையும் பெற்று அங்கேயே வசித்து வருகிறார்கள். இவர்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்ள ஏழெட்டு ஆசிரியைமார்கள் குருகுலத்திலேயே இருக்கிறார்கள்.

இவர்கள் குழந்தைகளுக்கு அளிக்கும் ஆதாரக் கல்வி வெறும் போலிப் பேச்சு அல்லவென்பதற்கு ஓர் அத்தாட்சியை நேரில் கண்டோம். ஆண்டு விழாவுக்காக வெளியூர்களிலிருந்து சுமார் நூறு

பேர் வந்திருந்தார்கள். அவ்வளவு பேருக்கும் ஆசிரியைமார்களே சமையல் செய்து பரிமாறும் தொண்டும் செய்தார்கள். வெளியிலிருந்து பரிசாரகர்கள் தருவிக்கப்படவில்லை.

குருகுலத்துக்குத் தேவையான காய்கறிகள் எல்லாம் அங்கேயே பயிராகின்றன. குழந்தைகளின் குஞ்சுக் கைகளே பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கின்றன. மற்றும் நூற்றல், நெசவு முதலிய தொழில்களும் வயதுக் கிரமப்படி பயில்கிறார்கள். தொழில்களின் மூலமாகவே கல்வியறிவும் பெறுகிறார்கள்.

முதல் தடவை குருகுலத்துக்கு நான் சென்றிருந்தபோது, குழந்தைகள் என்னைத் திணறித் திண்டாடும்படி செய்து விட்டதை இங்கே குறிப்பிட வேண்டும். குழந்தைகளையெல்லாம் ஓரிடத்தில் சேர்த்து வைத்து விட்டு என்னை அங்கே அழைத்துச் சென்றார்கள். வழக்கம் போல் என்னை அவர்களுக்குப் பிரசங்கம் செய்யச் சொல்லுவார்கள் என்று எண்ணினேன். இந்தச் சிறிய குழந்தைகளுக்கு என்ன விஷயத்தைப் பற்றிச் சொல்வது, என்னத்தைச் சொன்னால் இவர்களுக்குப் புரியப் போகிறது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்தக் கவலை ஆரம்பத்திலேயே தீர்ந்து விட்டது. ஏனெனில், என்னைப் பிரசங்கம் செய்யும்படி யாரும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாகக் குழந்தைகளைப் பார்த்து "இவர்தான் கல்கி ஆசிரியர்; உங்களுக்கு ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்" என்று சொன்னார்கள். ஒரு சின்னஞ்சிறு குழந்தை எழுந்து "அண்ணா! உங்கள் பத்திரிகையில் நீங்கள் ஏன் ஆதாரக் கல்வியை எதிர்த்து எழுதுகிறீர்கள்!" என்று கேட்டதும், எனக்கு எப்படித் தூக்கி வாரிப் போட்டிருக்கும் என்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

உண்மையில் நான் காந்தி மகானுடைய முக்கிய திட்டங்களில் ஒன்றான ஆதாரக் கல்வியை எதிர்க்கவில்லை. வெறும் ஏட்டுக் கல்வியினால் நமது நாடு அடைந்து வரும் கஷ்டத்தைப் பற்றிப் பல காலமாக எழுதி வந்திருக்கிறேன். கைத்தொழில்களை ஆதாரமாகக் கொண்ட கல்வி முறையினாலேயே இத்தேச மக்கள் முன்னேற்றமடைய முடியும் என்பதில் யாதொரு சந்தேகமில்லை.

எதை நான் எதிர்த்து எழுதினேன் என்றால், ஆதாரக் கல்வியின் பெயரால் சென்னை சர்க்கார் லட்சக்கணக்கான பணத்தை விரயமாக்கத் தொடங்கிய பயனற்ற திட்டத்தை எதிர்த்தேன். ஆதாரக்கல்வி முறையை அமுலில் நடத்துவதற்கு அம்முறையில் பரிபூரண நம்பிக்கை கொண்டவர்களும் அதற்கென்று பல வருஷம் பயிற்சி பெற்றவர்களும் வேண்டும். பழைய ஏட்டுக் கல்வி முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியன்மார்களுக்கு ஆதாரக் கல்வியில் ஆறு மாதம் பயிற்சி அளித்துவிட்டு இம்மாகாணத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும் ஆதாரக் கல்வி முறைப் பள்ளிக்கூடங்களாக்கி விடுகிறோம் என்று ஆரம்பித்தனர் சென்னை அரசாங்கத்தினர். அது பயனற்ற காரியம் என்றும் வீண் பணவிரயத்தைத் தவிர வேறு பலன் விளையாது என்றும் வற்புறுத்தினேன். சர்தார் வேதரத்தினம் போல் காந்தியத்தில் முழுக்க முழுக்க முழுகித் திளைத்தவருடைய மேற்பார்வையில் ஆதாரக் கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பத்தில் நடக்க வேண்டும். அவற்றின் அநுபவத்தைக் கொண்டு மற்ற இடங்களில் சிறிது சிறிதாக அம்முறை பரவ வேண்டும். அப்படிக்கின்றி, நம்பிக்கையில்லாதவர்களுக்கு ஆறு மாதப் பயிற்சி அளித்து விட்டு, ஆதாரக் கல்வி போதியுங்கள் என்று குழந்தைகளை அவர்களிடம் ஒப்புவிப்பது ஆதாரக் கல்வி முறையையே நகைப்புக்கு இடம் ஆக்குவதாகும்.

இவ்வளவு விஷயங்களையும் அந்தச் சிறிய குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்ல முடியுமா! முடியாது. ஆகவே, "அம்மா! குழந்தை! ஆதாரக் கல்வி முறையை நான் எதிர்த்திருக்கும் பட்சத்தில் இதோ இந்தக் கணத்திலேயே வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்" என்று வெற்றிகரமாகப் பின் வாங்கினேன். அவர்கள் இந்தப் புண்ணிய பாரத நாட்டை வருங்காலத்தில் ஆளப் போகும் அரசிகள் அல்லவா! அவர்களிடம் பின் வாங்காமல் வேறு என்ன செய்வது!

பிறகு குழந்தைகளை நான் சில கேள்விகள் கேட்டு, அவர்கள் எவ்வளவு அறிவு விசாலம் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

ஆண்டு விழாவுக்குப் போயிருந்த போது அக்குழந்தைகள் பெற்றிருந்த கலைத் திறனையும் ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது. கதம்ப நிகழ்ச்சி ஒன்று ஏற்படுத்தியிருந்தார்கள். அதில் நாடகம், நடனம், பிரசங்கம், பாட்டு எல்லாம் இடம் பெற்றிருந்தன. முக்கியமாக, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களுக்குக் குழந்தைகள் நடத்திக் காட்டிய அபிநய நாடகம் அவர்கள் பாடல்களை எவ்வளவு நன்றாக அநுபவித்துப் பொருளும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாயிருந்தது.

* * *

குருகுலம் அமைந்திருக்கும் இடமாகிய பத்து ஏக்கரா நிலமும் சர்தார் வேதரத்தினத்தின் நன்கொடை என்று அறிந்தேன். அதுமட்டுமல்ல. குருகுலம் ஆரம்பித்து இப்போது ஆறு வருஷங்கள் ஆகின்றன. அரசாங்கத்தாரிடம் உதவி பெறுவது இலேசில் ஆகிற காரியமாயில்லை. குழந்தைகளோ மள மள வென்று வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள். "அதிக குழந்தைகளைச் சேர்க்க வேண்டாம்; ஐம்பதுடன் நிறுத்தவும்; அறுபதுடன் நிறுத்தவும்" என்று நண்பர்கள் யோசனை சொன்னார்கள். சர்தாரால் அப்படி நிறுத்த இயலவில்லை. நண்பர்கள் பலர் உதவியும்

குழந்தைகளின் 'நூற்பு யக்ஞம்'



செய்தார்கள் ; போதவில்லை. எனவே, சர்தார் வேதரத்தினம் தம் சொந்தப் பொருளிலிருந்து மாதம் ஆயிரம் ரூபாய் வரையில் சிலகாலம் செலவு செய்ய வேண்டி நேர்ந்தது. அப்படி அவர் பெரிய செல்வர் அல்ல. சொத்து

இன்னும் முக்கியமான வேலை ஒன்றும் நடைபெறுகிறது. வேதாரண்யத்திலும் சுற்றுப் புறத்திலும் நெல் குத்தும் ஆலை கிடையாது. கைக்குத்து அரிசிதான் எல்லாரும் சாப்பிட்டாக வேண்

தஞ்சாவூர், செங்கிப்பட்டி

மகாத்மா காந்தி ஞாபகார்த்த க்ஷயரோக சானடோரியம்

நிதிக்காக



ஸ்ரீமதி

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

பக்க வாத்தியங்கள் :

ஸ்ரீ ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி — வயலின்

தஞ்சாவூர் ஸ்ரீ டி. கே. மூர்த்தி — மிருதங்கம்

ஆலங்குடி ஸ்ரீ ராமசந்திரன் - கடம்

o*o

ஞாயிறு 6-4-52 மாலை 5-30 மணிக்கு

யாகப்பா டாக்கீஸ், தஞ்சாவூர்

மைக், ஒலி பெருக்கி ஏற்பாடு: அஸோஸியேடட் ரேடியோ ஏஜன்ஸிஸ், திருச்சிராப்பள்ளி

புதிய இசைத்தட்டுகள்!



எம்.எஸ். அனுராதா

N. 95021

நம் தேசம்
பாரில் தொழிலாளர்



டி. ஏ. மோதி

N. 95023

மேதினிக்குபகாரம்
2 – பாகங்கள்



டி.எம்.சௌந்தரராஜன்

N. 95022

ஏதேதோ பேசுரார்
தத்தி மித்தி யென



வேதாரண்யம்
ஜி. வேதமூர்த்தி பிள்ளை
நாதஸ்வரம்

N. 95032


ராகம் - தானம் - பல்லவி (கல்யாணி)
பல்லவி - ராகமாலிகை

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா — பம்பாய் — மதராஸ் — டில்லி






மதராஸ் ஆபீஸ்:

5/149, பிராட்வே

ஜி. டி., மதராஸ்



தேவராஜன்

2. தேவராஜனின் அதிர்ஷ்டம்

தேவராஜன் வெகுதூரம் பிரயாணம் செய்யவேண்டி யிருந்தது. அரசாங்கத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளும் அவனுடன் பிரயாணம் செய்தனர். இப்படி ஒரு வாரம் பிரயாணம் செய்தபின் அவர்கள் ஒரு மாந் தோப்புக்கு வந்தனர். அந்த மாந்தோப்பில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. அந்த மரத் தின் அடியில் எல்லோரும் தங்கி இளைப் பாறினர்.

அப்பொழுது அவர்கள் தேவராஜன் எய்த அம்பு அந்தப் பெரிய மாமரத்தின் அடிமரத் தில் தைத்துக்கொண் டிருப்பதைப் பார்த்த னர். தேவராஜன் அந்த அம்பைத் தன் முழு பலத்தையும் செலுத்தி இழுத்தான். அது அவன் கையோடு வந்துவிட்டது. அந்த அம்பில் செதுக்கியிருந்த தேவராஜனின் பெயரைப் பார்த்து அது அவனுடைய அம்பு தான் என்பதை நிச்சயம் செய்தனர். அந்த அம்பு தைத்திருந்த இடத்துக்கு அருகில் ஒரு பொந்து இருந்தது. அந்தப் பொந்தில் ஒரு கிளி இருந்தது. அரசன் உத்தரவுப்படி அந் தக் கிளியை தேவராஜன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று எல்லோரும் தீர்மானம் செய்தனர். பிறகு எல்லோரும் அந்தக் கிளியையும் பிடித்துக்கொண்டு விஜய நகரத்தை நோக்கிப் பயணம் ஆனார்கள்.

தேவராஜன் விஜயநகரத்துக்கு வந்ததும் யாரையும் நிமிர்ந்து பார்த்து அவனால் பேச முடியவில்லை. கிளியை மனைவியாக அழைத் துக்கொண்டு வந்திருக்கிறேன் என்று அவன் எப்படி எல்லோரிடமும் சொல்லுவான்?

தேவராஜனுடைய அம்பு எங்கே கிடைத் தது? அந்த இடத்தில் எந்தப் பெண்மணி யிருந்தாள்? எந்த தேசத்துப் பெண்மணிக்கு அவனை மணந்துகொள்ளும் பாக்கியம் கிடைத்தது என்றெல்லாம் அறிந்துகொள் ளும் ஆவலோடு நகரத்து மக்களெல்லோரும் அரண்மனை வாசலுக்கு அருகில் வந்து கூடிவிட்டனர்.

அரசனுக்கு தேவராஜன் ஒரு கிளியுடன் திரும்பிவந்த சேதி, ஒரு தூதன் மூலம் எட்டியது. அரசன் அதற்காக வருத்தப்பட வில்லை. இப்படி ஏதாவது நடக்கவேண்டும் என்றுதானே அவன் விரும்பினான்?

தேவராஜனுக்கு அரண்மனைக்குள் அந்தக் கிளியுடன் நுழைவதற்கே வெட்கமா யிருந் தது. அரசனிடம் போய் மௌனமாக நின்றான்.

அரசன் அவனைப் பார்த்து, "தேவராஜா, வா! நான் எல்லாச் சமாசாரங்களையும் தெரிந்து கொண்டேன். நான் முதலிலேயே சொன்னபடி அம்பு எந்தப் பெண்மணியிடம் செல்லுகிறதோ அந்தப் பெண்ணை மணந்து கொள்ள வேண்டியதுதான். உன் அம்பு கிளிப் பெண்ணிடம் சென்றிருக்கிறது. அப் பொழுது அந்தக் கிளியைத்தான் நீ மணந்து கொள்ள வேண்டும்!" என்றான்.

தேவராஜன் ஒன்றும் பதிலே பேசவில்லை. மறுநாள் அரண்மனையில் மிகவும் சிறப்பாக ராஜகுமாரர்களுக்கு விவாகம் நடந்தது. தேவ ராஜன் மிகவும் மனவருத்தத்துடன் அந்தக் கிளியின் கழுத்தில் மாலையிட்டான். பிறகு அந்தக் கிளியை ஒரு தங்கக் கூண்டில் விட்டுத் தன் மாளிகைக்கு எடுத்துச் சென்றான். அதற் குப் பிறகு அவன் அரண்மனைப் பக்கமே வரு வதில்லை. ராஜகுமாரர்களோடும் எப்போ தும் போல் பழகுவ தில்லை.

அரசன், தேவராஜனை எப்படியாவது அவ மானப்படுத்தித் துரத்த எண்ணி, அரண் மனைக்கு அவனை வரவழைத்தான். அவன் வருவதற்கு முன்பே கருணாகரனும் பிரபா கரனும் அங்கு வந்திருந்தனர்.

"குமாரர்களே, நீங்கள் உங்கள் தேவிமார் களுடன் நாளைய தினம் இரவு அரண்மனையில் நடக்கும் விருந்துக்கு வந்து சேரவேண்டும்!" என்று அரசன் சொன்னான். பிரபாகரனும் கருணாகரனும் சந்தோஷத்தோடு சம்மதித் தனர். தேவராஜன் மட்டும் பதில் பேசாமல் எழுந்து நின்றான்.

அரசன் அவனைப் பார்த்து, "தேவராஜா, என்ன யோசனை செய்கிறாய்? நீயும் உன்

கிளி ராணியை அழைத்துக் கொண்டு வந்து சேர். இது அரசனின் கட்டளை!'' என்று கடுமையாகக் கூறினான்.

தேவராஜன் ஒன்றும் பேசாமல் தன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான்.



''இளவரசே என் சோர்ந்திருக்கிறீர்கள்? என்னிடம் சொல்லக்கூடாதா?'' என்று கூண்டிலிருந்த கிளி கேட்டதும் தேவராஜனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''உன்னிடம் என்னத்தைச் சொல்லுவது? உன்னால்தானே எனக்கு எல்லாக் கஷ்டங்களும் நேர்ந்தன? போதாக் குறைக்கு இப்பொழுது புதிய அவமானமும் சேர்ந்து கொண்டது...'' என்று தேவராஜன் ஆத்திரத்தோடு சொன்னான்.

உடனே கிளி, ''இளவரசே, நீங்கள் ஒன்றுக்கும் வருத்தப்பட வேண்டாம். 'அரசன், அரண்மனையில் நடக்கும் விருந்துக்கு அழைத்திருக்கிறானே, அங்கே எப்படி இந்தக் கிளியை அழைத்துக் கொண்டு போய் என் மனைவி என்று சொல்லிக் கொள்வது?' என்று கஷ்டப்படுகிறீர்கள். இல்லையா? நீங்கள் வருத்தப்பட வேண்டாம். அரண்மனையிலிருந்து பல்லக்கு வந்ததும் அதில் நான் ஏறிக் கொள்கிறேன். நீங்கள் குதிரையில் ஏறிக் கொண்டு முன்னால் போங்கள். உங்களுக்கு அவமானம் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு. நீங்கள் என் வார்த்தையில் நம்பிக்கை வைத்து நிம்மதியாக இருங்கள்!'' என்றது.

தேவராஜனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'அரண்மனையில் நடந்த விஷயம் இந்தக் கிளிக்கு எப்படித் தெரிந்தது? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இது சொல்லுகிறபடியே நடப்போம். என்ன நேர்ந்தாலும் சரி!' என்று தீர்மானித்துக்கொண்டு நிம்மதியாயிருந்தான்.

மறுநாள் அரண்மனையிலிருந்து தேவராஜனின் மாளிகைக்கு மூடு பல்லக்கு வந்தது. அதில் கிளியை ஏற்றி விட்டு, அவன் குதிரையில் ஏறிக் கொண்டு அரண்மனையை அடைந்தான். சில நிமிஷங்களில் பல்லக்கும் வந்து சேர்ந்தது. மற்ற ராஜகுமாரர்களின் மனைவிமார்கள் ஆடையாபரண அலங்காரங்களுடன் பல்லக்கிலிருந்து இறங்கி அழகு நடை நடந்து அரண்மனைக்குள் சென்றனர்.

தேவராஜனின் கிளி பல்லக்கிலிருந்து இறங்கும் காட்சியைப் பார்ப்பதற்காக, கருணாகரனும் பிரபாகரனும் அரசனும் ராணியும் மற்றுமுள்ள அந்தப்புரத்து ஸ்திரீகளும் ஆவலோடு மாளிகை வாசலில் காத்திருந்தனர்.

அடாடா! அவர்கள் எல்லோரும் அடைந்த ஏமாற்றத்தை என்னவென்று சொல்லுவது! அந்த மூடு பல்லக்கிலிருந்து திரையை விலக்கிக் கொண்டு கிளி இறங்கவில்லை. ஆனால் இணையற்ற சௌந்தரியவதியான ஒரு ராஜகுமாரி இறங்கினாள். 'கல் கல்' என்று ஆபரணங்கள் ஒலிக்க அவள் நடந்து சென்ற காட்சி எல்லோருக்கும் தேவலோகத்து ரம்பையை நினைவூட்டியது. அவள் சிரித்த சிரிப்பில் எல்லோரும் செயல் இழந்து நின்றனர்; அவள் பார்த்த பார்வையில் பரவசமாகி விட்டனர். தேவராஜனுக்குத் தான் காண்பது கனவா என்று சந்தேகமாய்ப் போய் விட்டது. சந்தேகம் தெளிவதற்காகக் கண்களை மூடி மூடித் திறந்தான்.

விருந்து முடிந்தது. அந்தத் தேவலோக சுந்தரியும் மூடுபல்லக்கில் ஏறிக்கொண்டாள். அரசனுக்கும் ராஜகுமாரர்களுக்கும் முகத்தில் அசடு வழிந்தது. அதை மறைத்துக் கொள்வதற்காக அவர்கள் தேவராஜனிடம் அபரிமிதமாக அன்பு பாராட்டிப் பேசினார்கள்.

''தேவராஜா, நீதான் அதிர்ஷ்டசாலி! நிச்சயம் உனக்கு நல்லதாகத்தான் ஏதாவது ஏற்படும் என்று நம்பித்தான் அந்தக் கிளியை மணந்து கொள்ளச் சொன்னேன். நடந்து போனதையெல்லாம் மறந்து விடு. இந்த ராஜ்யம் உனக்குத்தான்!'' என்று அரசன் மனம் உருகிப் பேசினான்.

தேவராஜன் அரசனுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, அங்கே அதிக நேரம் தங்காமல் குதிரையில் ஏறித் தன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். பல்லக்கு வருவதற்கு நேரமாகவே, தேவராஜன் அப்படியே கட்டிலில் சற்று நேரம் சாய்ந்தான். தூக்கம் இலேசாகக் கண்ணைச் சுற்றியது.

அங்கே அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. அந்தக் கிளியின் உயிரற்ற உடல் மட்டும் இருந்தது. இன்னும் பல்லக்கு வரவில்லை. தேவராஜனுக்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது. 'இந்த உடலை அப்புறப்படுத்தி விட்டால் நம் மனைவி மீண்டும் கிளியாக மாறமாட்டாள் அல்லவா?' என்று நினைத்து உடனே அந்தக் கிளியின் சரீரத்தை ஜன்னல் வழியாக, பிரவாகமெடுத்து ஓடும் நதியில் வீசி எறிந்துவிட்டான். மறு கணம் பல்லக்கு வந்தது. ராஜகுமாரி இறங்கினாள்.

''எங்கே நான் விட்டுச் சென்ற என் கிளி சரீரம்?'' என்று மிகவும் கடுமையாகக் கேட்டாள் அந்த அழகு சுந்தரி. தேவராஜன் பதில் பேசாமல் மௌனமாக நின்றான்.

''இனி நீங்கள் என்னை மறந்துவிடலாம். நான் கிழக்கே வெகு தூரத்தில் இருக்கும்

என் பிறந்த வீட்டுக்குப் போகி றேன்!'' என்று சொல்லிக் கொண்டே அவள் மறைந்து விட்டாள்.

தேவராஜன் பைத்தியம் பிடித்தவன் போல் ஆனான். ''தேவலோக சுந்தரி! என்னை விட்டு விட்டுப் போய்விடாதே. நான் அறியாமையால் செய்த பிழையை மன்னித்து விடு!'' என்று கத்தினான்.

அப்பொழுது 'கட கட' வென்று சிரிக்கும் சத்தம் கேட்டது.

''நான் உங்களை விட்டு விட்டு எங்கேயும் போய்விட வில்லையே! ஏன் உளறுகிறீர்கள்? அதற்குள் தூங்கி விட்டீர்களா?'' என்று தன் இனிமையான குரலில் கேட்டுக் கொண்டே தேவலோக சுந்தரி அவன் எதிரில் வந்தாள்.

''அட பாவமே! நான் சொப்பனமா கண்டேன்? நீ மறுபடியும் கிளியாகி விட மாட்டாயே!'' என்று கேட்டான் தேவராஜன்.

'கலீர்' என்று சிரித்துவிட்டு, தேவலோக சுந்தரி, ''இளவரசே, என்ன கனவு கண்டீர்கள்? ஏன் அவ்வளவு பயங்கரமாகக் கத்தினீர்கள்?'' என்று தேனொழுகும் குரலில் கேட்டாள்.

தேவராஜன் தான் கண்ட கனவை அவளுக்குச் சொன்னான். தேவலோக சுந்தரி விழுந்து விழுந்து சிரித்தாள்.

தேவராஜன் அவள் கைகளைப் பிடித்துத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டு, ''சுந்தரி, உண்மையில் நீ யார்? நீ ஏன் கிளி ரூபத்தில் இருந்தாய்? எப்படி உருவம் மாறினாய்? பேரழகியாகிய நீ யார் என்று சொல்ல மாட்டாயா?'' என்று கேட்டான்.

''நான் தேவலோகத்து அப்ஸரஸ் என்னும் அழகிய ஸ்திரீ வர்க்கத்தைச் சேர்ந்தவள். ஒரு முனிவரின் சாபத்தால் கிளி ரூபத்தை அடைந்தேன். எனக்கு இடப்பட்டிருந்த சாபம் இன்றோடு நீங்கி விட்டது. இனிமேல் எப்பொழுதும் உங்களுடைய சுந்தரியாகவே இருப்பேன்!'' என்றாள் சுந்தரி.

''நீ அப்ஸரஸாயிருந்தாலும் யாராயிருந்தாலும் அதைப் பற்றி நான் பொருட்படுத்த மாட்டேன். நீ மறுபடியும் கிளியாகி என்னை விட்டுப் பிரியாமலிருந்தால் அதுவே போதும்!'' என்றான் தேவராஜன்.

பிறகு தேவராஜனுக்குப் பிரமாதமாக மகுடாபிஷேகம் நடந்தது.



இலவசக் கல்வி போதனை

(ரிஜிஸ்டர் 1949)


★

1. மெட்ரிகுலேஷன். 2. எஸ். எஸ். எல். ஸி. 3. தமிழ் புகுமுகத் தேர்வு (Tamil Entrance Test) 4. E. S. L. C. 5. ஹிந்தி. 6. விவசாயம். 7. கைத்தறி நெசவு. 8. ஹோமியோபதி. 9. பேஸிக் ஆங்கிலம். முதலிய 1952-53 சர்க்கார் பரீக்ஷைகளுக்கு தபால் மூலம் மாதக் கட்டணம், வகுப்புக் கட்டணம் எதுவுமின்றி இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். சர்க்கார் பரீக்ஷையின் வெற்றிக்கும், தொடர்ந்து பாடங்கள் அனுப்பி வைத்து பயிற்சியளிப்பதற்கும் உத்திரவாதப் பத்திரம் அளிக்கப்படும். 21-4-52 முதல் ஆரம்பமாகும் இவ் வகுப்புகளின் முழு விவரங்களுக்கு, 15-4-52-க்குள் இரண்டணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்து சேர்ந்து கொள்ளவும்.

குறிப்பு:—1949 முதல் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் எங்கள் வித்யாலயத்தில் சேர்ந்து பயிற்சியடைந்து வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பாரத் மாதா ஹிந்தி வித்யாலயம்
ரிஷிவந்தியம் P. O.,
(via) திருக்கோவிலூர், S. A. Dt.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



வீட்டிலேயே சினிமாபார்த்து ஆனந்தமடையுங்கள். சலனப் படங்களை 1 முதல் 4 சதுர அடி அளவில் திரையின் மேல் கண்டு களிக்கலாம். இது பிரகாசமாகவும், கவர்ச்சிகரமாகவும் பிரதிபலிக்கிறது. விலை ரூ. 6-8-0. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2. தனி. மேற்கொண்டு பிலிம் அடி 1-க்கு அணா 4.

தானாகவே ஆறு தடவைகள் சுடும் பிஸ்டல்



(லைசென்ஸ் தேவை இல்லை)

தானாகவே இயங்கி ஆறு முறைகள் சுடும் ரிபீட்டர் டயலுடன் கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டலை வாங்குங்கள். திருடர்களும், காட்டு மிருகங்களும் பயந்து நடுங்கும் அளவு பெரிய சப்தத்தையும் நெருப்பையும் கக்கும். விரோதிகள் எதிர்க்கும் சமயத்தில் உங்களுக்கு உற்ற தோழன். விலை ரூ. 6-0-0 பாக்கிங், தபால் செலவு ரூ. 1-8-0 தனி. 12 ரவைகள் இலவசம். மேற்கொண்டு ரவை டஜன் ரூ. 1-4-0. பிஸ்டல் கேஸ் ரூ. 2-8-0.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

JANTA KARYALAYA
KILA GATE, HATHRAS U. P.

கல்யாண வைபவங்களுக்கும் கடவுள் வழிபாட்டிற்கும் இனியமணம் கமழும்



31
*
301
*
3001

நகரங்கள்தோறும் டிபாஸிட் கட்டக்கூடிய ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

●

மதராஸ் கிளை :
19/3, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு
(சௌந்தர்ய மஹாலுக்கு எதிர்)

ஜவ்வாது பத்திகள்

S.V. முருகேசன் அன் பிரதர்ஸ்
மதுரை * மதராஸ் * பெங்களூர் ஸிடி *

சென்னையில் எல்லா டி. யு. ஸி. எஸ். பிராஞ்சுகளிலும் கிடைக்கும்.

பிரிவு உபசாரம்

வசுமதி ராமஸ்வாமி

அன்று அற்புதபுரி மாதர் கிளப்பில் ஒரேவிதமான பேச்சுதான். திடீரென்று சப் கலெக்டர் நாகராஜனை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்கள். அதனால் ஸ்ரீமதி நாகராஜன் வெளியூர் போகிறாள். அவள் மாதர் கிளப்பின் காரியதரிசி பதவி ஏற்று இரண்டு வருஷத்தில் எவ்வளவு அற்புதமான மாறுபாடுகளைச் செய்திருக்கிறாள்! ஸ்ரீமதி நளினி நாகராஜன் கவர்ச்சிகரமாகப் பேசிச் சிரித்து அங்கத்தினர்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறாள். அவளுடைய மெருகேறின பேச்சுக்களைக் கேட்க அங்கத்தினர்கள் சளைக்க மாட்டார்கள்.

அத்தகைய காரியதரிசியின் கணவர் வெளியூருக்கு மாற்றலாகிப் போவதென்றால் எல்லாருக்கும் பிரிவு வேதனை இருப்பது சகஜம் தானே? அதை ஒட்டி மாதர் சங்கத்தில் ஒரு பிரிவு உபசாரம் நடத்தவும் ஏற்பாடு செய்ததில் ஆச்சரியமே இல்லை யல்லவா?

ஸ்ரீ நாகராஜன் வீட்டில் மூலைக்கு மூலை சாமான்கள் அரை குறையாகக் கட்டப்பட்டு உருண்டு கிடந்தது. நளினி நாகராஜனுக்கு ஒரு நிமிஷம் ஓய்வு இல்லை. அந்த ஊரை விட்டுக் கிளம்ப இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. அன்று யார் வீட்டில் விருந்து என்று தெரிந்து கொள்ளக்கூட அவளுக்கு அவகாசமில்லை. ஆனால் நளினி தன் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்து ஸ்ரீமதி சுப்பராவ் வீட்டுக்குப் போக வேண்டு மென்பதை நினைவூட்டிக் கொண்டாள்.

ஸ்ரீமதி சுப்பராவ் அமெரிக்கா சுற்றுப் பிரயாணத்தைச் சமீபத்தில் முடித்துக் கொண்டு வந்தவளாகையால் அவளுக்குத் தகுந்தபடி பேச நளினி தன்னைச் சிறிது தயார் செய்து கொண்டாள். ஸ்ரீமதி சுப்பராவ் இனிய விருந்தளித்தாள். அத்துடன் நளினி வேறு ஊருக்குச் செல்லுவது அற்புதபுரிக்கு நஷ்டமென்றும் சுட்டிக் காட்டினாள்.

விருந்து முடிந்தவுடன் சப் கலெக்டர் நாகராஜனும் அவர் அருமை மனைவி நளினி நாகராஜனும் தங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். வந்து இன்னும் வேறு உடை கூட மாற்றிக் கொள்ளவில்லை. அதற்குள்ளாகவே கலெக்டர் தம்முடைய சாமான்களை எடுத்து ஒழுங்குபடுத்திக் கட்டுவதில் ஈடுபட்டார். அப்பொழுது யாரோ வரும் சத்தம் கேட்டது.

“ஹலோ! மிஸ்டர் நாகராஜன்! இப்பொழுதுதான் தாங்கள் வெளியூர் போவதாகக் கேள்விப்பட்டேன். உங்களைப் பிரிவது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இன்றிரவு நம் வீட்டிற்குச் சாப்பிட வரவேணும்” என்று பேசினார் மற்றொரு நண்பர். அவருடன்கூட இன்னும் இருவர் இருந்தனர்.

அரைகுறையாகச் சாமான்களைக் கட்டிக் கொண்டு நிற்கும் நாகராஜனுக்குச் சற்று ஆயாசமாய் விட்டது. இப்படியா நான்கு நாளைக்குள் எல்லோரும் விருந்து போட்டுத் திணறஅடிக்க வேண்டும்? எவ்வளவோ நாட்களாக இவ்வூரில் இருந்த பொழுது ஒருவரும் ஒருவேளை சாப்பாடுகூடப் போட வில்லையே! இது என்ன உபசாரம்! பிரசங்கியாரின் பேச்சு ரஸிக்கவில்லை என்றால் உள்ளே போ என்பதற்கு அடையாளமாகக் கையைத் தட்டுவார்கள் அல்லவா? அது போலவே நமக்கு இந்த விருந்து உபசாரம் செய்கிறார்களோ என்று எண்ணினார் சப் கலெக்டர்.

பிறகு அவர் தம் மனைவியை அழைத்துக் குறிப்புப் புத்தகத்தைப் பார்க்கச் சொன்னார். “இன்று இரவு சர்தார் கைலாசம் பட்டில் விருந்துண்ண அழைத்திருக்கிறார். நாளை பகல் மிஸ்டர் ஜகந்நாதம் வன போஜனத்திற்கு அழைத்திருக்கிறார். அன்று மாலை மாதர் கிளப்பில் தேநீர் விருந்து. அதற்கு நான் அவசியம் போக வேண்டும். நாளை இரவு மிஸ்டர் மாதுர்பூதம் வீட்டில் விருந்து. விருந்துக்குப் பிறகு அவர்கள் குமாரத்தி நடனம் இருக்கிறது” இப்படியாக நளினி நிறுத்தாமல் அடுக்கிக்கொண்டே போனாள். வந்த நண்பர்கள் விடுவதாயில்லை. “ஏன் ஸார், நாளைக்கு மறு நாள் மாலை தேநீர், சிற்றுண்டி அருந்தவாவது எங்கள் வீட்டுக்கு வந்தே தீரவேண்டும்” என்றார்கள்.



நண்பர்:—நேற்றைக்கு நான் மாதவரத்துக்குப் போகும் ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு திருடன் என்னை வழி மறித்துக் கொண்டு, “பையிலிருக்கும் பணத்தைக் கொடுக்கிறாயா, அல்லது உன் உயிரைக் கொடுக்கிறாயா?” என்று கேட்டான்.

மற்றவர் (பரபரப்புடன்):— நீ எதைக் கொடுத்தாய்?

நாகராஜன் மிகவும் பரிதாபகரமாக நண்பர்களைப் பார்த்தார். அவர் விருந்து சாப்பிட்டு அலுத்திருக்கும் சிரமத்தை அவர்கள் கண்டார்களா? அவர்கள் உபசாரம் தமக்கு அபசாரமாக இருக்கிறதே யென்று ஏங்கினார். முடிவாக வேறு வழி யில்லாமல் ஒப்புக் கொண்டார்.

எல்லோரும் தன்னிடம் காட்டும் அன்பில் நளினாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "இந்த ஊரை விட்டுப் போகவே வருத்தமாக இருக்கிறது. எல்லாரும் எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள்! மாற்றல் இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றாள்.

சமூக அன்பைப்பற்றி நன்கு தெரிந்திருந்த சப் கலெக்டர் நாகராஜன் அதை ஏற்கவில்லை. மௌனமாகச் சிரித்தார்.

நளினாவுக்கும், அவள் குழந்தை ரமாவுக்கும், விதம் விதமான பரிசுகள் வந்து குவிந்தன. மாதர் சங்கப் பிரிவு உபசாரக் கூட்டத்தில் பேசத் தெரியாதவர்கள் கூட மெழுகாக உருகிப் பேசினார்கள். அவர்கள் உபசாரத்திற்கு வந்தனம் தெரிவிக்கும் பொழுது நளினாவின் நாத் தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் துளித்தது. கூடிய சீக்கிரம் தான் மீண்டும் இதே ஊருக்கு வரக்கூடுமெனத் தெரிவித்தாள். சங்கத்துப் பெண்மணிகள் அதைக் கைகொட்டி வரவேற்றனர். "நான் எவ்வளவு ஊர்களுக்குச் சென்றாலும் அற்புதபுரி மாதர் சங்கத்தையும் உங்களனைவருடைய அன்பையும் மறக்கமாட்டேன். என் நினைவில் பதிந்து போன உங்களுக்கு நான் கடமைப்பட்டவள்" என்று பேசி நளினா அவர்களை உருகச் செய்தாள். புஷ்பமாலைகளுடன் நளினா வீட்டுக்கு வந்தபொழுது இரவு பதினொரு மணி. அன்று முழுவதும் பொங்கிய சந்தோஷத்தில் தூக்கத்தையும் மறந்தாள்.


அற்புதபுரியை விட்டுப் புறப்பட இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன. அந்தச் சமயத்தில் எதிர்பாராத ஒரு செய்தி வந்தது. சப் கலெக்டர் நாகராஜன் இன்னும் சில காலம் அற்புதபுரியிலேயே இருந்து முகாம் நடத்த வேணுமென்றும் மாற்றல் தற்சமயம் இல்லை என்றும் சர்க்காரிடமிருந்து தந்தி வந்தது. இதைப் படித்ததும் நளினாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. உடனே போன் மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் தன் நண்பர்களுக்கு இந்தச் சந்தோஷச் செய்தியை அறிவித்தாள். ஆனால் போனில் கேட்டவர்கள் பிரமாதமாகத் தங்கள் ஆனந்தத்தைத் தெரிவிக்கவில்லை. நளினாவுக்கு இது பெரிதும் ஏமாற்றத்தை அளித்தது. அன்று மாலை கிளப்புக்குப் போய் அளவளாவ வேணுமென்று போனாள். ஆனால் அங்கு இருந்த சூழ்நிலை இன்னும் பெரிய ஏமாற்றத்தைத் தருவதாயிருந்தது. ஒருத்தராவது சந்தோஷப்பட்டுக் கை குலுக்கவில்லை. மாற்றலாகி ஊருக்குப் போகாததற்காக உற்சாகம் காட்டவுமில்லை. அதற்கு நேர்மாறாக எல்லாரும் 'உம்'மென்று இருந்தனர். ஒரு சிலர் மட்டும் உபசாரத்துக்காகப் பேசினர்.

வீட்டுக்குக் களைப்புடன் வந்த நளினாவைப் பார்த்து நாகராஜன் தெரிந்து கொண்டார். "சாமான்களைக் கட்டிக் கொண்டும் அலைந்து கொண்டும் இருக்கும் பொழுது தெம்பாக இருந்தாயே, இப்பொழுது ஏன் இவ்வளவு களைப்பு?" என்று அவர் கேட்டதும் நளினாவுக்கு அழுகையே வந்து விட்டது.

'அம்மா மகராசி, ஊருக்குப் போய்விட்டால் ஊரே வெறிச்சென்று இருக்கும்' என்று பேசிய பால்காரி, பூக்காரிகூட மௌனமாகப் போனது நளினாவுக்கு ஏமாற்றத்துடன் கூடிய ஆச்சரியமாகத்தான் இருந்தது. நளினா அவர்களுடைய புகழ்ச்சிக்கு வசப்பட்டுத் தன் புடவைகள், துணிகள் முதலியவைகளைத் தாராளமாக வாரி வாரிக் கொடுத்ததை எண்ணி இப்பொழுது பொருமினாள். டெலிபோன் மணி கணகண வென்று அடித்தது.

சப் கலெக்டர் நாகராஜன் தன் குமாஸ்தாவைக் கூப்பிட்டு, "அநேகமாக இன்று இரவு விருந்துக்கு அழைத்த குமாரசாமி அதைக் 'கான்சல்' செய்வதற்குக் கூப்பிடுவார். ஏதோ அசந்தர்ப்பம் என்று சொல்லக் கூடும். கேளுங்கள்" என்றார். போன் செய்தியைக் கேட்டு விட்டுத் திரும்பின குமாஸ்தா, "தாங்கள் சொன்ன விஷயமேதான், ஸார்!" என்றார்.

அன்று இரவு நளினாவுக்குத் தூக்கமே வரவில்லை. தன் பிரிவுக்கு அழுதவர்கள் தான் போகவில்லை என்று தெரிந்ததும் சந்தோஷப்படவில்லையே, இதென்ன உலகம் என்று வருந்தினாள். படுக்கையில் உறக்கம் பிடிக்காமல் புரண்டாள். ஆனால் நாகராஜன் இதுதான் உலகம் என்ற முகபாவத்துடன் அமைதியாக உறங்கினார்.



கணவன் :—குழந்தை தூளிக்குப் பக்கத்தில் என் படுக்கையைப் போட்டிருக்கிறாயே! நான் எப்படித் தூங்குவது?

மனைவி:—விடியற்காலையிலே எழுந்திருக்கணும்னு சொன்னேனே என்று அங்கே படுக்கையைப் போட்டேன். நம்ம அலாரம் கடிகாரம்தான் உடைந்து போய்விட்டதே!


கணவன்:—ஓகோ, சரிதான்!



வருகிறேன்
ஸ்ரீ வள்ளி புரொடக்ஷன்ஸாரின்
வேலைக்காரன்
தமிழ்
T.R. மகாலிங்கம்... T.S. பாலையா
S.V. சுப்பையா..... V.K. ராமசாமி
V.M. ஏழுமலை....... P.D. சம்பந்தம்
S. வரலக்ஷ்மி...... மாதுரி தேவி
M.S. திரௌபதி...... K.R. செல்லம்
T.V. குமுதினி........ S. மேனகா
மற்றும் பல நக்ஷத்திரங்கள் நடித்தது
டைரக்ஷன்
P.V. கிருஷ்ணன்
ஸ்டுடியோ
ஏவி.எம். ஸ்டுடியோஸ்
ஸ்ரீ வள்ளி புரொடக்ஷன்ஸ்.
63, யுனைடெட் இந்தியா காலனி, மதராஸ். 24.
G.H.RAO

இந்தியாவின் தொழில்

அபிவிருத்தி திட்டங்களுக்கு



தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTA'S - CMJ - 70 A TAMIL



18. அவசர அழைப்பு

ராஜாளி மடம் அந்தப் பயங்கரத்தை நெடு நாட்களாய் ஆவலோடு எதிர்பார்த்தது போல் மோன நிலையில் ஆழ்ந்திருந்தது.

பொன்னி பீரோவிற்குப் பின்னாலிருந்து நடுக்கத்துடன் மெதுவாக எட்டிப் பார்த்தாள். அவள் என்றும் கண்டிராத கோரக் காட்சி அவள் இருதயத்தையே அழுத்திவிடும் போலிருந்தது; உயிர்க் குலையை நடுங்க வைக்கும் பயங்கரக் கனவு போல இருந்தது; கதைகளில் கேட்டிருக்கும் ஸ்மசான பேய்க்கூத்துப் போல இருந்தது. ஆனால் எல்லாம் உண்மை. அப்பொழுதுதான் அந்த அறையில் அவள் கண்ணெதிரில் நடந்தது. சிவப்பிரகாசத்தின் உடல் தரையில் கிடந்தது. அவர் நெஞ்சிலிருந்து ரத்தம் கசிந்து தரையைத் திட்டாக்கி இருந்தது.

மரகதம் சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். ரத்தக் கறை படிந்த கத்தி இன்னும் அவள் கையில் இருந்தது. அவள் உணர்ச்சி யற்றவள் போல் தரையில் கிடந்த அந்த மனிதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எவன் அவளுடைய இளம் பிராயத்தில் அவள் மனத்தைக் கவர்ந்து அவளை பித்தாக்கினானோ, எவன் அவளுடைய தகப்பனாரை வஞ்சனையாகக் கொலை செய்தானோ, எவன் அவளுடைய அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு அவள் வாழ்வையும் அவளுடைய சகோதரிகளின் வாழ்வையும் பாழ்செய்தானோ, எவன் அவளுடைய கடைசிச் சகோதரி தற்கொலை செய்து கொள்ளக் காரணமாக இருந்தானோ, எவன் உலகமறியாத அறியாமை நிறைந்த ஒரு பெண்ணைத் தன்னுடைய மகள் என்ற உரிமையில் அழைத்துக் கொண்டு போய் அவளுடைய வாழ்வையும் பாழாக்க நினைத்தானோ, அவன் அவளுக் கெதிரே தரையில் கிடந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான். மரகதத்திற்குச் சிறிது பின்னால் நின்று கொண்டிருந்த செங்கம்மா தரையில் விழுந்து கிடக்கும் அம்மனிதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் பயமோ பச்சாத்தாபமோ இல்லை. பழி தீர்த்துக் கொண்ட சந்தோஷமும், திருப்தியும் அவள் கண்களில் அப்பொழுது தாண்டவமாடியது. அவர்களை மீறி, அவர்களைப் பயமுறுத்தி ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு செல்ல நினைத்த ஒரு மனிதனுக்கு இதுதான் சரியான தண்டனை என்று அவள் திருப்தி அடைவதுபோல் இருந்தது. அப்பொழுது அவள் இருந்த நிலை. இப்படி ஒரு மனிதனைப் பழி வாங்கிக் கொண்டதால் ஆண் வர்க்கத்திடமே வெறுப்புக் கொண்டு அந்த ராஜாளி மடத்தில் வசித்த ஸ்திரீகளின் மனோ விரதம் பூர்த்தியாகி விட்டது போலிருந்தது.

மரகதத்தின் கையிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்தது. அவள் சட்டென்று சிவப்பிரகாசத்தின் உடல் அருகே உட்கார்ந்து மெதுவாக அந்த முகத்தைத் தொட்டுத் திருப்பினாள். அந்த அறையிலிருந்து சிறிய விளக்கின் ஒளியில் அவன் முகம் பிரேதம் போல் வெளுத்திருந்தது நன்கு தெரிந்தது. நடுங்கும் கைகளோடு சிவப்பிரகாசத்தின் உடலை மெதுவாக அசைத்தாள். பிறகு "இன்னும் உயிர் போகவில்லை. மெதுவாக எடுத்துக் கட்டிலில் விட்டு விடலாம்" என்றாள் மரகதம் செங்கம்மாவை நோக்கி.

மரகதமும் செங்கம்மாவுமாகத் தூக்கிச் சிவப்பிரகாசத்தைக் கட்டிலில் கிடத்தினர். "இன்னும் சாகவில்லை. ஆனால் சாவு நெருங்கிவிட்டது. இனி மேல் என்ன செய்யலாம்!" என்றாள் செங்கம்மா.

"முதலில் கொஞ்சம் வெந்நீர் கொண்டு வா! இதெல்லாம் வேதாவிற்குத் தெரியக் கூடாது. ஜாக்கிரதை! பொன்னி போய் டாக்டர் பரசுராமனை அழைத்துக் கொண்டு வருகிற வரையில் அவளுக்கு எதுவுமே தெரியக் கூடாது" என்று எச்சரித்தாள் மரகதம்.

"டாக்டர் பரசுராமனைப் பொன்னி அழைத்துக் கொண்டு வரவேணுமா! எதற்காக! இதெல்லாம் பைத்தியக்காரத்தனம்! இதற்கெல்லாம் டாக்டர் வர வேண்டாம். இது கொலை......" என்றாள் செங்கம்மா.

"அது எனக்குந் தெரியும். ஆனால் இன்னும் உயிர் போக வில்லை. தெய்வாதீனமாக ஒரு வேளை பிழைத்துவிடலா மல்லவா! கட்டாயம் அதற்கு டாக்டர் வேணும்" என்றாள் மரகதம்.

"டாக்டர் வந்தால் உண்மை வெளியாகிவிடும். அதனால் நீங்கள் ஜெயிலுக்குப் போக நேரும். கொலைக் குற்றம் சாட்டப்பட்டால் தூக்குத் தண்டனைகூடக் கிடைக்கும் உங்களுக்கு!" என்று படபடப்போடு சொன்னாள் செங்கம்மா.

"அதற்காக நான் பயப்பட வில்லை!" என்றாள் மரகதம்.

செங்கம்மா கையைப் பிசைந்து கொண்டு துடித்தாள். "இதோ பாருங்கள், இது பெரிய ஆபத்து! இதை நாமே அடக்கி விடலாம். இவன் சாகட்டும். பிரேதத்தை இரவோடு இரவாக ஒருவருக்கும் தெரியாமல் எங்காவது புதைத்துவிடலாம். இந்த விஷயம் வெளிக் கிளம்பாமல் அடங்கி விடும்!" என்றாள் செங்கம்மா.

"ஹா...ஹாம்..." என்று தலையை அசைத்தாள் மரகதம்.

"நான் சொல்லுவதைத் தயவு செய்து கேளுங்கள். இந்த அறையில் என்ன நடந்ததென்று உங்களையும் என்னையும் தவிர வேறு ஒருவருக்குமே தெரியாது. யாரும் துளிக்கூட சந்தேகப்படாத வண்ணம் நான் பிரேதத்தைப் புதைத்து விடுகிறேன். நீங்கள் இந்தக் குற்றத்திலிருந்து தப்ப வேண்டும் என்றால் இதுதான் சரியான வழி" என்றாள் செங்கம்மா.

மரகதம் அதை ஒப்புக்கொள்ளாதவள் போல் தலையை அசைத்தாள். "இது என்னுடைய வழியல்ல. நான் செய்தது குற்றம் குற்றம்தான். அதற்கு எங்காவது ஒரு இடத்தில் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அதற்கு நான் தயாராய் இருக்கிறேன். நான் எதற்கும் பயப்படவில்லை. டாக்டர் பரசுராமனை அவசியம் அழைத்துக் கொண்டு வரத்தான் வேண்டும்!" என்றாள் கண்டிப்பாக.

"டாக்டரைத்தானே! நான் போய் அழைத்துக் கொண்டு வருகிறேன், அம்மா!" என்ற குரல் கேட்டு மரகதமும் செங்கம்மாவும் திடுக்கிட்டுத் திரும்பினர். பொன்னி பீரோவிற்குச் சமீபமாக நின்று கொண்டிருந்தாள். செங்கம்மாவின் முகம் கோபத்தினால் சிவந்தது. "நீ எப்படி இங்கே வந்தாய்! இந்த அறைக்குள் வர உனக்கு என்ன துணிச்சல்!" என்று கேட்டாள்.

"நான் அப்பொழுதிலிருந்து இங்கேதான் இருக்கிறேன்" என்றாள் பொன்னி அலட்சியமாக.

"என்ன! அப்பொழுதிலிருந்து இங்கேதான் இருக்கிறாயா!" என்றாள் செங்கம்மாள் பொன்னியைக் கண்ணாலேயே எரித்துச் சாம்பலாக்கி விடுபவள்போல் பார்த்துக் கொண்டே.

"செங்கம்மா, பேசாமலிரு. அவள் போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரட்டும். நேரம் ஓடிக் கொண்டே இருக்கிறது. இந்த விசாரணையெல்லாம் வேணுமென்றால் அப்புறம் வைத்துக் கொள்வோம்" என்றாள் மரகதம்.

செங்கம்மா ஒரு பெருமூச்சு விட்டாள்.

"இந்த இரவில் நீ சுந்திதுர்க்கத்திற்குப் போய் வருவாயா! ஆனால் போய்த்தானாக வேண்டும். உடனே போ. நேராக டாக்டர் பரசுராமனைப் பார்த்து அழைத்துக் கொண்டு வா! வேறு ஒருவரோடும் இதைப் பற்றிப் பேசக்கூடாது. தெரிந்ததா!" என்றாள் மரகதம்.

"சரியம்மா" என்றாள் பொன்னி.

"சரி, சீக்கிரம் போ."

பொன்னி அந்த அறையை விட்டு அவசரமாக வெளியே சென்றாள்.

சில நிமிஷ நேரத்திற்குள் அவள் அந்த வீட்டிற்கு வெளியே வந்து ரஸ்தாவில் அதி வேகமாக நடந்தாள். அந்த கிசி இருட்டில் பாதை தெரிந்து போவதற்காக அவள் கையில் ஒரு அரிக்கன் விளக்கைக் கொண்டு சென்றாள். சூழ்ந்திருந்த காரிருளில் அது ஒரு மின்மினிப் பூச்சிபோல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் பரசுராமனின் வீட்டிற்கு வந்து பார்த்த பொழுது அவருடைய வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது. மெதுவாக ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. டாக்டர் வீட்டில் தானிருக்கிறார் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது. வாசற் கதவைத் தட்டினாள். அடுத்த சில வினாடிகளுக்கெல்லாம் ...ருந்து "யாரது!" என்ற குரல் கேட்டது.

"நான்தான், பொன்னி! ராஜூனி மடத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்று பதில் குரல் கொடுத்தாள் பொன்னி.

இதை கேட்டதும் டாக்டர் அவசரமாக வந்து கதவைத் திறந்தார். "பொன்னியா! இந்த வேளையில்...... என்ன விசேஷம்!" என்றார் படபடப்போடு.

"நீங்கள் உடனே என்னோடு புறப்பட்டு அந்த ராஜூனி மடத்திற்கு வரவேண்டும்" என்றாள் பொன்னி பதட்டம் தணியாமல்.

"ஏதாவது ஆபத்தா! ஏன் இப்படித் துடிக்கிறாய்! வேதாவிற்கு ஏதாவது உடம்பு சௌகர்யமில்லையா!" என்று கேட்டார் டாக்டர்.

"வேதாவிற்கு ஒன்றுமில்லை. வேறொரு மனிதர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்" என்றாள் பொன்னி.

"நல்ல வேளை......" என்று கூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் பரசுராமன். அடுத்த சில நிமிஷ நேரத்திற்கெல்லாம் ஒரு நீண்ட கோட்டை அணிந்து கொண்டு கையில் ஒரு தோல் பெட்டியுடன் கிளம்பினார்.

பொன்னி கை விளக்கை எடுத்துக் கொண்டு, "வண்டி வசதி எதுவுமில்லை. நடந்துதான் போக வேண்டும்!" என்றாள் அச்சத்தோடும் வெட்கத்தோடும்.

"அதனால் என்ன! நடந்தே போவோம்" என்றார் டாக்டர் சிரித்துக் கொண்டே.

* * *

பொன்னியும் டாக்டர் பரசுராமனும் சொக்கிக் குளம் பாதையில் சென்று கொண்டிருந்தனர். பொன்னி கை விளக்கின் ஒளியைக் காட்டிய வண்ணம் முன்னே நடந்தாள். டாக்டர் கைப் பெட்டியுடன் அவளைப் பின்தொடர்ந்து நடந்தார். சிறிது தூரம் அவர்கள் மௌனமாக நடந்தனர். சிறிது தூரம் சென்றதும் டாக்டர், "அங்கே யாருக்கு உடம்பு சரியாக இல்லை! உங்கள் எஜமானிக்கா! அல்லது வேலைக்காரி ஒருத்தி இருக்கிறாளே, அவளுக்கா...!" என்றார்.



"அவர்களுக் கெல்லாம் ஒன்றுமில்லை. வேறொரு மனிதருக்கு..." என்றாள் பொன்னி நடந்து கொண்டே.

"வேறொரு மனிதருக்கா! நீ சொல்வதைப் பார்த்தால் யாரோ ஆண் பிள்ளைக்குத்தான் ஏதோ நேரக் கோளாறு என்று தோன்றுகிறது. அந்தக் கட்டிடத்தில் ஆண் பிள்ளைகள் வேறு இருக்கிறார்களா!"

"அந்தக் கட்டிடத்தில் வசிப்பவரல்ல. இன்று சாயங்காலம்தான் அந்த மனிதர் விருந்தினராக வந்தார். அவருக்குத்தான் இந்தக் கதி......" என்றாள் பொன்னி.

"இந்த கதி யென்றால்! அங்கு என்ன நடந்தது! அந்த மனிதன் யார்!" என்றார் துடிப்புடன் டாக்டர்.

"அவரா......! அவர்தான் வேதாவின் தகப்பனார்" என்றாள் பொன்னி அவரைத் திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டே.

"வேதாவின் தகப்பனாரா! என்ன! வேதாவின் தகப்பனார்தான் இறந்து விட்டாரே!" என்றார் டாக்டர் வியப்போடு.

"அவர் இறந்து விட்டதாகத்தான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த மனிதர் உயிரோடு தானிருக்கிறார். ஆனால் இப்பொழுது உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது" என்றாள் பொன்னி.

"அப்படியென்றால்...! அந்த மனிதர் நீ வரும் போது சாகக்கூடிய நிலையிலிருந்தாரா! அப்படி அவருக்கு என்ன வியாதி!" என்றார் டாக்டர்.

"ஒரு வியாதியுமில்லை. நெஞ்சில் கத்திக்குத்துப் பட்டால் எந்த மனிதனாவது பிழைப்பதுண்டா, டாக்டர்!" என்றாள் பொன்னி தன் நடையிலேயே கவனமாக. பொன்னியின் வார்த்தையைக் கேட்டதும் டாக்டர் திடுக்கிட்டார். "நெஞ்சில் கத்திக் குத்தா......! பொன்னி! நீ என்ன சொல்கிறாய்! எதையும் புதிர் போடுவதுபோல் சொல்லாமல் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு" என்றார் பதட்டத்தோடு.

"இன்று சாயந்திரம்தான் வேதாவின் தகப்பனார் அங்கு வந்தார். எங்கள் எஜமானி அம்மாள் அவரைக் கத்தியால் குத்தி விட்டாள்......"

"கத்தியால் குத்தி விட்டாளா! எதற்காக!"



"எதற்காகவா! அவர்தான் வேதாவை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்ப் பம்பாயிலோ கல்கத்தாவிலோ உள்ள கோடீஸ்வரனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொன்னார். அது எங்கள் எஜமானி அம்மாளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் இருவருக்கும் கடுமையாக வாக்குவாதம் நடந்தது. கடைசியில் எஜமானி அம்மாள் அவரைக் கத்தியால் நெஞ்சில் குத்தி விட்டாள்."

"என்ன!" என்றார் டாக்டர் திகிலுடன்.

"உண்மைதான். நானே எல்லாவற்றையும் என் கண்ணால் பார்த்தேன். எஜமானி அம்மாள் கத்தியால் அவரைக் குத்தும்போது நன்றாகப் பார்த்தேன். அப்பப்பா! எவ்வளவு பயங்கரம்!"

"அப்படியா...!"

டாக்டர் சிறிது நேரம் மௌனமாகவே நடந்தார். அந்த மனிதர் இன்னும் உயிரோடுதானிருக்கிறார் என்று என்ன நிச்சயம்!" என்றார் டாக்டர்.

"நான் வரும்பொழுது அவர் சாகவில்லை. உயிர்க் கழுவிலிருந்தார். ஆனால் இப்பொழுது எப்படியோ! அந்த மனிதரைக் கத்தியால் குத்திக் கீழே சாய்த்த பிறகுதான் எஜமானி அம்மாளுக்குச் சிறிது அவர் மீது பச்சாத்தாபமும் இரக்கமும் ஏற்பட்டன. நீங்கள் வந்தால் ஒருவேளை அந்த மனிதர் பிழைக்கலாம் என்று நினைத்து என்னை அவசரமாக அனுப்பினார்கள். அந்த வேலைக்கார ராட்சசி இருக்கிறாளே, அவள் அந்த மனிதர் எப்படியாவது செத்துத் தொலையட்டும். ஒருவருக்கும் தெரியாமல் எங்காவது குழி தோண்டிப் புதைத்து விடுவோம். உங்களை அழைத்துக் கொண்டுவர வேண்டாம் என்று தடுத்தாள். ஆனால் எஜமானி அம்மாள் அவள் வார்த்தையைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. தான் செய்த குற்றத்தை மறைக்க விரும்பவில்லை. உடனே உங்களை அழைத்துக் கொண்டு வரும்படி என்னை அனுப்பினாள்" என்றாள் பொன்னி.

"ஹூம், சரிதான்" என்று சொல்லிவிட்டு மௌனமாக அவளைப் பின் தொடர்ந்து நடந்தார் பரசுராமன். சிறிது நேர யோசனைக்குப் பிறகு திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், "அது சரி, இதெல்லாம் வேதாவிற்குத் தெரியாதா!" என்றார்.

"தெரியாது. ஒரு வேளை நான் வந்த பிறகு அவர்கள் அவளுக்குத் தெரியப்படுத்தி இருக்கலாம். ஆனால் எஜமானி அம்மா செங்கம்மாவிடம் அவைகளெல்லாம் வேதாவிற்குத் துளிக்கூடத் தெரியக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்" என்றாள்.

டாக்டர் அதற்கு மேல் அவளோடு ஒன்றும் பேசவில்லை. ஏதோ சிந்தனை செய்தவாறு அவளைப் பின் தொடர்ந்து நடந்தார்.

சிறிது நேரத்தில் அவர்கள் ராஜாளி மடத்தை அடைந்தனர். அவர்கள் வீட்டிற்குள் நுழைக்தும் தாழ்வாரத்தில் செங்கம்மா நின்று கொண்டிருந்ததைப் பார்த்தனர். அவளுடைய முகம் விகாரமாக வெளுத்திருந்தது. அவளுடைய கண்களில் எப்பொழுதும் காணப்படாத பயமும் தடுமாற்றமும் நிறைந்திருந்தன.

"அவருக்கு எப்படி இருக்கிறது!" என்றாள் பொன்னி செங்கம்மாவைப் பார்த்து. செங்கம்மா அவளுக்குப் பதில் சொல்ல வெறுப்படைந்தவள் போல் டாக்டரைப் பார்த்து, "அதோ அந்த அறைதான். போய்ப் பாருங்கள்" என்றாள்.

பொன்னி செங்கம்மாவை அலட்சியமாக ஒரு தடவை பார்த்துவிட்டு, "சரி, வாருங்கள்! போய்ப் பார்ப்போம்" என்று டாக்டரை அழைத்துக் கொண்டு சென்றாள்.



வியாபாரி :—இந்தத் தலைமயிர் வளரும் தைலத்தை வாங்கிக் கொள்ளுங்கள்.


கூட்டத்தில் ஒருவர்:-உங்கள் தைலத்தை தட்டிக்கொண்ட பிறகு இருக்கிற மயிரும்

கட்டிலுக்குச் சமீபமாகப் போய்க் கட்டிலில் கிடந்த மனிதன் மீது போர்த்தப்பட்டிருந்த துணியை விலக்கி விட்டு உற்றுக் கவனித்தார். மரகதம் தலை குனிந்தவாறே அவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். "கொஞ்சம் அந்த விளக்கைச் சமீபத்தில் கொண்டு வாருங்கள்" என்றார் டாக்டர். மரகதம் விளக்கை எடுத்துக் கொண்டு கட்டிலுக்குச் சமீபமாக நின்றாள்.

மார்பிலிருந்து கசிந்த ரத்தத்தினால் அந்த மனிதன் அணிந்திருந்த சட்டை திட்டாக நனைந்திருந்தது. டாக்டர் கட்டிலில் கிடந்த அந்த உடலைக் கையால் தொடக்கூட இல்லை. அதற்கு அவசியமே இல்லாமல் போய்விட்டது. அவரைப் போல் இன்னும் எத்தனை டாக்டர் வந்தாலும் செய்வதற்கு அங்கொன்றுமில்லை. சிவப்பிரகாசத்தின் உயிர் மெதுவாக உள்ளடங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் உடலை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கும் ஆவியை எந்தவிதமான வைத்திய முறையாலும் தடுக்க முடியாது என்பது டாக்டரின் முகக் குறியிலிருந்து நன்கு விளங்கியது.

தில் நின்று கொண்டிருந்தாள். "கொஞ்சம் அந்த விளக்கைச் சமீபத்தில் கொண்டு வாருங்கள்" என்றார் டாக்டர். மரகதம் விளக்கை எடுத்துக் கொண்டு கட்டிலுக்குச் சமீபமாக நின்றாள்.

மார்பிலிருந்து கசிந்த ரத்தத்தினால் அந்த மனிதன் அணிந்திருந்த சட்டை திட்டாக நனைந்திருந்தது. டாக்டர் கட்டிலில் கிடந்த அந்த உடலைக் கையால் தொடக்கூட இல்லை. அதற்கு அவசியமே இல்லாமல் போய்விட்டது. அவரைப் போல் இன்னும் எத்தனை டாக்டர் வந்தாலும் செய்வதற்கு அங்கொன்றுமில்லை. சிவப்பிரகாசத்தின் உயிர் மெதுவாக உள்ளடங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் உடலை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கும் ஆவியை எந்தவிதமான வைத்திய முறையாலும் தடுக்க முடியாது என்பது டாக்டரின் முகக் குறியிலிருந்து நன்கு விளங்கியது.



வியாபாரி :—இந்தத் தலைமயிர் வளரும் தைலத்தை வாங்கிக் கொள்ளுங்கள்.

கூட்டத்தில் ஒருவர்:-உங்கள் தைலத்தை தட்டிக்கொண்ட பிறகு இருக்கிற மயிரும்

போய்விட்டால் என்ன செய்வது?

வியாபாரி :—உத்தரவாதம் கொடுக்கிறேன். அப்படி எல்லாம் போனால், என்னிடம் வாருங்கள். மூன்று தைலப் பாட்டில் இனாமாகத் தருகிறேன்.

செங்கம்மாவின் முகம் ஏன் அவ்வளவு வெறுப்படைந்து சோபை இழந்திருக்கிறது! ஏன் அவள் தன்னோடு பேசக்கூட வெறுப்படைகிறாள் என்பதெல்லாம் பொன்னிக்குத் தெரியும். இப்பொழுது செங்கம்மா சரியான பொறியில் சிக்கி இருக்கிறாள். அவள் சிவப்பிரகாசத்தைக் கத்தியால் குத்தா விட்டாலும் அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறாளல்லவா! தவிர அங்கு நடந்த இந்தக் கோர சம்பவத்தை எப்படியாவது உலகின் கண்களுக்குத் தெரியாமல் மறைத்துவிட நினைத்தாள். ஆனால் அவளுடைய முயற்சிகள் பலிக்கவில்லை. இதற்கெல்லாம் ஒருவகையில் காரணமாக இருந்தவள் பொன்னி தானே! அவள் மீது செங்கம்மாவிற்குக் கோபமும் ஆத்திரமும் ஏற்படுவது இயற்கையே அல்லவா! ஆனால் பொன்னி இதையெல்லாம் லட்சியம் செய்யாமல் டாக்டரை அழைத்துக் கொண்டு சிவப்பிரகாசம் கிடத்தப்பட்டிருக்கும் அறைக்கு வந்தாள்.

விளக்குத் தணிவாக எரிந்து கொண்டிருந்தது. மரகதம் சிவப்பிரகாசத்தின் உடல் கிடத்தப்பட்டிருக்கும் கட்டிலில், கால்மாட்டில் உட்கார்ந்திருந்தாள். சிவப்பிரகாசத்தின் சிரம் தலையணையில் சாய்ந்து விழுந்திருந்தது. அப்பொழுது அவருக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்பதைப் பொன்னி

டாக்டர் பரசுராமன் மரகதத்தின் முகத்தைப் பார்த்தார். அவருடைய நம்பிக்கை இழந்த முகக் குறியிலிருந்து மரகதம் உண்மையை அறிந்து கொண்டவள் போல், "இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்! இன்னும் கொஞ்ச நேரம்கூடத் தாங்காது. என்னால் செய்யக்கூடியது ஒன்றுமே இல்லை" என்றார் டாக்டர்.

கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த சிவப்பிரகாசத்தின் உடல் சிறிது அசைந்தது. கடைசியாக ஒரு பெரிய முனகலும் மூச்சும் அவ்வளவுதான். சிவப்பிரகாசத்தின் ஆவி பிரிந்தது.

அந்தச் சமயத்தில் மரகதத்தின் கண்கள் சிவப்பிரகாசத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்த முகத்தில் சோகம் பரவியது. அவள் சட்டென்று அந்தப் பிரேதத்தின் மீது விழுந்து குலுங்கக் குலுங்க அழுதாள்.

டாக்டர் பரசுராமனும் பொன்னியும் சிலைபோல் அசையாமல் நின்று கொண்டிருந்தனர். அந்த அழுகுரலைக் கேட்டுச் செங்கம்மா உள்ளே வந்து சிறிது நேரம் நின்று பரபரப்போடு பார்த்துவிட்டுச் சட்டென்று வெளியே சென்றாள்.

மரகதம் தன் துயரத்தை ஒருவிதமாக அடக்கிக் கொண்டு மெதுவாக எழுந்து நின்று டாக்டரைப் பார்த்தாள். "உங்களுக்கு இவரைக் கத்தியால் குத்தியது யாரென்று தெரியுமா!" என்று ஈனக் குரலில் கேட்டாள்.

"தெரியும்" என்றார் டாக்டர் வேறெங்கோ தன் பார்வையைச் செலுத்திய வண்ணம் அடக்கமான குரலில்.


"உங்களுக்குப் பொன்னி சொல்லி இருப்பாள்.

கூர்மையானது !



மலிவானது !

செவன் ஓ' கிளாக் பிளேடுகள் உயர்தர எஃகினால் செய்யப்பட்டவை. மிகக்கூர்மையாக இருக்க அவற்றின் முனைகள் மூன்று தடவைகள் தீட்டப்படுகின்றன. அவை மிகக்கூர்மையாக இருப்பதால் ஒவ்வொரு பிளேடைக் கொண்டு சுத்தமாக பலதடவைகள் க்ஷவரம் செய்து கொள்ள முடிகிறது. அவற்றை அதிக காலம் உபயோகிக்க முடிவதால் அவை சிக்கனமானவை.



7 o'clock

ஸெவன் ஓ'கிளாக் ஸ்லாட்டட் பிளேடுகள்



10 பிளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ. 1



குடும்ப ஆரோக்கியத்தைப் பாதுகாக்க சாதாரண உணவு போதாது என்று டாக்டர்களுக்குத் தெரியும். குறைபாடுகளை நிவர்த்தி செய்து குடும்பத்தில் ஆரோக்கியமும் சந்துஷ்டியும் நிலைக்க ஓவல்டின் அதிகப்படியான போஷாக்கு அளிக்கிறது. இந்த ருசியான உணவு பானத்தில் சேர்ந்துள்ள இயற்கை உணவுகளும் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால் பழுத்த பார்லிமால்ட், சிறந்த கோக்கோ, இயற்கை பாஸ்படைட்கள் பி & டி விடமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விடாமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினைப் போல் சிறந்தது வேறு கிடையாது. பெரியவர்கள் திடசாலிகளாக இருக்க ஓவல்டின் பருகவேண்டும். இது குழந்தைகளுக்கு வளர்ச்சியைத் தூண்ட உதவுகிறது. இரவில் நித்திரைக்குமுன் சாப்பிட்டால் ஆழ்ந்த, சுகமான நித்திரையைத் தருகிறது. போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: கெறாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லி-ட்.



OV. 326



கன்னடக் கதை: ஆர். பீ. குல்கர்னி மொழிபெயர்ப்பு: வாஞ்சி

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., பி. எச். டி. பட்டங்களுடன் பிரமாதமாக விளங்கினான். அவன் எத்தனை பட்டங்கள் பெற்றால் என்ன! எனக்கு அவன் என் பால்ய நண்பனான வெறும் கிருஷ்ணமூர்த்திதானே!

சரித்திர ஆராய்ச்சி என்றால் கிருஷ்ணமூர்த்திக்கு ஒரே பைத்தியம்! கலாசாலையில் வாசிக்கும்போதே அவனுக்குப் பண்டைய சரித்திரங்களையும் கல்வெட்டுகளையும் ஆராய்ச்சி செய்வதில் தனி ஆசை. அவன் தசரா, கோடை விடுமுறைகளில்கூட ஓய்வு எடுத்துக் கொள்ள மாட்டான். எங்கேயாவது மூலை முடுக்குகளில் உள்ள கல்வெட்டுகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பான். விசேஷ நாட்களில் மாமனார் வீட்டுக்குக் கூடப் போகாமல் கல்வெட்டு ஆராய்ச்சியில் மூழ்கியிருப்பான்! எனவே, "மூர்த்தி, நீ புராதன சாஸனங்கள் செதுக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு கல்லைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாம், அப்பா!" என்று நாங்கள் அவனை அடிக்கடி பரிகாசம் செய்வது வழக்கம்.

எம். ஏ. பரீட்சையில் தேறியதும் மூர்த்திக்கு ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்தது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அதை அவன் ராஜிநாமா செய்துவிட்டான். அவனது கல்வெட்டு ஆராய்ச்சிக்கு உத்தியோகம் இடையூறாக இருந்ததே ராஜிநாமாவுக்குக் காரணம்!

எனினும் கல்வெட்டு ஆராய்ச்சியில் அவனுக்கு இருந்த அபூர்வமான திறமையைப் பாராட்டாதவர்கள் இல்லை. அதனால் அவனுக்குக் கீர்த்தியும் கிடைத்தது. அவனது ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பாராட்டி அதிகாரிகள் அவனுக்கு டாக்டர் பட்டமும் அளித்தார்கள்.

"கல்வெட்டுகள் புராதன சரித்திரங்களைக் கூறும் நாக்குகள். அவைகள் இல்லாவிட்டால் நாம் ஆயிரக்கணக்கான வருஷத்திய அபூர்வ வரலாறுகளை இழந்தவர்களாவோம்" என்று மூர்த்தி அடிக்கடி கூறுவது உண்டு.

அப்படியிருக்கையில் சில மாதங்கள் கழித்து ஒரு நாள் மூர்த்தியை நான் சந்திக்க நேர்ந்தது.

"கல்வெட்டுகளை ஆராய்ச்சி செய்வதில் காலத்தை வீணாக்குவோர் மடையர்கள் என்பது என் அபிப்பிராயம்" என்று மூர்த்தி ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டான். அது என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அதைக் கேட்டபோது என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை.

மூர்த்தி மேலும் தொடர்ந்து சொன்னான்.

"ஆமாம், கல்வெட்டுகளை ஆராய்வது முட்டாள்தனம்தான். உண்மையான சரித்திரங்களை நீ அறிந்துகொள்ள வேண்டுமாயின் கல்வெட்டுகள் இருக்கும் திசையைக்கூட நீ பார்க்கக் கூடாது என்று சொல்லுவேன். கல்வெட்டு ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நான் எழுதிவைத்திருந்த குறிப்புகளையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கிவிட்டேன்" என்றான் கடைசியாக.

"எப்போது இந்த முடிவுக்கு வந்தாய்!" என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.


"இரண்டு வருஷங்களுக்கு முன், ஒரு சமயம் சித்த நாயக்கர் கிராமத்தில் உள்ள கோவில் கல்வெட்டை ஆராய்ச்சி செய்வதற்காகச் சென்றிருந்தேன். அதிலிருந்து ஆராய்ச்சியை அடியோடு விட்டு விட்டேன்!"

"ஏன்! என்ன காரணம்!"

"அன்றுதான் என்னைப் பிடித்திருந்த சித்தப்பிரமை அகன்றது. ஆராய்ச்சி நிபுணன் என்று நான் கொண்டிருந்த கர்வம் ஒழிந்தது. அதுவரையில் நான் செய்து வந்தது சரித்திர ஆராய்ச்சியல்ல, பொய்ப் பிரசாரம் என்பதைத் தெரிந்து கொண்டேன்."

"இந்தக் கட்டுக் கதையையெல்லாம் நம்பிவிடுவேன் என்று நினைக்கிறாயா!"

"நீ என்ன, யாருமே நம்பமாட்டார்கள். சித்த நாயக்கர் கோவிலுக்கு என்னுடன் கூட வந்த சிங்காரவே நம்பவில்லை. அவன் கொண்டு வந்த ரொட்டியை நான்தான் திருடிவிட்டேன் என்றும், அதை மறைப்பதற்காக ஏதோ கதை கட்டிவிட்டேன் என்றும் அவன் நினைத்துக் கொண்டான். நீ எங்கு நம்பப் போகிறாய்! இருந்தாலும் உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களை நான் சொல்லி



நடுவில் இருப்பவர்:—இவர்களைத் தெரியுமோ உங்களுக்கு?

குடுமி ஆசாமி:—அவர் ஒல்லியாக இருந்தபோது தெரியும். இப்பொழுது யாரென்று தெரியவில்லை!

விடுகிறேன். நான் ஆராய்ச்சியைக் கைவிட்டது சரியா, தப்பா என்பதைப் பிறகு நீயே முடிவு செய்து கொள்'' என்ற பூர்வ பீடிகையுடன் மூர்த்தி கதையை ஆரம்பித்தான்.

*   *   *

சித்த நாயக்கர் கிராமத்திலிருந்து நாலு மைல்களுக்கு அப்பால் ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலில் பல அபூர்வமான கல்வெட்டுகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருந்தேன். எனவே, அவற்றை ஆராய்ச்சி செய்வதற்காக உற்சாகத்துடன் புறப்பட்டுச் சென்றேன்.

எனக்குத் துணையாக வந்த லிங்கா, ஆராய்ச்சிக்குற்ற சாதனங்கள் அடங்கிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

ஒரு மலை உச்சியில் உள்ள அந்தக் கோவிலுக்கு நாங்கள் தட்டுத் தடுமாறிக் கொண்டு செல்லுவதற்கு ஒரு மணி நேரம் ஆயிற்று. அந்த மலையின் மூன்று புறத்திலும் பள்ளத்தாக்காகவும், மரங்கள் அடர்ந்து காடாகவும் இருந்தன.

வழியிலிருந்த ஓர் ஓடையில் தண்ணீர் ஜிலுஜிலு வென்று ஓடிக் கொண்டிருந்தது.

அந்தக் கோவிலுக்கு அடிக்கடி யாரும் வருவது வழக்கமில்லை. எனவே அதற்குச் சரியான பாதை எதுவும் இல்லை. அதனால் செடிகளையும் கொடிகளையும் கஷ்டப்பட்டு விலக்கிக் கொண்டு நாங்கள் செல்ல வேண்டியிருந்தது.

கோவிலுக்கு எதிரே பிரம்மாண்டமான அரசமரம் ஒன்று இருந்தது. வெகு தூரத்திலிருந்து அந்த மரமும் கோவிலும் தெரிந்ததால், அங்கு வர விரும்புவோர் திசை தெரியாமல் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை.

எனினும் கோவிலின் பின்புற மெல்லாம் முற்றிலும் இடிந்து பாழாகக் கிடந்தது.

உள்ளே சென்றதும் இரண்டு பெரிய் கற்கள் இருந்தன. "இந்தக் கற்களில்தான் சரித்திரப் பிரசித்தி பெற்ற சித்த நாயக்கரின் சரித்திரம் எழுதி வைக்கப் பட்டிருப்பதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள்'' என்றான் லிங்கா.

அந்தக் கற்கள் ஒவ்வொன்றும் ஓர் ஆள் உயரம் இருந்தன. அவற்றின் மீது மண் படிந்திருந்தது. எனவே, அந்த மண்ணை அகற்றிச் சுத்தப்படுத்தினாலன்றி அவற்றில் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்களைக் குறித்துக் கொள்வது முடியாத காரியம்.

முதலில் சுத்தமாக மண்ணை அகற்ற வேண்டும். பிறகு மேற்படி கற்களைத் தண்ணீரால் கழுவி, அவற்றின் மீது பச்சிலைகளைத் தேய்த்தால்தான் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும்.

இதற்குச் சில மணி நேரமாவது செல்லும். மறுநாள் திரும்பி வருவதென்பது எளிதான காரியம் அல்ல. அவ்விதம் போய் விட்டு வருவது அநாவசியம் என்றும் எனக்குத் தோன்றியது. எனவே இரவு அங்கேயே படுத்துக் கொண்டிருந்து விட்டுக் காலையில் எழுந்து மேற்படி கல்வெட்டுகளைப் பார்த்து அதிலிருக்கும் விஷயங்களைக் குறித்துக் கொண்டு போவது என்று தீர்மானித்தேன்.

என்னுடைய தீர்மானத்தை நான் லிங்காவிடம் கூறிய போது, அவன் முகத்தில் தாண்டவமாடிய திகில் என்னைத் திகைக்க வைத்தது.

"ஏன் இமை கொட்டாமல் இப்படி என்னைப் பார்த்து விழிக்கிறாய்!'' என்று கேட்டேன்.

"சூரியன் அஸ்தமிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது. எனவே, இதை யெல்லாம் மேலெழுந்த வாரியாகப் பார்த்து விட்டு நாம் உடனே புறப்பட்டு விட வேண்டும். இரவில் இங்கு தங்குவது என்பதை நினைக்கும் போதே என் உடல் நடுங்குகிறது. இந்த இடத்திலே பேய் பிசாசுகள் கூட இரவில் தங்குவதற்குப் பயப்படும்! நீங்கள் வெளியூரைச் சேர்ந்தவராதலால் 'இங்கு தங்கலாம்' என்று வெகு சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்'' என்று சொன்னான் லிங்கா.

மற்றும் அந்த இடத்தைப் பற்றி அவன் கூறிய விவரங்களைக் கேட்டபோது என் உடல் சிலிர்த்தது. என்னவாயினும் சரி, வந்த காரியம் முடியாமல் திரும்பிச் செல்லுவதில்லை என்று என் மனதுக்குள் உறுதி கொண்டேன். அந்தக் கல் வெட்டுகளில் எத்தனை இரகசியங்கள் அடங்கி யிருக்கின்றனவோ!

ஆயினும் என்ன! என்ன சொல்லியும் லிங்காவைச் சமாதானப் படுத்த முடியவில்லை. கடைசியில் அவன் வழிக்கு வரும்படி செய்ய ஒரு யுக்தியைக் கையாண்டேன்.

"லிங்கா! இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கே எதற்கு வந்தேன் என்ற இரகசியம் உனக்குத் தெரியுமா! இந்தப் பாறாங்கற்களைத் தரிசனம் செய்வதற்காக அல்ல. இங்கு ஓரிடத்தில் புதையல் இருக்கிறது. அதைக் கண்டு பிடிப்பதற்காகத்தான். புதையல் எங்கே இருக்கிறது என்ற இரகசியத்தை இந்தக் கல்வெட்டுகளி லிருந்துதான் கண்டுபிடிக்க வேண்டும். அது கிடைத்தால் அதில் உனக்கும் பங்கு உண்டு என்பதை நான் சொல்ல வேண்டுமா! பயந்தால் புதையல் கிடைக்க வழியில்லை. என்ன சொல்லுகிறாய்!'' என்றேன்.

லிங்கா ஆச்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் வாயைப் பிளந்தான். புதையல் கிடைக்கவேண்டுமாயின் பயப்படக் கூடாது என்பதை அவன் பயந்த மனமும் ஆமோதித்தது!

பிறகு லிங்காவே என்னை உற்சாகப்படுத்தலானான்! கற்களில் படிந்திருந்த மண்ணை அலம்புவதற்காக அவனே தூரத்திலிருந்த ஓடைக்குச் சென்று மூன்று நாலு பானை தண்ணீர் கொண்டு வந்தான்! கற்களைச் சுத்தம் செய்த பின் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்ததால் பாதியைக் குறித்துக்கொண்டு மீதி விவரங்களை மறுநாள் குறித்துக் கொள்வதென்று முடிவு செய்தேன்.

சூரியன் அஸ்தமித்து எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. நாங்கள் இருவரும் படுத்துத் தூங்குவதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை.

கண்ட இடத்தில் படுத்த உடனேயே தூங்கி விடுவது சிங்காவுக்கு வழக்கமாதலால், சிறிது நேரத்தில் அவன் குறட்டை விட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டான். இரவில் அங்கு தங்கவே பயந்த சிங்கா இப்போது யாதொரு பீதியுமின்றித் தூங்கிக் கொண்டிருந்தான். முதலில் பயப்படாத எனக்கோ மேற்படி கோவிலின் சூழ்நிலை இனம் தெரியாத பயத்தைக் கொடுத்தது.

என்னைச் சுற்றிப் பலவிதமான சத்தம் கேட்கத் தொடங்கியது. அந்த அரச மரத்தின் மேல் ஏற்படும் சத்தத்துக்குக் காரணம் என்ன என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை வௌவால்கள் அடிக்கடி பறந்து சென்றதால் ஏற்பட்ட சத்தமாக இருக்கலாம்.

அந்த நிலையில் தூக்கம் வந்தாலும் வராவிட்டாலும் கண்களை மூடிக் கொண்டு பேசாமல் படுத்திருப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தேன்.

அவ்வாறு சில நிமிஷ நேரம்தான் படுத்திருந்தேன். பிறகு திடீரென்று என்னை யாரோ தாண்டிக் கொண்டு ஓடுவது போல் தோன்றியது. அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். நல்ல வேளையாக யாருமில்லை. வீண் பிரமை என்று மனதைத் தேற்றிக் கொண்டேன்.

அதே சமயம் ஒரு மனிதன் சிறிது தூரத்தில் இருந்த ஒரு கல்லின்மீது உட்கார்ந்து கொண்டு சுருட்டுக் குடிப்பது தெரிந்தது. எங்கள் இருவரைத் தவிர அங்கு வேறு யாரும் வரக் காரணமில்லை. சிங்காதான் அங்கு போய் உட்கார்ந்து சுருட்டுப் பிடிக்கிறானோ என்று நினைத்தேன்.

ஆனால் நான் திரும்பிப் பார்த்தபோது சிங்கா முதலில் படுத்த இடத்திலேயே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு வேளை என்னைப் போல் வேறு யாராவது மேற்படி கோவிலுக்கு வந்து இரவில் திரும்பிப் போகாமல் தங்கி இருக்கலாம் என்று மனத்தைச் சமாதானம் செய்து கொண்டேன்.

ஆனால் அந்த மனிதனின் தேகம் எலும்புக் கூடைப்போல் இருந்தது, என் பீதியை அதிகப்படுத்தியது. தவிர அவன் வாயிலிருந்து கிளம்பிய புகை நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டே வந்தது. கடைசியில் அவன் வாயிலிருந்து கிளம்பிய அக்கினி ஜ்வாலையில் கோவில் முழுதும் தெளிவாகத் தெரிந்தது!

அதே சமயம் அந்த உருவம் என்னை உற்றுப் பார்ப்பதும் நன்றாகத் தெரிந்தது.

அது என்னைச் சிறிது நேரம் வெறிக்கப் பார்த்து விட்டு, "நீ யார்!" என்று கேட்டது.

அந்தக் கேள்விக்கு என் வாயிலிருந்து யாதொரு பதிலும் வரவில்லை. "நீ யார்!" என்று நான் பதிலுக்குப் பதில் கேட்க விரும்பினேன். ஆனால் பீதி காரணமாக என் வாயிலிருந்து வார்த்தைகள் ஒன்றும் வெளிவரவில்லை.

அந்த உருவம் மறுபடியும் என்னைப் பார்த்து "நீ யார்!" என்று கேட்டது.

வாயைத் திறக்க முயன்றேன்; முடியவில்லை.

"என்னைக் கண்டு பயந்து விட்டாயா!" என்று கேட்டது அந்த உருவம்.

இந்தக் கேள்விக்கும் என்னால் எந்தவிதமான பதிலும் கூறமுடியவில்லை.

"இந்த இடம் கோழைகளுக்கு உற்றதல்ல. இரவு நேரத்தில் நீ இங்கு வந்திருப்பதால் உன்னைத் தைரியசாலி என்று நினைத்தேன். ஆனால் நீயோ பயங்கொள்ளியாக இருக்கிறாய்" என்று சொல்லி விட்டு அந்த உருவம் பயங்கரச் சிரிப்பொன்று சிரித்தது. அந்தச் சிரிப்பில் அதன் உடலில் உள்ள எலும்புகள் ஆடும் சப்தம் நன்றாகக் கேட்டது!

இந்தச் சமயத்தில் மிகவும் கஷ்டப்பட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். என் மனப் பிரமை காரணமாக அந்த மனிதனை ஒரு பேய் என்று எண்ணி விட்டோமோ என்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று.

"நீ யார்!" என்று பதிலுக்குக் கேட்டேன்.

"நான் யாரா! எவ்வளவு மடத்தனமான கேள்வி!" என்று கூறிவிட்டு மறுபடியும் அந்த உருவம் பேய்ச் சிரிப்பு சிரித்தது.

"நான் கேட்ட கேள்வி மடத்தனமானதா! நீ யார் என்பதை எனக்குச் சொல்லக் கூடாதா!" என்றேன் மறுபடியும்.

"நீ யார் என்பதை எனக்கு முதலில் சொல்லு" என்றது அந்த உருவம் அதிகாரத்துடன்.

"நான் ஒரு சரித்திர ஆராய்ச்சியாளன்."

"சரித்திரம் என்றால் என்ன!"

"சரித்திரம் என்றால் என்ன என்பது உனக்குத் தெரியாதா! புராதன சம்பவங்களைப் பற்றிய

★

எங்கேயாவது போகலாம்!

மனைவி :—இந்தத் தடவையாவது நாம் எங்கேயாவது போய்விட்டு வரலாம்...

கணவன் :—ஓ! பேஷாய்ப் போகலாம். உலகத்தைச் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வரலாம். என்ன சொல்கிறாய்?

மனைவி :—அதெல்லாம் வேண்டாம்! வேறு எங்கேயாவது போகலாம்.

★



உண்மையான விவரங்கள், அவற்றின் காரணங்கள் இவைதான் சரித்திரம் என்பது. பண்டைய நிகழ்ச்சிகளைப் பற்றிய பல விவரங்கள் பொது ஜனங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவைகளை ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்து தொகுத்து உருவாக்கி மக்களுக்குக் கொடுப்பதே என் போன்ற ஆராய்ச்சியாளனின் வேலை !

"சரித்திரமாம் !...ஆராய்ச்சியாம் ! எல்லாம் மடத்தனம் ! கல்வெட்டுகளிலிருந்து உண்மைச் சம்பவங்களை அறிந்து கொள்ள விரும்புவதைப் போல் மடத்தனம் வேறு ஒன்றுமில்லை."

அந்த உருவம் இவ்விதம் மறுபடியும் கூறியதும் என் மனத்தில் இருந்த பீதி மறைந்து அவ்வுருவத்தின் மீது எனக்குக் கோபம் உண்டாயிற்று.

"சரித்திரத்தையும் ஆராய்ச்சியையும் பற்றி உனக்கு என்ன தெரியும்! இதோ இந்தக் கல்வெட்டுகள் எதைப் பற்றிக் கூறுகின்றன ! அதைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா !" என்று கோபத்துடன் கேட்டேன்.

அந்த உருவம் மறுபடியும் மயிர் சிலிர்க்கும்படியாகச் சிரித்து விட்டுச் சொல்லத் தொடங்கியது :

"அந்தக் கல்வெட்டுகள் யாரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன என்பது எனக்குத் தெரியும். மேற்படி கல்வெட்டுகளை நீ ஆராய்ச்சி செய்யப் போகிறாயா ! நீ அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவை யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன என்பதை நானே சொல்லி விடுகிறேன். 'கடசித்த நாயக்க மன்னன் மதத்தில் மிக்க பற்றுதல் உடையவன். நல்லவர்களைக் காப்பாற்றியவன். பொல்லாதவர்களை அழித்து நாசம் செய்தவன். அவன் காலத்தில் பசுக்கள் சம்ரட்சிக்கப்பட்டன ; ஏழைகளுக்கு ஏராளமாக நிலங்களும் வீடுகளும் தானம் செய்யப் பட்டன. அவன் பெரிய ராஜ்யத்தை உருவாக்கிய வீரன் ; அழகிய கோவிலை நிர்மாணித்த பக்தன் ; இணையற்ற கட்டழகியைக் காதலியாக, மனைவியாகப் பெற்ற பாக்கியசாலி' என்றெல்லாம் இந்தக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

"இதெல்லாம் சுத்தப் பொய். கூலி ஆட்களைக் கொண்டு மேற்படி கல்வெட்டுகள் செதுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஜனங்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நாயக்க மன்னனே அவ்வாறு கல்வெட்டுகளைத் தயாரிக்கச் செய்தான். அவன் புரிந்த மகா பாதகச் செயல்களை மறைப்பதற்காக முன் ஏற்பாட்டுடனேயே இந்தக் கல்வெட்டுகள் தயாரிக்கப்பட்டன.

"ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பதெனில் எவ்வளவு கொடுமைகளைச் செய்ய வேண்டும் என்பது உனக்குத் தெரியுமா ! கீர்த்தி ஏணியில் உச்சஸ்தானத்தில் இருப்பவர்களில் பெரும்பாலோர் கொடிய பாவங்களாகிற சாக்கடைகளில் புரண்டெழுந்தவர்கள் என்பதை நீ அறிவாயா !"

அந்த உருவத்தின் வார்த்தைகள் என் ஆராய்ச்சி, என் கொள்கை, என் வாழ்க்கையின் இலட்சியம் எல்லாவற்றையுமே தவிடு பொடி யாக்குவது போல் எனக்குத் தோன்றியது.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் ! இதையெல்லாம் உனக்கு யார் சொன்னது !" என்று கேட்டேன்.

"மூன்றாவது மனிதர் சொல்வதைக் கேட்பவன் நான் அல்ல. என் சொந்த அனுபவத்தில் நான் கண்ட உண்மையைத் தவிர வேறு எதையும் நான் கூறவில்லை. இதை நீ நம்பலாம்."

"உன் வயது என்ன !"

"என் வயது! மிகவும் வேடிக்கையான கேள்வி. இந்தக் கோவில் கட்டி எத்தனை வருஷங்கள் ஆகின்றன ! என் வயது என்ன ! இந்த இரண்டு கேள்விகளுக்கும் அதிக வித்தியாசமில்லை."

"நீ இந்தக் கோவிலை நிர்மாணித்ததாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் இந்தக் கோவிலின் இன்றைய பாழான நிலைமையைக் குறித்து நீ வருத்தப்பட மாட்டாயா !"

"ஆம், வருத்தப்படுகிறேன். எதற்காக வருத்தப்படுகிறேன், தெரியுமா ! இவ்வளவு காலமாகியும் இந்தக் கோவில் இன்னும் ஜனங்களுக்கு என்னைப் பற்றி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறதே என்பதற்காகத்தான் வருத்தப்படுகிறேன். இது அடியோடு அழிந்துவிடவில்லையே என்பதற்காகத்தான் வருத்தப்படுகிறேன். என் கீர்த்தி எங்கும் வியாபிக்க வேண்டும் என்பதற்காக நான் செய்த காரியங்கள் இன்று என்னுடைய ஆத்மாவின் விடுதலைக்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றன. என் புகழை உலகத்துக்கு எடுத்துக் கூறும் இந்தப் பாழும் கற்களை நான் எத்தனை நூற்றாண்டுகளாகச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பது ! எனக்கு விமோசனம் இல்லையா ! இந்தக் கல்வெட்டுகளில் இருந்ததை நீ குறித்துக் கொண்டிருந்தால் அதையெல்லாம் தீயில் போட்டு எரித்து விடு. அது வெளியாகிவிட்டால், பிறகு இந்த உலகம் உள்ளளவும் நான் கதிமோட்சமின்றி இப்படியே இந்த இடத்தில் அலைந்து கொண்டிருக்கும்படி நேர்ந்து விடும்."

"அது இருக்கட்டும். இந்தக் கோவில் எப்போது நிர்மாணிக்கப்பட்டது !" என்று கேட்டேன்.

"அலாவுதீன் கில்ஜி தென்னிந்தியா மீது படையெடுக்குமுன் இது நிர்மாணிக்கப்பட்டது."

"இந்தக் கோவிலை நிர்மாணித்தவர் யார் !"

"உனக்குக் கண்கள் இருக்கின்றன ; ஆனால் உன் கண்முன் இருப்பது தெரியவில்லை. நீ என்ன ஆராய்ச்சியாளன் !...இந்தக் கோவிலை நிர்மாணித்தவன் நான்தான். இப்பொழுது தெரிகிறதா !"

அந்த உருவம் இவ்வாறு கூறியதைக் கேட்டதும் என் இருதயமே நின்றுவிடும் போலிருந்தது. என் தேகம் முழுதும் உணர்ச்சியற்றுப் போயிற்று. என் கை கால்களை அசைக்க முடியவில்லை. அது வரையில் சிறியதாக இருந்த உருவம் அப்போது எதிரே இருந்த அரச மரத்தின் உயரத்துக்குச் சமமான ராட்சஸ உருவத்துடன் இருப்பதைக் கவனித்தேன். இன்னும் சில விநாடி நேரத்தில் என் வாழ்க்கை முடிந்துவிடப் போகிறது என்றே நினைத்தேன். அச்சமயம் சிறிது தூரத்தில் ஒரு புலியின் கர்ஜனை கேட்டது. நான் என் கண்களை இறுக மூடிக் கொண்டேன். (அடுத்த இதழில் முடியும்)

அகில உலக சிறு கதைப் போட்டியில் ஸ்ரீ பி. பத்மராஜு எழுதிய "புயல்" என்ற தெலுங்குக் கதைக்கு இரண்டாவது பரிசான 800 டாலர் கிடைத்தது.

ரெக்ஸோனா சோப்பின்
விலை மறுபடியும்
குறைக்கப்பட்டிருக்கிறது!

ரெக்ஸோனா சோப் தயாரிப்பவர்கள் மறுபடியும் விலை குறைத்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறார்கள். இப்பொழுது நீங்கள் ஒரு ரெக்ஸோனா சோப்பிற்கு அணா ஆறு (லோகல் வரிகள் உள்படாமல்) தான் கொடுக்கவேண்டும். சோப்பின் தரம் சிறிதளவும் மாற்றப்படவில்லை.



'கேடில்' கலந்த சோப் இது ஒன்றே

விலை இப்பொழுது அணா 6 தான்

(லோகல் வரிகள் உள்படாமல்)

RP. 98-X28

நல்லாடை அணிந்த ஆண்கள்

பளபளப்பான

பாதரக்ஷைகளை அணிகிறார்கள்



உலகில் சிறந்த ஆடைகளை நீங்கள் அணியலாம். ஆனால் பாதரக்ஷைகளை கொண்டுதான் உமது நாகரீகத்தை மதிப்பிடுவார்கள். நல்லாடையுடுத்த ஆண்கள் எல்லோரும் பளபளப்பான பாதரக்ஷையணிகிறார்கள். உலகமெங்கும் வெற்றிக்கு முதல்படியது. பாதரக்ஷையை கவனியுங்கள்—கீவி பாலிஷை உபயோகியுங்கள். அது அவற்றை மென்மையுறக்காப்பதுடன், பளபளப்பாகவும் பிரகாசமாகவும் இருக்கச் செய்கிறது. கீவி பாலிஷ் வேண்டுமென்று கேளுங்கள். எப்போதும் நல்ல தோற்றமளிக்க வேண்டுமென்று கருதுங்கள்.

கீவி

பாலிஷ் செய்யும் போதே
போஷாக்களிக்கிறது.



விநியோகஸ்தர்கள்: ஆர். ஏ. குட்ஸர் & கோ., மதராஸ் - 1

இன்றே

ஒரு டின்

வாங்குங்கள்



எல்லா பிரபல ஸ்டோர்களிலும் கிடைக்கும்

விடமின் B_1 சத்து சேர்ந்த உங்களுடைய மால்டெட் மில்க்

குறும்பு மணி!



ஒரு நாளும் இல்லாமல் அன்று குறும்பு மணி சீக்கிரமாகப் பள்ளிக்கூடத்துக்குப் போனான். போர்டைச் சுத்தமாகத் துடைத்து விட்டு நல்ல பிள்ளையாகத் தன் இடத்தில் உட்கார்ந்திருந்தான். உபாத்தியாயர் வந்ததும் மணியைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். பிறகு பையன்களை முந்தின நாள் கேட்ட கணக்கைப் போர்டைப் பார்த்துப் போடச் சொன்னார். பையன்கள் மௌனமாகச் சிரித்தார்கள். போர்டில் ஏதாவது இருந்தால்தானே! முதல் நாள் போர்டில் போட்டிருந்த கணக்கைத்தான் மணி சுத்தமாகத் துடைத்து விட்டானே! உபாத்தியாயர் அவனை வெளியில் துரத்தினார். மணி ஓடினான். வழியில் ஒரு கனமான மனிதர் ஒரு சின்ன முக்காலியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். மணி அவரைப் பார்த்து, "இந்த முக்காலி உங்களை எப்படித் தாங்குகிறது!" என்று கேட்டான். அவன் அப்படிச் சொன்னானோ இல்லையோ, முக்காலி முறிந்து மாமா கீழே உருண்டார். மணி ஓடி விட்டான்.



தம்பியின் கடிதம்

“ராசு”

என்றுமில்லாதபடி வீடு அமைதியாயிருந்தது. கல கல வென்று சிரித்துப் பேசும் ருக்குவின் குரல் கேட்கவில்லை. நான் வருவதற்குள் நாழிகையாகிவிட்டதே யென்று நூறு தடவை வாசலில் வந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மாவையும் காணவில்லை. என்ன விபரீதமோ !

கூடத்துக் குறட்டில் அம்மா கோபமே உருவெடுத்தபடி உட்கார்ந்திருந்தாள். சமையலறையில் விசித்து விசித்து அழுதபடி வேலை செய்து கொண்டிருந்தாள் ருக்கு. இதிலிருந்து ஏதோ யுத்தம் நடந்திருக்கிறதென்பது தெரிந்தது. நான் வந்து விட்டது தெரிவதற்காகத் தொண்டையை இரண்டு தரம் கனைத்துக் கொண்டேன். கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டுக் கொண்டபடி காப்பியைக் கொண்டுவந்து வைத்து விட்டுப் பேசாமல் திரும்பினாள் ருக்கு.

“என்ன நடந்தது, ருக்கு!”

“அம்மாவைக் கேளுங்கள், சொல்லுவார்.”

இவ்வளவு நேரம் சிலைபோல் அமர்ந்திருந்த அம்மா, திரும்பி உட்கார்ந்து கொண்டாள்.

“ஏன் ! ஆபீஸிலிருந்து அலுத்து வந்திருக்கும் அவன் வயிற்றெரிச்சலையும் கொட்டிக்கணுமோ!”

“இதோ பாரம்மா ! என்ன சண்டை? தயவு செய்து விவரமாகச் சொல்லேன்.”

“இதோ பார் ராமு! என்னாலே இனிமேல் இந்த வீட்டில் இருக்க முடியாது. கையிலே பணமிருந்தால் சரி. இல்லாவிட்டால் கடன் வாங்கியாவது என்னை ரயிலேற்றி அனுப்பிவிடு. நான் ஊருக்குப் போகிறேன்.”

“ஊருக்குப் போவது இருக்கட்டும். இங்கு நடந்த சண்டையைச் சொல்லு.”

“சொல்லுவதற்கு என்ன இருக்கிறது ! நான் என்ன வேற்று மனுஷியா ! எனக்கும் இந்த வீட்டில் அதிகாரம் செய்ய உரிமையில்லையா ! எனக்கில்லாத உரிமை நேற்று வந்த இவளுக்கு ஏது !”

“நான் உங்களை என்ன சொல்லி விட்டேன் ! என்னை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டுங்கள் ; வையுங்கள் ; என் குடும்பத்தைப் பற்றி மட்டும் பேசவேண்டா மென்று தானே சொன்னேன் ; அது ஒரு தப்பா !” என்று கேட்டாள் ருக்கு.



“இதோ பாரம்மா, மகராஜி ! உன் வாய்க்கு ஒரு கும்பிடு. உன்னிடம் நான் பேசவில்லையே ! அவன் கேட்டான் ; நான் சொல்லுகிறேன்.”

“ருக்கு ! நீ உள்ளே போ ! நான் அம்மாவிடம் எல்லாவற்றையும் பேசிக் கொள்கிறேன்.”

“இன்னும் சௌகரியமாய்ப் போய்விடும்; என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்வதற்கு !” என்று வருத்தத்துடன் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள் ருக்கு.

“நீ சொல் அம்மா !”

“வேண்டாண்டா, ராமு ! ஒருதரம் சண்டை போட்டது போதும். என் வயிறு கொதிக்கிறது. மீண்டும் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே. என்னை ஊருக்கு அனுப்ப வழி செய்துவிடு.”

சாப்பிடும்பொழுது ருக்குவிடம் கேட்டேன். சண்டையின் மூல காரணம் தெரிந்தால்தானே சமாதானம் செய்ய முடியும் !

“அம்மாவுக்கும் உனக்கும் என்ன தகராறு, ருக்கு !” என்று கேட்டேன்.

“அம்மாவுக்குப் பெரிய மனக்குறை. நான் சீரும் செனத்தியும் கொண்டு வரவில்லையாம்......”

“இதோ பார், நான் கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லு. பழைய சமாசாரம் எதற்கு ?”

“ஒன்றுமில்லை. வேலைக்காரிக்குப் புளி போடுவதை அம்மா பார்த்தார். அது ரொம்ப அதிகம் என்று சொன்னார். அம்மா காலத்திலே ஒரு புளியங் கொட்டையை வைத்துக்கொண்டு பத்துப் பாத்திரங்களைத் தேய்த்து விடலாம். இப்போ வருகிற வேலைக்காரிகளாலே அம்மாதிரி முடியுமா! அதைச் சொன்னால் ஒத்துக் கொள்ளுகிறாரா ! அவ்வளவு போடக்கூடாது, அதில் பாதிதான் போடணும் என்று சண்டை பிடித்தார். ஒரு புளியங் கொட்டையை வைத்துக் கொண்டு நீங்கள்தான் பாத்திரம் தேய்க்க வேண்டும் என்றேன். கோபம் வந்துவிட்டது. பழைய சமாசாரங்களையெல்லாம் இழுத்தார். நான் உங்களை மயக்கி விட்டேனாம். இல்லாவிட்டால் அவர் பேச்சைத் தட்டிக் கொண்டு என்னைக் கலியாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்திருக்க மாட்டீர்களாம் ! நான் ஏழை என்று தெரிந்து தானே கலியாணம் செய்து கொண்டீர்கள். சீரும் செனத்தியும் வரவில்லையென்று இப்பொழுது குறைப்படுவதில் என்ன பிரயோசனம் !”

“அம்மா சொல்லுவதைக் காதில் போட்டுக் கொள்ளாதே. இரண்டு கையையும் சேர்த்துத் தட்டினால்தானே சத்தம் உண்டாகும். நீயாக சற்று ஒதுங்கிப் போய் விடேன்.”

“எவ்வளவுதான் பொறுத்துக்கொள்ள முடியும்! மனத்தைக் குத்தும்படி வார்த்தைகளைச் சொன்னால் என்னால் சகிக்க முடியவில்லை.”

“இருக்கட்டும், வருத்தப்படாதே. நாளைக்கு இதற்கு ஒரு முடிவு செய்து விடுகிறேன்.”

அம்மா இவ்விதம் மாறுவாள் என்று நான் நினைக்கவில்லை. ருக்கு சீர் செனத்தி ஒன்றும்

கொண்டு வரவில்லை என்ற குறை இருக்கத்தான் இருக்கும். இது தெரிந்து நாமாக ஏற்றுக் கொண்ட காரியம் தானே! அதற்காக அவள் மனது புண் படும்படி பேசுவது நியாயம் ஆகுமா!



ருக்கு சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தவள். தூரத்து உறவினர் ஒருவர் அவளை வளர்த்து வந்தார். அவர்களும் பணக்காரர்கள் இல்லை. என் வீட்டுக்கு நான்கைந்து வீட்டுக்கு அப்பால் வசித்து வந்தனர். ருக்குவின் கள்ளம் கபடில்லாத குழந்தை உள்ளமும், கலகல வென்று சிரித்து விளையாடும் சுபாவமும், படாடோபம் ஒன்றுமில்லாத சாதாரண அழகும் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன. அவளைப் பற்றி அம்மாவிடம் சொன்ன போது முதலில் மறுத்து விட்டாள்.

"இவளை விட உனக்கு வேறு யாரும் கிடைக்க வில்லையா! கலியாணத்துடன் சரி, பிறகு நாம் ஒன்றும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. கலியாணமே நல்ல முறையில் செய்ய அவர்களுக்குச் சக்தியில்லையே!" என்றாள்.

அவளைச் சம்மதிக்கச் செய்வது பெரும்பாடாய்ப் போய் விட்டது. மாங்கல்யதாரணம் முடிந்ததும் நமஸ்கரிக்க வந்தவளை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு, "ருக்கு! எனக்குப் பெண் குழந்தை கிடையாது. அந்தக் குறையைத் தீர்க்க நீ வந்திருக்கிறாய்!" என்று கண்களில் நீர் ததும்ப உணர்ச்சியோடு சொன்னாள்.

வீட்டுக்கு வந்ததும் இது வரை அவளை இமைக்குள் வைத்துக் காப்பது போல் காத்து வந்தாள்! அவளை ஒரு வேலையும் செய்ய விட மாட்டாள். தானே முன் வந்து செய்வாள். இவ்வளவு அருமையாக வளர்த்து வந்த ருக்குவிடம் இப்போது வெறுப்புத் தோன்றக் காரணம் என்ன!

* * *

சில நாட்களில் எனக்கு வேலை அதிகமாகி விடும். மாலை நேரங்களில் கூட வீட்டுக்குப் போக முடியாது. இரவு நேரங்களில் கூட வீட்டுக்குப் போக முடியாது. அந்தக் காலங்களில் எல்லாம் ருக்கு என்னை எதிர்பார்த்துக் கொண்டு சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பாள். அப்பொழுதெல்லாம் அம்மா ருக்குவை வலுக் கட்டாயப் படுத்திச் சாப்பிட வைப்பாள்.

"அவன் கிடக்கிறான். அவனுக்கு என்ன வேலையோ! அதற்காக நீ பட்டினி கிடக்க வேண்டுமா! பசியோடு காத்துக் கொண்டிருக்க வேண்டுமா! அவன் வழியிலே கண்ட கண்ட ஹோட்டல்களில் நுழைந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு வருவான். அவனுக்காக நாம் பட்டினியோடு காத்துக் கொண்டிருக்க வேண்டுமா! நீ போய்ச் சாப்பிடு, ருக்கு!" என்று அன்பும் ஆதரவும் கலந்த குரலில் சொல்லி அவளைச் சாப்பிட வைப்பாள். அவளை வற்புறுத்தி அழைத்துச் சென்று சாப்பாடு போட்டுச் சாப்பிடச் சொல்லுவாள்.

சில நாட்கள் "ஏண்டா! ஒருத்தி, சின்னஞ்சிறிசு வீட்டிலே இருக்கிறாளே, அவளை ஒரு சினிமாவுக்கோ, பீச்சுக்கோ அழைத்துப் போகக் கூடாதா!" என்று என்னைக் கேட்பாள்.

தான் சேர்த்து வைத்திருக்கும் ரூபாயை என்னிடம் கொடுத்து ருக்குவைச் சினிமாவுக்கு அழைத்துப் போகச் சொல்லி என்னை வற்புறுத்துவாள்.

அவளுக்கு நல்ல புடவைகள் வாங்கிக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்துவாள். நான் எப்பொழுதாவது ருக்குவிடம் சற்றுக் கடுமையாகக் கோபித்துக் கொள்வேன். அந்த வேளைகளில் எல்லாம் அம்மா என்னைக் கண்டிப்பாள். "தாய் தந்தையற்ற குழந்தையை இப்படியெல்லாம் கோபித்துக் கொள்ளக்கூடாது. நீயே இப்படிக் கடிந்து கொண்டால் அப்புறம் அவளுக்கு வேறு யார்!" என்பாள்.

என் மனத்துக்குள் அம்மா அப்படிச் சொல்லுவது ரொம்பத் திருப்தியாக இருக்கும். இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளக்கூடாது என்று ருக்குவிடம் கடுமையாகவே இருப்பேன்.

அப்படி இருந்த அம்மாவுக்கு இப்பொழுது ருக்குவின் மீது வெறுப்பு ஏற்படக் காரணம் என்ன!

காரணம் இருக்கத்தான் இருக்கிறது. என் தம்பிக்குக் கலியாணம் நிச்சயமாய் விட்டது. பெரிய இடத்துப் பெண். கையிலே நாலாயிரம் ரொக்கம் கொடுக்கிறார்கள். தவிர, சீர், செனத்தி இவைகளைப் பார்க்கும் போது தன் முதல் மருமகள் ஒன்றும் கொண்டு வரவில்லையே என்ற குறை தோன்றுகிறது. அம்மா நினைத்தால் ஒரு விநாடியில் இந்த எண்ணத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடலாம். அவள் அப்படிச் செய்யாமல் அதற்குத் தண்ணீர் ஊற்றி வளர்த்து வந்து விட்டாள். அதனால் ருக்குவின் மீது வெறுப்புத் தோன்றி விட்டது. என்னதான் ருக்கு நல்லதாகச் செய்தாலும் அது அம்மாவுக்குக் கெடுதலாகவே பட்டுக் கொண்டு வருகிறது.

ருக்குவுக்கு அநாவசியமாகச் சண்டை போடுவதில் பிரியமே இல்லை. ஆகவே அவ்வப்பொழுது அம்மா சொல்லுவதைக் காதிலே போட்டுக்

கொள்ள மாட்டாள். அவள் திருப்பிப் பேசினால் தானே சண்டை! ஆனால் இதை அம்மா ருக்கு தன்னை அலட்சியம் செய்வதாக எடுத்துக்கொண்டு சண்டை போடுவாள். அவள் பேச்சின் நடுவே மனத்தைப் பிளந்து விடுவது போன்ற கொடூர வார்த்தைகள் வெளி வரும். மிருதுவான ஹிருதயத்தை உடைய ருக்குவால் அவைகளைத் தாங்க முடிவதில்லை. ஆகவே குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் அடிக்கடி நிகழலாயின.

அவைகளில் ஒன்றுதான் நேற்று நடந்தது. இந்தத் தடவை சண்டை அதிகமாய்ப் போய் விட்டது. சண்டையின் நடுவே அம்மா வரப் போகும் புது மருமகளைப் பற்றி இரண்டு வார்த்தைகள் உயர்வாகப் பேசியிருக்கிறாள். "அப்படியென்றால் அங்கே போவது தானே! என் உயிரை ஏன் வாங்குகிறீர்கள்!" என்று கேட்டு விட்டாள் ருக்கு. இது அம்மாவின் ரோஷத்தைக் கிளப்பி விட்டு விட்டது. ஒரே பிடியாய் ஊருக்குப் போவேன் என்று கிளம்பி விட்டாள்.

"இதோ பாரம்மா, இந்தச் சண்டைகளெல்லாம் சகஜம்தான். சில விஷயங்களில் உன் தலையீடு அவளுக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவள் தலையிடுவது உனக்குப் பிடிக்காமலிருக்கலாம். இதனால் ஒருவருக்கொருவர் மனத்தாங்கல் ஏற்படுவது இயற்கை. அதைப் பெரிது பண்ணாமல் மறந்து விட வேண்டும். ஏதோ சின்னவள்தானே என்று நீயும் ஒதுங்கிப் போக வேண்டும். பெரியவர்கள் சொல்லுகிறார்களே என்று அவளும் ஒதுங்கிப் போக வேண்டும். அப்படியில்லாமல்......"

"ராமு! உன்னிடம் உபதேசம் கேட்க நான் வரவில்லை. பேசாமல் என்னை ஊருக்கு ரயிலேற்றி விடுகிறாயா! இல்லாவிடில் நான் பட்டினி கிடந்து சாகட்டுமா! இனிமேல் இந்த வீட்டில் தண்ணீர் கூடச் சாப்பிட மாட்டேன்."

அதற்கு மேல் நான் என்ன செய்வது! அன்றிரவே அம்மாவை ஊருக்கு அனுப்பி விட்டேன்.

நாட்கள் நகர்ந்து ஓடின. ஒரு வருஷம் ஓடி மறைந்து விட்டது. அம்மா திரும்பவே யில்லை. என் தம்பியின் கலியாணத்துக்கு நானும் ருக்குவும் போயிருந்தோம். அப்போது என்னிடம் மட்டும் பேசினாள். ருக்குவிடம் பேசவே யில்லை. அம்மா விடமிருந்து கடிதம் வரும். அதில் என்னைப் பற்றி மட்டும் பிரமாதமாக விசாரித்திருப்பாள். ருக்குவைப் பற்றி ஒரு வார்த்தைகூட இருக்காது.

ஒரு நாள் அம்மா திடுதிப்பென்று வந்து சேர்ந்தாள். எனக்கே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. வீட்டிலே தண்ணீர் கூடச் சாப்பிட மாட்டேன் என்று சபதம் செய்தவள் திரும்பி வந்திருக்கிறாளே என்று வியப்பாயிருந்தது. ஏதாவது ருக்கு கேட்டு வைக்க அசம்பாவிதமாய்ப் போய்விடப் போகிறதே என்று பயந்து கொண்டிருந்தேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அம்மாவும் ருக்குவும் ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாய் தாயும் மகளும் போல் நடந்து கொண்டார்கள்.

ஊர்ப் பேச்சுக்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போது, "ஏண்டா! உனக்குக் கடிதம் எழுதக்கூட நேரமில்லையா! நீ பாட்டுக்குப் பேசாமல் இருக்கிறாயே! யாரிடமாவது காண்பித்தாயா!" என்று அம்மா கேட்டாள்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"எதைப் பற்றி அம்மா சொல்லுகிறாய்!"

"ருக்குவுக்கு இது நாலு மாதமாமே!"

"நிஜமாகவா அம்மா! என்னிடம் அவள் இதைப் பற்றிச் சொல்லவில்லையே!"

"கடிதாசு போட்டிருந்தாள். மனசும் பார்க்கணும் என்று அடித்துக் கொண்டது. ஓடி வந்து விட்டேன். பாவம்! அவளுக்கும் என்னை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்!" என்றாள்.

அவள் திரும்பி வந்ததற்கு ருக்குவின் கடிதம் மட்டும் காரணமல்ல. காக்கை உட்காருவதற்கும் பனம் பழம் விழுவதற்கும் சரியாயிருந்தது! அன்று வந்த தம்பியின் கடிதம் அதைத் தெரிவித்தது.

"அன்புடைய அண்ணாவுக்கு! நமஸ்காரம்.

அம்மா இவ்விடம் நாலு மாசம் வந்திருந்தாள். அப்பப்பா! இந்த நாலு மாசமும் படாதபாடு படுத்தி வைத்துவிட்டாள். சரோஜினியை அவள் படுத்திய பாடு சொல்ல முடியாது. நானாவது அவள் வார்த்தைகளைச் சகித்துக் கொண்டிருக்கலாம். சரோஜினியால் முடியுமா? அவள் திருப்பிக் கேட்டு விடுவாள். ஒரே சண்டை. எடுத்ததற்கெல்லாம் குற்றம் கண்டு பிடிப்பதென்றால் முடியுமா? அம்மாவை ஊருக்குப் போய்விடு என்று சொல்லி விட்டேன். அவ்விடம் வந்திருக்கிறாளா? ஊரிலேதான் இருக்கிறாளா? நீ எப்படித்தான் அவளைச் சமாளிக்கிறாய்? என்ன இருந்தாலும் மன்னி சாமர்த்தியக்காரிதான். சீனு."

இப்போதுதான் ருக்குவின் உயரிய குணங்களும் உண்மையான அன்பும் அம்மாவுக்குத் தெரிந்தன. ருக்குவும் கடிதம் எழுதியிருக்கிறாள்.


மீண்டும் எங்கள் குடும்பம் கல கல வென்று சந்தோஷத்தோடு செல்ல ஆரம்பித்தது.



காதணி விழா

★

கல்கி அச்சக போர்மென் ஸ்ரீ டி. எம். ராஜபாதர் அவர்களின் குமாரிகளான சௌ. கஸ்தூரி, சௌ. ஹேமாவதிக்கும் புதல்வன் சிரஞ்சீவி பாலசுந்தரத்துக்கும் சென்ற 9-3-1952ம் தேதி சென்னை, ஞானப்பட்டாளம், ஆஞ்சநேயர் ஆலயத்தில் காதணி விழா நடைபெற்றது. மேற்படி விழாவுக்கு நண்பர்களும் உறவினர்களும் பிரமுகர்களும் திரளாக விஜயம் செய்து குழந்தைகளை ஆசிர்வதித்துச் சிறப்பித்தனர். குழந்தைகள் பல்லாண்டு வாழ நாமும் வாழ்த்துகிறோம்!



அல்லிக் குளம் வள்ளி

'பகீரதன்'

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நீலயாரி தங்க மூத்து பாக்கு இடிப்பதை நிறுத்தினர். பாக்கு உரலில் இருந்த வெற்றிலைப் பாக்குத் தூளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். மாலை நேரம் மறைந்து போன அந்த இருளின் அமைதியில் கவர்க் கோழியின் சத்தம் 'ஞொய்' என்று கேட்டது. கிழவர் தன் சிவப்பு விழிகளைக் கருத்து வரும் இருளில் அகலத் திறந்து கொண்டு மேலே கதையை ஆரம்பித்தார்:

"வீரப்பனைத் தேடிக்கொண்டு வள்ளி விரைந்து சென்று கொண்டிருந்தாள். சந்திரனின் ஒளி பட்டு எங்கு பார்த்தாலும் பகல் போலிருந்தது. தூரத்தில் இருப்பதைக் கூட நன்றாகப் பார்க்க முடிந்தது. வள்ளியின் பெரிய கருத்த கண்கள் கோபத்தால் நெருப்புத் தணல்போல ஜ்வலித்தன. எலுமிச்சம்பழ நிறத்தையொத்த அழகிய காதுகள் கரிய அவள் கூந்தலுக்கு இடையிலிருந்து எட்டிப் பார்த்தன. அவிழ்ந்து போயிருந்த அவள் சுருண்ட கூந்தல் தோள்களில் புரண்டு கொண்டிருந்தது. அடிக்கடி முகத்தை வந்து மறைத்த அந்தக் கரிய கூந்தலைத் தள்ளிவிட்டுக் கொண்டே அவள் சென்று கொண்டிருந்தாள்.

"வீரப்பன் வீட்டை அடைந்தாள் வள்ளி. வாசலில் சற்றுத் தயங்கி நின்றாள். சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்தாள். யாரையும் காணவில்லை. கிடு கிடுவென்று திறந்திருந்த அந்த வீட்டுக்குள் புகுந்தாள். வீட்டுக்குள்ளும் யாரையும் காணவில்லை. கொல்லைப் பக்கம் சென்றாள். நாங்களும் அவளைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம். கொல்லையில் நூந்தாறு தென்னை மரங்களும் ஒரு பவழ மல்லிகை மரமும் இரண்டு மாமரங்களும் இருந்தன. அதற்கு மத்தியில் கைப்பிடியுடன் கூடிய கிணறு ஒன்று இருந்தது. அதற்குச் சற்றுத் தூரத்தில் இருந்த மேட்டின்மீது வீரப்பன் வானத்துச் சந்திரனைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பின்னால் சென்று வள்ளி நின்றாள். சற்று நேரம் அங்கு மௌனம் குடிகொண்டிருந்தது. வள்ளி நின்று கொண்டிருந்த இடத்தில் பவழமல்லிகை மலர்கள் உதிர்ந்து கிடந்தன. நிலவொளியில் அவை முத்துக்கள்போல் மின்னின. வள்ளி ஒரு பொற் பாவைபோல் நின்று கொண்டிருந்தாள். அந்தக் கொல்லைப்புறம் முழுவதும் பவழ மல்லிகையின் மணம் 'கம்'மென்று வீசிக் கொண்டிருந்தது.

"வள்ளி ஒரு தரம் கனைத்தாள். வீரப்பன் திரும்பவில்லை. மீண்டும் ஒரு முறை பலமாகக் கனைத்தாள். திடுக்கிட்டுத் திரும்பினான் வீரப்பன். ஒரு முறைக்கு இரு முறையாக வள்ளியை ஏற இறங்கப் பார்த்தான். 'வள்ளியா! கடைசியில் என்னைத் தேடியே வந்துவிட்டாயா! நான் எவ்வளவோ பாக்கியசாலி. வள்ளி! நீ நம்பமாட்டாய். நான் இப்பொழுது உன்னையேதான் நினைத்துக் கொண்டிருந்தேன். உன் அழகுருவத்தைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன். உன்னுடைய மலர்ந்த முகத்தை வானத்துச் சந்திரனில் பார்த்தேன். மனம் குளிரப் பார்த்துக் கொண்டிருந்தேன். உன் கை வளைகளின் சத்தத்தைத் தென்னை ஓலைகளின் சல சலப்பில் கேட்டேன். காது குளிர அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். உன் கனைப்புச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் இதய ராணியே எதிரில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். என் காதல் நிறைவேறும் காலம் நெருங்கிவிட்டது வள்ளி! அடாடா! நின்றுகொண்டே இருக்கிறாயே. வா; இப்படி வந்து என் அருகில் உட்காரு' என்று சொல்லிய வண்ணம் எழுந்தான்.

"வள்ளி அவனை வெறிக்கப் பார்த்துக்கொண்டு உயிரற்ற சிலைபோல நின்று கொண்டிருந்தாள். அவள் வேகமாக மூச்சு விடுகிறாள் என்பது விம்மி எழும் அவள் மார்பிலிருந்து தெரிந்தது. நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அருகிலிருந்த புதரில் ஏதோ சலசலப்பு ஏற்பட்டது. பாம்பு ஒன்று சீறும் பயங்கரச் சத்தம் காதில் விழுந்தது.

"உன்னிடம் காதல் வார்த்தை பேச வரவில்லை. நீ செய்த அக்கிரமத்தைப் பற்றி உன்னை நேரிலேயே கேட்கலாம் என்று தான் வந்தேன். தேச பக்தன் சிதம்பரத்தின் மண்டையை உடைத்தாயே அந்தக் கொடுஞ் செயலைக் கேட்டு விட்டுப் போகத்தான் வந்தேன் !' என்று சீறினாள் வள்ளி. அவள் குரலில் இருந்த கடுமையும் கோபமும் வீரப்பனைத் திடுக்கிடச் செய்து விட்டது. திடீரென்று ஏதோ தன் தலையில் மோதியது போலத் தலையைப் பிடித்துக் கொண்டான். வாய் பேசாமல் நின்று கொண்டிருந்தான். ஆத்திரத்தால் அவன் உடல் கிடுகிடுவென்று ஆடிக் கொண்டிருந்தது. அவன் கைகள் ஒன்றை ஒன்று பிசைந்து கொண்டிருந்தன. வீரப்பனும் வள்ளியும் ஒருவரை ஒருவர் கோபமாகப் பார்த்துக் கொண்டனர். நானும் ஆறுமுகமும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆறுமுகம் மட்டும் அமைதியின்றி இருந்தான். எனக்கும் மேலே என்ன நடக்குமோ என்று ஒரு படபடப்பு இருக்கத்தான் செய்தது.



"வீரப்பன் வாய் திறந்து பேசினான். 'வள்ளி ! நான் சொல்வதைக் கேள். அந்தச் சிதம்பரத்தின் மண்டையை உடைப்பதாயிருந்தால் அதை என்றைக்கோ செய்திருப்பேன். என்னை யாராலும் தடுத்திருக்க முடியாது. உன் மனம் நோகுமே என்றுதான் அதைச் செய்யவில்லை. உன் காதலை வேண்டி நான் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. யாரோ என்மீது வீண் பழி சுமத்தியிருக்கிறார்கள்' என்றான்.

"நீ அக்கொடிய காரியத்தைச் செய்யவில்லையா ! அப்படியானால் சிதம்பரத்தின் மண்டையை உடைத்தது யார் ! நாலைக்கு ஊரார் முன்னிலையில் சிதம்பரத்தின் மண்டையை நீ உடைக்கவில்லை என்று சொல்லுவாயா!' என்று கேட்டாள் வள்ளி.

"பல பேர் முன்னிலையில் கைதியைப் போல் நின்று கொண்டு அப்படிச் சொல்லுவது வீரப்பனுக்கு அவமானமாகத் தோன்றியது. 'வள்ளி ! என்னை நீ மிகவும் கோழையாக்க முயலுகிறாய். நான்தான் அவனைத் தொடவில்லை என்று சொல்லி விட்டேனே. இதை நீயே அவர்களிடம் சொல்லி விடேன். என்னை ஏன் எல்லோர் முன்னிலையிலும் அவமானப் படுத்தப் பார்க்கிறாய் ! நான் உன்னை மனமாறக் காதலிக்கிறேன். அதற்காக நான் என் மானத்தை, மரியாதையை இழக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்று சொல்லுகிறேன். நீ வேறு யாருடனாவது வாழுவதை மட்டும் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என்றான்.

"'நீ என்னவேண்டுமானாலும் நினைத்துக்கொள். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் வள்ளியை அவ்வளவு சாதாரணப் பெண்ணாக நினைத்து விடாதே ! கேலிக்கிடமாக நான் வாழ மாட்டேன்' என்றாள். அந்த வார்த்தைகள் வீரப்பனுக்குத் தன்னையே இடித்துக் காட்டுவது போலிருந்தது. தன் இருதயம் தாக்கப்பட்டதைப் போல் வேதனைப்பட்டான். ஒரு பெண்ணின் முன்னிலையில் தான் மிகவும் கேவலமாகி விட்டதாக நினைத்து வருந்தினான். 'நான் வருகிறேன்' என்று சொல்லி வள்ளி திரும்பிவிட்டாள். வீரப்பனும் எழுந்து வீட்டுக்குள் சென்று விட்டான். நானும் ஆறுமுகமும் ஒருவருக்கும் தெரியாமல் குறுக்கு வழியாக வீடு திரும்பினோம்.

"ஆறுமுகத்தின் வீட்டுக் கூடத்தில் நானும் ஆறுமுகமும் உட்கார்ந்து வள்ளியைப் பற்றியும் அவன் எதிர்கால வாழ்வைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். 'வள்ளியை இனி மேல் நீ எங்கும் அனுப்பாதே. அவள் வீட்டிலேயே இருக்கட்டும். அடிபட்ட சிதம்பரத்தை வேண்டுமானால் அவன் குணமாகும் வரையில் நீயே கவனித்துக் கொள். வள்ளியைக் கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் வீட்டிலேயே அடக்கமாக இருக்கும்படி சொல்லு' என்று ஆறுமுகத்திடம் சொன்னேன். அவனும் சரி என்று தலையை ஆட்டினான்.

"அதே நேரத்தில் வள்ளி தெருவாசற் கதவருகே வந்து நின்றாள். விளக்கு வெளிச்சம் அவள் முகத்தின் மீது விழுந்தது. அவள் மிகவும் வேதனையுற்றிருக்கிறாள் என்பது அவள் வாடிய முகத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது. நான் ஆறுமுகத்திடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன்.

"ஆறுமுகம் வள்ளியின் அருகில் வந்தான். ஒரு தாய் தன் குழந்தையை அணைத்துக் கொள்வது போல் வள்ளியைத் தன்னோடு சேர்த்துப் பிடித்து அழைத்துக் கொண்டு போனான். அந்த அன்பின் அரவணைப்பிலேயே நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை வள்ளியிடம் சொன்னான். சிதம்பரத்தைத் தான் பார்த்துக் கொள்வதாகக் கூறினான். வள்ளி பதில் ஒன்றும் சொல்லவில்லை. தன் தந்தையின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள். 'வள்ளி! உன்



னுடைய நலத்துக்காகத்தான் சொல்லுகிறேன், நீ இனிமேல் வீட்டைவிட்டு வெளியில் போகாதே' என்றான் ஆறுமுகம். வள்ளி மௌனமாகத் தலையை அசைத்தாள். அவள் வாய் திறந்து பதில் சொல்லாவிட்டாலும் தன் தந்தையின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடப்பதை அவள் தலையை ஆட்டி ஆமோதித்த பாவமே சொல்லி விட்டது.

"காட்கள் பல உருண்டு ஓடின. ஆறுமுகம் சிதம்பரத்தின் அருகிலேயே இருந்தான். அவனுக்குச் சுய உணர்வு வரவில்லை. அப்படி வந்த ஓரிரு சமயங்களில் 'வள்ளி! உனக்காகத்தான் நான் அடிபட்டேன். உனக்காகத்தான் நான் இந்த ஊருக்கு உழைத்தேன்' என்று சொல்லுவான். உடனே உணர்விழந்து விடுவான். ஆறுமுகம் அதைக்கேட்டு வேதனைப் படுவான். சில தினங்களாக ஆறுமுகம் சிதம்பரத்துக்குச் சேவை செய்தான் அல்லவா! அதனால் அவனுக்குச் சிதம்பரத்திடம் அன்பு உண்டாகி விட்டது. அவன் எப்படியாவது பிழைத்து எழுந்திருக்க வேண்டும் என்று நினைத்தான். யமனிடமிருந்து அவனைக் காப்பாற்றத் தன் முழு நேரத்தையும் செலவிட்டான். உணவை மறந்தான். உறக்கத்தை மறந்தான். வீட்டுக்குப் போய்த் தன் அருமை மகள் வள்ளியைப் பார்ப்பதையும் மறந்தான்.

"இதற்குள் வள்ளி வீரப்பனைப் போய்த் தனிமையில் சந்தித்து வந்த செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. அவர்கள் வீரப்பனைப் பற்றியும் வள்ளியைப் பற்றியும் அவதூறு பேச ஆரம்பித்து விட்டனர். இது வள்ளியின் காதிலும் விழுந்து விட்டது. அவள் இதைக் கேட்டுத் துடித்தாள். ஒரு பெண்ணாய்ப் பிறந்து விட்டால் அவளுக்கு எந்தச் சுதந்திரமும் கிடையாது போலிருக்கிறது என்று வருந்தினாள். வீட்டை விட்டு வெளியே தலைகாட்டவே வெட்கினாள். கவலையின்றி இருந்த வள்ளி இப்பொழுது கவலையே உருவமாக உட்கார்ந்து விட்டாள். அவளிடமிருந்த அசாதாரணமான துணிவும் மறைந்து விட்டது.

"அன்று ஏதோ ஒரு காரியமாக அல்லிக்குளத்துக்குச் சென்றேன். அல்லிக்குளம் கிராமமே சோர்வுற்றது போலிருந்தது. இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. பின்னால் நடக்கப் போகும் விபரீதத்தை முன்கூட்டியே தெரிவிப்பதுபோல வானம் பயங்கரமாக உறுமிற்று. காது பிளந்து விடுவதுபோல இடி இடித்தது. சூரியன் அடிவானத்தை அடைந்து விட்டான். வரிசையாக இருந்த தென்னை மரங்களின் உச்சியில் சூரியனின் செங்கதிர் விழுந்ததால், தென்னங் குலைகள் பொற் கலசங்களைப்போல் காட்சி அளித்தன. காற்று இல்லாமையால் அசையாமல் நின்று கொண்டிருந்த அத்தென்னை மரங்கள் பயங்கரமாக எதையோ எதிர்பார்ப்பது போல் நின்று கொண்டிருந்தன.

"பணக்காரர்களைப் பற்றி ஆறுமுகம் அடிக்கடி சொல்லி வந்தானே அது உண்மையாகி விட்டது. அஞ்சாமலைப் பண்ணையார் தன் பணத் திமிரினால் தர்மத்தை மறந்து விட்டார்; நியாயத்தைப் புறக்கணித்து விட்டார்; நெறி தவறிப் போய் விட்டார். வள்ளி வீட்டில் தனிமையில் இருந்து வருவதையும் ஆறுமுகம் சிதம்பரத்துக்கு அருகிலிருந்து தொண்டாற்றுவதையும் கேள்விப் பட்டார். வஞ்சகமாக வள்ளியை அவள் தந்தை அழைத்து வரச் சொன்னார் என்று சொல்லி அவளை அஞ்சாமலைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்து விட்டார். வள்ளி ஏமாந்து விட்டாள். மனம் நொந்து கிடந்த வள்ளி தன் நிலையை அறிந்து திகைத்தாள். தான் அஞ்சாமலைப் பண்ணையாரின் அந்தரங்க மாளிகையில் இருப்பதை உணர்ந்து தவித்தாள். கூண்டில் அடைபட்ட கிளிபோல அஞ்சாமலைப் பண்ணையாரிடம் அகப்பட்டுக் கொண்டாள் வள்ளி.

"தன்னை அவமானப்படுத்திய வள்ளி தன்னந் தனியே ஆதரவற்றுக் கிடக்கும் அவல நிலையைப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார் பண்ணையார். சோர்ந்து கிடந்த வள்ளியின் முகத்தில் அவர் என்னத்தைக் கண்டாரோ! பண்ணையாரின் கண்கள் அவளைப் பார்த்து மயங்கி நின்றன. இமைப்பதையும் மறந்து சித்திரத்தின் கண்களைப் போல் செயலற்று இருந்தன. இதுவரை அடங்கிக் கிடந்த பண்ணையாரின் மிருக உணர்ச்சி படமெடுக்கத் தொடங்கியது. 'வள்ளி! உன் பவழ வாயைத் திறந்து சரி என்று சொல்லு. அல்லிக் குளமே வியந்து புகழும்படி நமது திருமணத்தைச் சிறப்பாக நடத்துகிறேன்' என்றார்.

"பண்ணையாரின் அந்தக் கேள்வி திடுக்குற்றிருக்கும் வள்ளியை எங்கோ அதல பாதாளத்தில் கொண்டு அமுக்குவது போலிருந்தது. அவள்

மெல்லிய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. நீண்ட கண்கள் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன. பண்ணையார் அவள் பரிதாப நிலைமையைக் கண்டு பச்சாதாபப் படவில்லை. 'அன்று பேசிய வீராப்பு ஒன்றையும் காணுமே! கண்ணீர் விட்டு என் கருத்தைக் கரைத்துவிட முயலுகிறாயா! வேஷம் போட்டு என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா! அது ஒன்றும் என்னிடம் பலிக்காது. வள்ளி! இதைக் கேள். நீயே சம்மதித்தால் ஊரறிய உலகறிய சிறப்பாகத் திருமணம் நடக்கும். இல்லாவிட்டால் இந்த அந்தரங்க மாளிகையில் ரகசியமாக, ஆனால் அக்கினி சாட்சியாகத் திருமணம் நடந்தே தீரும். இதை யார் எதிர்த்தாலும் நான் நிறுத்தப் போவதில்லை' என்று அழுத்தமாகச் சொன்னார்.

"கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டிருந்த வள்ளி பண்ணையாரின் பாதத்தில் விழுந்தாள். 'என்னை உங்கள் சகோதரி போல பாவித்து எனக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்கு அக்காள் தங்கைகள் இல்லையா! ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு விரோதமாகப் பலவந்தப் படுத்துவது நியாயமா! தயவு செய்யுங்கள். நான் உங்கள் தங்கை' என்று கல்லும் கரைந்து உருகும்படி கதறினாள்.

"விபரீத எண்ணம் கொண்ட பண்ணையார் வள்ளியின் வேண்டுகோளைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. அவளைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தார். 'இது நாடக மேடை அல்ல, உன் அலங்காரப் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கு. நான் தீர்மானித்து விட்டேன். நீ சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும் நாளைக்கு நமக்குக் கல்யாணம். உன்னைத் தலை முதல் கால்வரை தங்கத்தாலும் வைரத்தாலும் அலங்கரிக்க விடியற் காலையிலேயே தாதி வருவாள். அதற்குள் உன் மனத்தை மாற்றிக் கொள். இங்கு உனக்கு ஒரு தீங்கும் நேராது. இந்த அறையை நான் வெளியே பூட்டிக் கொண்டு போய் விடுவேன். வாசலிலே என்னுடைய ஆட்கள் காவலிருக்கிறார்கள். இந்த என் மாளிகைக்குள் யமன்கூட நுழைய முடியாது. உனக்கு வேண்டிய ஆகாரம் எல்லாம் இந்த அலமாரியில் இருக்கிறது' என்று சொல்லி அந்த அறையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு பண்ணையார் சென்று விட்டார்.

"இந்தப் பயங்கரச் செய்தியை, சோக நிகழ்ச்சியைப் பண்ணையாரின் ஆட்களில் ஒருவன் என்னிடம் வந்து சொல்லி விட்டான். பொழுது விடிவதற்குள் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று ஆறுமுகத்தைத் தேடிக்கொண்டு சிதம்பரம் வீட்டுக்குச் சென்றேன். பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும் என்று சொல்லுவது போல இன்னொரு பரிதாபச் செய்தி, நெஞ்சு வெடிக்கும் நிகழ்ச்சி நடந்து விட்டது.

"சிதம்பரத்தின் சிறிய வீட்டின் வாசலில் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். அவனிடம் 'ஆறுமுகம் எங்கே? அவனை நான் மிக அவசரமாகப் பார்க்க வேண்டும்' என்று கேட்டேன்.

"'இதோ வந்து விடுவார் சற்றுப் பொறுங்கள்' என்று சொல்லிவிட்டு ஆறுமுகம் எங்கு போயிருக்கிறான் என்பதைச் சொன்னான். சிதம்பரத்துக்குச் சற்று முன்பு நன்றாக நினைவு தெரிந்தது. உடம்பெல்லாம் வலிக்கிறதே என்று வேதனைப் பட்டான். ஆறுமுகம் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தான். சட்டென்று சிதம்பரம் ஆறுமுகத்தைப் பார்த்தான்.



'நான் இனி உயிரோடு இருக்கமாட்டேன். தயவு செய்து வள்ளியை அழைத்து வாருங்கள். அவளிடம் நான் ஒரு முக்கிய சேதி சொல்லவேண்டும். அப்பொழுதுதான் என் ஆன்மா சாந்தியடையும். என்னைப்போலவே வள்ளியும் நினைக்கிறாளா என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும்' என்றான். 'இதோ போய் வள்ளியை அழைத்து வருகிறேன்' என்று கூறி ஆறுமுகம் வீட்டுக்கு ஓடியிருக்கிறான். ஆனால் சிதம்பரம் ஆறுமுகம் போனதிலிருந்து பேசாமல் இருக்கிறான். என்னை வெளியிலிருந்து ஆறுமுகம் வருகிறானா என்று பார்த்து உடனே வந்து சொல்லு என்று கேட்டுக் கொண்டான். நானும் ஆறுமுகத்தை எதிர்பார்த்துத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்றான்.

"எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு 'ஆறுமுகத்துக்கு இன்று வேறு முக்கிய வேலையிருக்கிறது. அதுவரையில் நீயே சிதம்பரத்தைக் கவனித்துக் கொண்டிரு' என்று சொல்லிவிட்டு சிதம்பரத்திடமும் விஷயத்தைச் சொல்லி வைப்போம் என்று உள்ளே சென்றேன். சிதம்பரம்

கண்ணை மூடியபடி படுத்துக் கிடந்தான். அவன் அருகில் சென்று சிதம்பரம் என்று கூப்பிட்டேன். அவன் பதில் பேசவில்லை. அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தேன். ஜில்லென்றிருந்தது. அவன் முகத்தைப் பார்த்தேன். ஐயோ, என்ன சொல்லுவேன்! சிதம்பரம் இறந்து கிடந்தான்!" என்று சொல்லித் தலையாரி தங்கமுத்து கதையைச் சட்டென்று நிறுத்தினார்.

அவர் கதையை நிறுத்தியவுடன் திடீரென்று உலகத்தின் மௌனம் என் உணர்வை வந்து மோதிற்று. சிறிதுநேரம் வாய் பேசாமல் இருந்தேன். மேலே என்ன ஆயிற்று என்று கேட்கும் பாவனையில் தங்கமுத்தைப் பார்த்தேன். அவர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன. முண்டாகத் துணியால் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒருதரம் என்னைப் பார்த்தார். மேலே கதையைத் தொடர்ந்தார்:

"பொது வாழ்வில் ஈடுபட்டதால் உயிரைத் துறந்த சிதம்பரத்தைப் பார்த்தவுடன் என் கண்களில் நீர் வடிய ஆரம்பித்து விட்டது. இது வரையில் என் மனத்தில் இருந்த சுயநலம், அறியாமை, பொருமை, கோபம் எல்லாம் என் கண்ணீருடன் கரைந்து ஓடுவது போல உணர்ந்தேன். உடனே வள்ளியின் அபாய நிலைமை நினைவுக்கு வந்தது. சிதம்பரத்தின் வீட்டிலிருந்த



ஆளிடம் மேலே வேண்டிய காரியங்களைக் கவனிக்கும்படிக் கூறிவிட்டு ஆறுமுகத்தின் வீட்டுக்கு ஓடினேன். அங்கு ஆறுமுகம் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தான். அவனிடம் எப்படி இந்த இரண்டு பயங்கரச் செய்திகளையும் சொல்லுவது என்று புரியாமல் திகைத்தேன். காலம் கடத்தக் கூடாது என்று நினைத்துப் பேச்சை ஆரம்பித்தேன். அதற்குள்ளாக ஆறுமுகம், 'சிதம்பரம் சாகும் தறுவாயில் இருக்கிறான். வள்ளியைப் பார்க்க விரும்புகிறான். ஆனால் வள்ளியையோ வீட்டில் காணவில்லை' என்றான். என் மனது இப்பொழுது திடப்பட்டு விட்டது.

"'இனி அவனால் வள்ளியைப் பார்க்க முடியாது' என்றேன். 'ஏன்!' என்று சற்று படபடப்போடு கேட்டான். 'சிதம்பரம் இறந்து விட்டான்' என்றேன். அவ்வளவுதான். 'ஐயோ, சிதம்பரம்! போய்விட்டாயா! வள்ளியைப் பார்க்காமலேயே போய்விட்டாயா!' என்று வாய் விட்டுக் கதறினான் ஆறுமுகம். சட்டென்று எழுந்திருந்து சிதம்பரத்தின் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான். என் பலம் முழுவதையும் செலுத்தி அவனைத் தடுத்துப் பிடித்து நிறுத்தினேன். அவனிடம் வள்ளியின் அபாய நிலைமையை எடுத்துச் சொன்னேன். ஆறுமுகம் இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு 'ஐயோ நான் என்ன செய்வேன்!' என்று பயங்கரமாக அலறினான். அவனைப் பயமும் திகிலும் சூழ்ந்து கொண்டது. அகல விரித்த கண்களால் எதையோ வெறிக்கப் பார்த்தான். கண்களை இமைக்கக் கூடப் பயந்தான். என் காலின்மேல் ஏதோ சுர் என்று சுட்டது. குனிந்து பார்த்தேன். கண்ணீர்த் துளிகள், ஆறுமுகத்தின் கண்களிலிருந்து முத்து முத்தாகச் சிந்திக் கொண்டிருந்தன. சிந்தனை இழந்திருந்த நான் உணர்வு பெற்றேன்.

"'ஆறுமுகம், கிளம்பு! வீண் யோசனை பண்ணிக் கொண்டிருப்பதில் பலன் ஒன்றுமில்லை. நாம் உடனே வீரப்பனின் வீட்டுக்குப் போவோம். அவன் வள்ளியை மீட்க நமக்கு உதவி புரிவான்' என்றேன். ஆறுமுகம் மெதுவாக என் அருகில் நெருங்கி வந்தான். தன்னுடைய பலம் பொருந்திய கைகளால் என்னை அணைத்துப் பிடித்தான். சின்னக் குழந்தையைப் போல் விசித்து விசித்து அழத் தொடங்கிவிட்டான். அவன் இதயத்தை எல்லையற்ற வருத்தம் பிடித்துக் கொண்டது என்பது நன்றாகத் தெரிந்தது. உன்மத்தம் பிடித்தவனைப் போலாகி விட்டான் ஆறுமுகம்.

"ஆறுமுகத்தின் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை என்னை ஒரு கணம் திகைக்க வைத்து விட்டது. அடுத்த கணம் அவனுடைய விம்மல் சத்தம் என் உணர்ச்சியைத் தூண்டி விட்டது. அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீரப்பனின் வீட்டைத் தேடிப் போனேன். ஆறுமுகமும் இயந்திரம் போல உணர்ச்சி இன்றி என்னுடன் வந்து கொண்டிருந்தான்.

"நானும் ஆறுமுகமும் வயலிலும் வரப்பிலும் காட்டிலும் மேட்டிலும் விழுந்து போய்க்கொண்டிருந்தோம். ஏற்கெனவே இரவு வந்து விட்டது. சந்திரன் ஒளி அந்த வெளி எங்கும் பரந்து கிடந்தது. வானத்தில் மிதந்து வந்த மேகக் கூட்டங்கள் சந்திரனை அவ்வப்போது மறைத்துக் கொண்டிருக்

தன. அப்பொழுது பூமியின்மீது விழுந்த நிழல்கள் பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாகத் தோன்றியது. பின்னால் ஏற்படப்போகும் கோர சம்பவம் ஒன்றை அது எடுத்துக் காட்டுவது போலிருந்தது. 'வீரப்பனிடம் விஷயத்தைச் சொன்னால் அவன் உடனே கிளம்பி வந்து உதவிபுரிவான்' என்று கற்பனை செய்த வண்ணம் நடந்து கொண்டிருந்தேன்.

“இப்பொழுது தூரத்தில் வீரப்பனின் வீடு நன்றாகத் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன் வீரப்பனும் வள்ளியும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசிக் கொண்ட பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. அது என் மனத்தை என்னவோ செய்து விட்டது. திடீரென்று மேகங்கள் சந்திரனை மறைத்து விட்டன. உலகமே இருண்டு விட்டது போலிருந்தது. வீரப்பனின் வீட்டை இப்பொழுது பார்க்க முடியவில்லை. நானும் ஆறுமுகமும் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தோம்.

“ஆறுமுகத்தின் நீண்ட பெரு மூச்சுடன் கலந்த விம்மல் சத்தம் கேட்டுச் சட்டென்று நின்றேன். மேகங்கள் விலகி விட்டதால் நிலவொளியில் ஆறுமுகத்தின் முகத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவன் முகம் கண்ணீரினால் நனைந்திருந்தது. கண்களைத் திறந்த வண்ணம் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டிருந்தான் என்பது மூடியிருந்த அவன் வாய் காண்பித்தது. அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாகவும் பயங்கரமாகவும் இருந்தது. அவன் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு வீரப்பனின் வீட்டை அடைந்தேன்.

“வீரப்பனின் வீடு திறந்தே கிடந்தது. எங்கும் அமைதி சூழ்ந்திருந்தது. ஆறுமுகமும் நானும் மெதுவாக வீட்டின் பின்புறத்துக்குச் சென்றோம். பின்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு வந்த எங்கள் காலடிச் சத்தத்தைக் கேட்டு, எதையோ யோசித்த வண்ணம் உட்கார்ந்திருந்த வீரப்பன் திரும்பிப் பார்த்தான். எங்களை உற்றுப் பார்த்தபடியே சற்று நேரம் அசைவற்று உட்கார்ந்து விட்டான். எங்களைப் பார்த்தவுடன் ஏற்பட்ட மகிழ்ச்சியால் ஒரு கணம் அவன் முகம் மலர்ந்தது.

“‘தலையாரி ஐயாவா ! அது யாரு, வள்ளியின் தந்தையா ! வாங்க!’ என்ற சொல் உற்சாகத்துடன் அவன் வாயிலிருந்து வந்தது.

“நாங்கள் மௌனமாக அவனை நெருங்கினோம். எங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவன் மீண்டும் ஒரு முறை எங்களை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முகம் மாறிக் கலவரமும் வியப்பும் அடைந்தன. ‘என்ன சேதி ! ஏன் இப்படி எதையோ பறி கொடுத்தவர்கள் போல நிற்கிறீர்கள்’ என்றான். அதற்குள் ஆறுமுகம் ஓரே தாவலாய் அவனை அணைத்துக் கொண்டு அவன் மார்பில் முகத்தைப் புதைத்த வண்ணம் விம்மி விம்மி அழுது விட்டான்.

“வெளிப் புறத்தில் கன்றைப் பிரிந்த பசுவின் தீனக் கதறல் சோகமாகக் கேட்டது.

“நான் வீரப்பனிடம் வள்ளியின் விஷயத்தை விவரமாகச் சொன்னேன். அப்பொழுது தன் வெறுங் கால்களால் வீரப்பன் தரையைத் தேய்த்துக் கொண்டிருந்தான். அங்கு ஒரே புழுதிப் படலமாகக் கிளம்பியது. அது அவனுடைய உள்ளக் குமுறலைக் காண்பித்தது. எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டது போல் அவனுக்கு ஆத்திரம் கொழுந்து விட்டெரியத் தொடங்கியதை அவனுடைய சிவந்த கண்கள் காண்பித்தன.

“‘சாதாரண ஒரு குடும்பப் பெண்ணை ஏமாற்றி அழைத்துச் செல்ல அஞ்சாமலைப் பண்ணையாருக்கு அவ்வளவு துணிச்சலா ! ஆமாம் நீங்கள் ஏழைகள் அல்லவா ! உங்களுக்கு யார் ஆதரவு காட்டப் போகிறார்கள் என்று நினைத்து விட்டான் போல் இருக்கிறது. இதோ நானிருக்கிறேன். உங்கள் மகள் வள்ளியை மீட்டுக் கொடுக்கிறேன்’’ என்று உக்கிரமான குரலில் சொல்லி ஆறுமுகத்தை ஆதரவோடு அணைத்துத் தடவிக் கொடுத்தான்.

“வீரப்பன் சட்டென்று வீட்டுக்குள் சென்றான். அவன் நெற்றி மட்டத்துக்குச் சரியாக இருந்த சிலம்பக் கழி ஒன்றுடன் வெளியில் வந்தான் தன் கையிலிருந்த அந்த நீண்ட கழியை ஒரு தரம் இடது பக்கமாகவும், வலது பக்கமாகவும் சுழற்றி ஒரு துள்ளுத் துள்ளி நின்றான். ‘இந்தக் கழி இன்று எத்தனை தலைகளைப் பதம் பார்க்கப் போகிறதோ தெரியவில்லை’ என்று சொன்னான். அப்பொழுது அவன் பலமான வலது கையின் ஐந்து விரல்களும் இரும்புக் குறடுபோலச் சிலம்பக் கழியை அழுத்திப் பிடித்தன. வீரப்பனின் ரௌத்ர உருவத்தை, அவன் நின்றுகொண்டிருந்த நிலையை அப்பொழுது பார்க்கப் பயமாக இருந்தது.

“‘சரி ! புறப்படுங்கள் அஞ்சாமலைக்கு. அஞ்சாமலைப் பண்ணையாரின் அந்தரங்க மாளிகையை இடித்துத் தரைமட்டமாக்கி வள்ளியை மீட்டு வருவோம்’ என்று சொல்லி விட்டு அவன் நடக்க ஆரம்பித்தான். அவனுடைய நடைக்கு நாங்கள் இருவரும் ஓடவேண்டி யிருந்தது.

“வழியில் என் மனம் வள்ளியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. ‘பணக்காரனிடமிருந்தும், பலாத்காரம் செய்பவனிடமிருந்தும், நெறி தவறிய துன்மார்க்கனிடமிருந்தும் தப்பித்துக் கொள்வதா யிருந்தால் திடமான மன வலிமை வேண்டும். பணக்காரன் என்பதற்காகத் தன் அறிவையும் தர்மத்தையும் கற்பையும் விற்காமல் இருப்பதற்கு உள்ளம் பண்பட்டிருக்க வேண்டும். அப்படி விற்று வயிறு வளர்க்கும் ஈனர்களின் மானக் கேடான வாழ்க்கையினால்தான் ஊரில் பணம் படைத்தவனின் கொடுமையும் ஏழைகளின் துயரமும் வளர்ந்து வருகிறது. சாதாரண மனிதர்களை மயக்கும் இந்தச் சக்திகளை எல்லாம் எதிர்த்து நிற்கும் மன வலிமை பெற்றவள்தான் வள்ளி. இருந்தாலும் பெண்பிள்ளையாயிற்றே. அந்தப் பணத் திமிர் படைத்த அஞ்சாமலை மிருகத்திடம் என்ன செய்வாள் ! உண்மையுடன் உறுதியாக நின்றால் கடவுள் அவளுக்குக் கை கொடுப்பார் !’ என்றெல்லாம் எண்ணிக் கொண்டே நடந்தேன்.

“தூரத்தில் ஒரு சிறிய ஆட்டைச் சுற்றிப் பல நரிகள் சூழ்ந்து கொண்டிருந்தன. நரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் அந்த ஆட்டின் உடல் குன்றி நடுங்கிக் கொண்டிருந்தது. பயத்தால் அது பரிதாபமாகக் கத்தியது. அதைப் பார்த்துச் சுற்றி நின்ற நரிகள் சந்தோஷமாக ஊளை யிட்டன. இந்தக் காட்சி என்னை மிகவும் வேதனைப் படுத்திக் கொண்டிருந்தது.

“‘அதுதானே அஞ்சாமலைப் பண்ணையாரின் அந்தரங்க மாளிகை’ என்று கேட்டான் வீரப்பன். என் சிந்தனை தடைப்பட்டது. ‘ஆமாம், அதுதான் அந்தரங்க மாளிகை. ஜாக்கிரதை’ என்றேன். அடுத்த கணம் ஆறுமுகமும் வீரப்பனும் அஞ்சாமலைப் பண்ணையாரின் அந்தரங்க மாளிகையின் வாசலுக்குச் சென்று விட்டார்கள். அங்கிருந்த வாயிற்காப்போர்களிடம் ஏதோ சொல்லிப் பார்த்தார்கள். அவர்களுக்குள்ளே பேச்சு முற்றி


விட்டது. ஆறுமுகம் அடித்து வீழ்த்தப் பட்டான். வீரப்பன் தன் கையிலிருந்த சிலம்பக் கழியைச் சுழற்றிக் கொண்டு அவனை எதிர்த்த ஐந்தாறு பேர்களுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டிருந்தான். நான் ஆறுமுகத்தைத் தூக்கிவந்து அவனுடைய மூர்ச்சை தெளிய உதவி செய்து கொண்டிருந்தேன். அடிக்கடி வீரப்பனையும் கவனித்துக் கொண்டிருந்தேன். தென்னந் தலையிலிருந்து தேங்காய்கள் விழுவது போல 'பொத்து' 'பொத்து' என்று வீரப்பனை எதிர்த்த பலம் மிக்க ஆட்கள் விழுந்து கொண்டிருந்தனர். அதற்குள் ஆறுமுகமும் மூர்ச்சை நீங்கி எழுந்தான்.

"வீரப்பன் இப்பொழுது தன்னை எதிர்த்து நின்ற ஒரே ஒரு ஆளுடன்தான் சண்டை போட்டுக் கொண்டிருந்தான். அவர்களுடைய சிலம்பக்கழிகள் ஒன்றோடு ஒன்று 'மடார்' 'மடார்' என்று மோதிக் கொண்டன. சிலம்பக் கழிகள் சுழலும் போது ஏற்படும் 'ஙொய்' 'ஙொய்' என்ற சத்தம் எனக்குத் திகிலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. திடீரென்று வீரப்பன் குப்புற அடித்துக் கொண்டு தரையில் விழுந்தான். வீரப்பனின் மண்டையில் 'படார்' என்று சிலம்புக் கழியின் அடி விழுந்து விட்டது. கீழே விழுந்த வீரப்பனின் மார்பில் பயங்கரமாக உதைத்தான் அந்தக் கொடிய ஆள். அதைப் பார்த்த ஆறுமுகம் புலி பாய்வது போல் ஒரே தாவலில் பாய்ந்து சென்றான்.

"அங்கு கிடந்த ஒரு பெரிய கழியை எடுத்துக் கொண்டான். அந்த ஆளின் தலையில் ஒரு போடு போட்டான். அவன் சுருண்டு விழுந்து விட்டான்.

"நானும் ஆறுமுகமும் வீரப்பனைப் பிடித்துத் தூக்கி வந்து அவனுக்கு உதவி செய்தோம். ஒரு தரம் தலையை ஆட்டிக் கொண்டு வீரப்பன் எழுந்தான். விடுவிடென்று மாளிகைக்குள் நுழைந்தான். நாங்களும் அவனைத் தொடர்ந்துசென்றோம். அந்த அழகிய மாளிகையில் ஒரே ஒரு அறை மட்டும் பூட்டி யிருந்தது. 'இந்த அறையில்தான் வள்ளி யிருக்கிறாள்' என்று சொன்னேன். வீரப்பன் அங்கிருந்த கடப்பாரையை எடுத்தான். அந்த அறையைப் பூட்டி யிருந்த பூட்டை உடைத்துக் கதவைத் திறந்தான். கதவு திறந்தவுடன் ஆறுமுகம் ஆவலோடு உள்ளே சென்றான். வள்ளி இந்தக் கலவரம் ஒன்றையும் கவனிக்காமல் நிம்மதியாகக் கண்ணை மூடியபடி படுத்துக் கிடந்தாள். அவள் முகத்தில் ஏதோ ஒரு குறை தெரிந்தது. ஆமாம், அவள் மூக்கில் இருந்த மூக்குத்தியைக் காணவில்லை. அவளுக்கு அருகில் ஒரு கடிதம் கிடந்தது. டம்ளர் ஒன்று சாய்ந்து கிடந்தது.

"ஆறுமுகம் 'வள்ளி !' என்று கூப்பிட்ட வண்ணம் அவளைத் தட்டி எழுப்பினான். ஆவலோடு அவளைத் தூக்கினான். அவள் தலை தொங்கி விட்டது. அழகி வள்ளி இறந்து கிடந்தாள். அதே வேளையில் 'வள்ளி !' என்று கத்தினான் வீரப்பன். தன் மார்பை அழுத்திப் பிடித்தவாரே தொப்பென்று வள்ளியின்மீது விழுந்து விட்டான். அவனும் வள்ளியைத் தேடிப் போய் விட்டான். வள்ளியின் முகம் இந்த உலகைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. வீரப்பன் அவள் மீது துவண்டு கிடந்தான். திறந்திருந்த கதவின் வழியாக வீசிய காற்றால் வள்ளியின் நீண்ட தலைமயிர் அவள் முகத்தை மறைத்து மூடி விட்டது.



"என்னய்யா தச்சனுரே ! நீங்கள் நேற்று செய்து கொடுத்த நாற்காலி அதற்குள்ளாகவே உடைந்து விட்டதே !"
"நான் என்ன செய்வது ? நீங்கள் யாராவது அந்த நாற்காலியில் உட்கார்ந்திருப்பீர்கள் !"

"நான் அங்கு கிடந்த கடிதத்தைப் படித்தேன்.

"'அன்புள்ள அப்பா அவர்களுக்கு, நான் என்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொண்டேன். ஆனால் என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு உங்களுக்குப் பாரமாய் வாழ விரும்பவில்லை." என்று மட்டும் எழுதி யிருந்தது.

"ஆறுமுகம் வள்ளியைப் பார்த்த வண்ணம் உடல் குலுங்கக் குலுங்க அழுது கொண்டிருந்தான். ஆமாம் அவன் அழ வேண்டியதுதானே !" என்று என்னைப் பார்த்துக் கேட்டார் தங்கமுத்து.

"கடைசியில் வள்ளியின் வாழ்க்கை இப்படியா முடிய வேண்டும் !" என்றேன்.

"அது இருக்கட்டும் தம்பி. வள்ளி என்ன நினைத்தாள், யாரைக் காதலித்தாள் என்ற விஷயம் இன்னமும் யாருக்கும் தெரியாது ! அவளை விரும்பியவர்களின் கதியும் அதோகதி ஆகி விட்டது ! அதனால்தான் சொன்னேன், பெண்கள் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று" என்று கூறிப் பேச்சை நிறுத்தினார் தலையாரி.

இரும்பு உரலில் வெற்றிலைப் பாக்கை எடுத்துப் போட்டுக் கொண்டே என்னிடம் "நேரமாகி விட்டதே, தம்பி ! நீங்கள் தனியாக வீட்டுக்குப் போய் விடுவீர்களா ! சற்று இருங்கள் அரிக்கன் விளக்கைக் கொளுத்திக் கொடுக்கிறேன்' என்று சொல்லிய வண்ணம் அங்கிருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொளுத்தினார்.

விளக்கை வாங்கிக் கொண்டு தங்கமுத்திடம் விடை பெற்றுக் கொண்டேன். தலையாரி தங்கமுத்து 'டக்' 'டக்' கென்று பாக்கு இடிக்க ஆரம்பித்து விட்டார். வீரசோழன் ஆற்றின் ஜில்லென்ற காற்று இப்பொழுது சற்று வேகமாக அடிக்க ஆரம்பித்து விட்டது. அது இறந்து போன அந்த மூன்று பேருக்கும் மௌன இசை பாடுவது போலிருந்தது ! பளிச் என்று வானத்தில் தெரிந்த ஒரு மின்னும் நட்சத்திரத்தில் அக்கிக்குளம் வள்ளியின் அழகிய முகம் தெரிந்தது.

இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா! அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா!

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே.ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதும் நேரடியாக இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் மீது மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து நிர்ப்பணியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறு நாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நல்ல வழி



அமெரிக்கன் மாடல் பிஸ்டல், லைசென்ஸ் அவசியமில்லை. டிராமா, சர்க்கஸ், பணத்தைக் காப்பாற்றிக் கொள்ள, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இதற்கு மிஞ்சிய சிநேகிதனில்லை. சுட்டபொழுது நிஜமான பிஸ்டல் மாதிரி பயங்கரமான சப்தம் உண்டாகி நெருப்பு ஜ்வாலைகள் வெளிவரும். விலை 8-8-0 போஸ்டேஜ் 1-8-0 தனி. தோல் பெட்டி 2-8-0. பிஸ்டலுடன் 25 குண்டுகள் இலவசம். தனியாக தோட்டாக்கள் வேண்டுமானால் 1 டஜன் 1-8-0.

வீட்டில் சினிமா (புரொஜக்டர்)



வீட்டிலேயே சினிமா பார்த்து ஆனந்த மடையலாம். இந்த சலனப் படங்களை திரையின்மேல் பார்க்கலாம். இது பிரகாசமாகவும், கவர்ச்சிகரமாகவும் பிரதிபலிக்கிறது. விலை ரூ. 7-8-0 வி. பி. பி. சார்ஜ் ரூ. 2-0-0. மேற்கொண்டு பிலிம் கெஜம் 1-க்கு அணா 8 தனி.

கொசு வலை

கொசுக்கடியின் உபத்திரவத்திலிருந்து எங்களது உயர்ந்த ரக வலையினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள். வெளியிடங்களில் ரூ. 15க்கு கூட கிடைப்பது கஷ்டம். விலை ரூ. 7-8-0. வி. பி. பி. சார்ஜ ரூ. 1-8-0 தனி.

14 பாஷைகள் 48 மணி நேரத்தில்

ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பர்மீஸ், தமிழ் முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் கற்கலாம். விலை ரூ. 5 வி. பி. பி. சார்ஜ் அணா 12.

எலக்ட்ரிக், ரேடியோ கைட்

மின்சார சக்தியின்றி இயக்கக் கூடிய ரேடியோவை ரூ. 15 செலவிலேயே தயாரியுங்கள். ரேடியோ ரிப்பேர், எலக்ட்ரிக் ஒயரிங் முதலியவைகளைக் கற்றுக்கொண்டு மாதம் ரூ. 200 சம்பாதியுங்கள். விலை ரூ. 4-4-0. வி. பி. பி. சார்ஜ் அணா 12 தனி.

தொழில் புஸ்தகங்கள்

சோப் தயாரிக்கும் முறை ரூ. 3. வாசனை திரவியங்களுக்கானது ரூ. 3. தையல், கட்டிங் முறை ரூ. 3-8-0. போட்டோகிராபிக் ஆசான் ரூ. 3. டிராயிங், பெயிண்டிங் ரூ. 4. ரப்பர் தொழில் ரூ. 3. வி. பி. பி. சார்ஜ் தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்

SANSAR TRADING Co., (P. 11) Kanwariganj, Aligarh U. P.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

12. பயோரியா—பல்வலி

நாகரிகம் மிகுந்த இந்த நாட்களில் அதுவும் எடுத்ததற்கெல்லாம் பரிகாரம் கிடைக்கும் இந்த நாட்களில் கூடப் பலவிதமான பல் கோளாறுகள் இருக்கின்றன. நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்குமேல் ஏதாவது பல் கோளாறு இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை ஏதாவது ஒரு குறை பற்களில் உடையவர்களாய்த்தான் இருக்கின்றனர். இக்காலத்து மனித சமூகம் இருக்க இருக்க உடலுறுதியில் குறைந்துகொண்டே வருகிறது என்பதற்கு இந்தப் பல்லின் உறுதியை எடுத்துக்கொண்டாலே போதும். பண்டைய மனிதர்களின் மண்டையோடுகள் சில இடங்களில் அகப்படுகின்றனவாம். அவைகளை ஆராய்ச்சி செய்த உடற்கூற்று வல்லுனர்கள் அதில் இருக்கக்கூடிய பற்கள் மிகுந்த உறுதியாகவும், சொத்தை, சொள்ளையில்லாமலும் முப்பத்திரண்டு பற்களும் மிக்க உறுதியுடன் இருக்கின்றன என்று கூறுகின்றனர். இந்தக் காலத்து மனிதர்களின் பற்கள் அப்படி உறுதியுடன் காண்பது மிக அரிது என்று அவர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர்.

இந்தக் காலத்தில் நமது பற்களைக் காப்பாற்ற, அழகாய்ச் சிரிக்க, காதலன் காதலிமேல் சதா அன்புமாறாமல் இருக்க, யாருக்கும் இல்லா அக்கறை இந்தப் பற்பசை வியாபாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. விதம் விதமான விளம்பரங்களை நமக்காகப் பக்கம் பக்கமாக வரித்து தள்ளுகின்றனர். இத்தனை சௌகரியங்கள் இருந்தும் எங்கு பார்த்தாலும் பொய்ப் பற்களே வாயை அலங்கரிக்கின்றன. "பல் கெட்டு விட்டதா! எடுத்துத் தூர எறி. வேறு பல் மாட்டு. சரி, பற்கள் முன்னுக்குப் பின் வளர்ந்து அழகைக் கெடுக்கின்றதா! எல்லா பற்றையும் பிடுங்கித் தூர எறிந்துவிடு. வேறு அழகான பல் வரிசையை மாட்டு" என்ற மனோபாவத்திலேயே மக்கள் வாழ்கின்றனர். காரணம், காரியம் ஆராய்பவர்கள் இல்லை.

மனிதர்களுக்குத்தான் இம்மாதிரி நகல் வேலைப்பாடுகளெல்லாம் நடக்கின்றதே தவிர ஏனைய ஜீவராசிகளுக்கு இம்மாதிரி, பல்லைப் பிடுங்கல், வைத்தல் முதலிய தொல்லைகள் கிடையாது. அவைகள் இயற்கையை ஒட்டி வாழ்வதால் அவைகளுக்கு நம் சாதனங்கள் எல்லாம் தேவையில்லை போலும். மக்கள் நாகரிகம் அடைய அடைய இயற்கையிலிருந்து தூர விலகிக்கொண்டே போகின்றனர். இயற்கையைச் சிதைத்து, சாகடித்து அதன்பின் இயற்கையை அடையப் பல குறுக்கு வழிகளெல்லாம் ஆராய்கின்றோம்.

நமது உடலில் எலும்புகள் எவ்வளவு உறுதியாய் இருக்கின்றதோ அதற்குத் தகுந்தாற்போல் தான் பற்களின் உறுதியும் அமையும். பற்களும் எலும்பில் சேர்ந்ததுதான். இந்த எலும்பின் முக்கியமான பங்கு சுண்ணாம்புச் சத்து. மற்றும் பல ரசாயனச் சேர்க்கையால் மிகவும் உறுதியான எலும்புகள் ஆகின்றன. சிறு குழந்தைகளுக்கு எலும்புகள் மிக லேசாய் வளையும் தன்மையதாய் இருக்கும். பெரியோர்களாக ஆக எலும்புகள் வளர்ந்து முற்றி உறுதிப்பட்டுப் பலம் பெறும்.

இந்த எலும்புகளை உருவாக்கும் பொறுப்பை முக்கியமாய் சிரசில் இருக்கும் பிட்யூடரி கோளம் வகிக்கின்றது. கிடைக்கும் சுண்ணாம்புச் சத்தைக் கொண்டு தன் சக்தியையும் அளித்து எலும்புகளை உறுதியாக இருக்கவும், வளரவும் செய்கின்றது. ஆகையால் சிரசாசனம் செய்தால் பிட்யூடரி கோளம் என்றும் சுறுசுறுப்பாக இருக்கும். அதனால் எலும்புகளும் உறுதியடையும்; பற்களும் உறுதியடையும். தவிர, பற்களைச் சேர்ந்த மூளை பாகத்திற்கும் ரத்த போஷணை கிடைப்பதால் அப்பாகம் எப்போதும் ஆரோக்கியமாயிருக்கும்.


சிரசாசனம் செய்யும் போது ஒரு பயிற்சியை நாம் செய்ய வேண்டும். சிரசாசனம் செய்யும் போது வாய் மூடித்தான் இருக்கும். அப்படியே மூடியவாறு பற்களை நன்றாக அழுத்த வேண்டும். மேற்பற்கள் கீழ்ப்பற்களையும், கீழ்ப்பற்கள் மேற்பற்களையும் படும்படி வைத்து நன்றாய் அமுக்க வேண்டும். இப்படி பத்து தடவை செய்தால் போதும். இப்படி அழுத்தும்போது வாயை ஒவ்வொரு தடவைக்கும் திறந்து திறந்து மூடக் கூடாது. வாயை மூடியவாறே செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் பற்களைச் சுற்றியுள்ள தசைகளுக்கும் பற்களின் வேர்களைச் சார்ந்த தசைகளுக்கும் ரத்தம் அதிகம் பாய்ந்து பலம் பெறும். அதனால் பற்களும் பலம் பெறும். பல் வலி இன்னும் பல் சொத்தை முதலிய நோய்கள் வராது.

எடுத்ததற்கெல்லாம் இந்தக் காலத்தில் சுண்ணாம்புச் சத்தை உள்ளுக்குச் சாப்பிடுகிறார்கள். ஊசி மூலமாகக் குத்தி ஏற்றிக் கொள்ளுகிறார்கள். இருமலாக இருக்கிறதா! பலவீனமாக இருக்கிறதா! மார்புக்கூடா! க்ஷயரோகமா! சொறி சிரங்கா! கண் மங்கலா! பல் சொத்தையா! அஜீரணமா! இரத்தமில்லையா! எடுத்ததற்கெல்லாம் சுண்ணாம்புச் சத்தை ஊசி மூலமாகவோ, மாத்திரைகளாகவோ உபயோகிக்கின்றனர். இத்தனைக்கும் பார்க்கப் போனால் அது என்னவோ வெறும் சுண்ணாம்புச் சத்துதான்!

இந்தக் குத்தல், பிடுங்கல் இல்லாமல் வாழ முடியாதா! இது அவசியமாய் வேண்டியதுதானா! வேண்டாம். இவைகள் இல்லாமல் வாழ முடியும்.

1. நாம் சாப்பிடும் உணவைக் கவனித்துச் சமைக்க வேண்டும். எந்தக் காய்கறி கீரைகளையும் வேக வைத்து ஜலத்தைக் கொட்டக் கூடாது. சிறு தீயில், அளவுடன் ஜலம் வைத்து ஆவி போகாமல் தட்டை மூடி, எவ்வளவு நேரம் வெந்தால் பக்குவமாகுமோ அந்த நேரம் மட்டும் வேக வைக்க வேண்டும். விட்ட ஜலம் சுண்ட வேண்டுமென்று வேக வைக்கக் கூடாது. இப்படிச் செய்தால் காய்கறி, கீரைகளிலுள்ள சத்துக்கள் முக்கியமாய்ச் சுண்ணாம்புச் சத்துக்கள் அழிந்து போகாமல் காப்பாற்ற முடியும்.

2. பால் நிறைய சாப்பிட வேண்டும். அதிகம் காய்ச்சக் கூடாது. ஒரு கொதி, இரண்டு கொதி வந்ததும் இறக்கி விடவேண்டும். அதுதான் நல்லது. பச்சைப் பாலைச் சாப்பிடுவது இன்னும் சுண்ணாம்புச் சத்தைச் சேர்க்கும். ஆனால் கறந்த



"கண் ணே சரியாகத் தெரியவில்லை. மூக்குக் கண்ணாடி வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும் என்றால் 'அதன் விலை ஜாஸ்தியாக இருக்கிறது, வேண்டாம்' என்று சொல்லுகிறாய்!"

"ஒரு கண்ணுக்கு மட்டும் இப்பொழுது வாங்கிப் போட்டுக் கொள்ளுங்கள். மீதிநாள் இரண்டு கண்களுக்கும் போட்டுக் கொள்ளலாம்."

வுடன் குடிக்க வேண்டும். முடியாதவர்கள் காய்ச்சிக் குடிப்பதே நல்லது. பாலில், காபி எனும் விஷத்தைக் கலக்கிக் குடிக்காதீர்கள்.

3. பற்களை எல்லாம் உபயோகிக்க வேண்டும். ஏதோ மாமிசம் சாப்பிடுகிறவர்களைத் தவிர மற்றவர்களுக்குப் பற்களை அவ்வளவு உபயோகத்தில் இல்லை என்று சொல்லலாம். முறுக்கு, பொரிவிளங்காய் உருண்டை, சீடை, தேங்காய் பில்லை, பச்சைகாரட், கரும்பு, ஆப்பிள், பேரிக்காய் இவைகளை அப்படியே கடித்துச் சாப்பிட வேண்டும். இவைகளைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

நாம் தற்போது உபயோகிப்பது போன்று, அவ்வளவு சர்க்கரையை முற் காலத்தவர்கள் உபயோகித்தார்களில்லை. ஏதோ விசேஷ காலங்களில் வெல்லத்தை உபயோகித்து வந்தார்கள். மற்றக் காலத்தில் வெல்லமே தேவை யிருக்காது. நல்ல பழைய அமுது, தயிர் இவைகளைத்தான் விசேஷமாகச் சாப்பிடுவார்கள். வெள்ளைச் சர்க்கரையையே அறிய மாட்டார்கள். அதனால் அவர்களுக்குப் பற்கள் சொத்தை விழவில்லை; நன்றாய் இருந்தது. நாம் எடுத்ததற்கெல்லாம் வெள்ளைச் சர்க்கரையைத் தான் வேண்டுகிறோம். கிடைக்காவிட்டால் கருப்பு மார்க்கட்டிலாவது அதை வாங்கி உபயோகிக்கிறோம். மிட்டாய்கள், சாக்லெட்டுகளிலிருந்து பல வகை இனிப்புப் பண்டங்களையும் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை சாப்பிடுகின்றனர். இது பற்களுக்குக் கெடுதி.

பற்களின் மேல் மழமழப்பாய் ஒருவித கெட்டியான கவசம் இருக்கிறது. இந்த இனிப்பு அதிகமாய்ச் சாப்பிடச் சாப்பிட அது சிறிதுநேரம் தங்கினால் அது "ஆசிட்" ஆக மாறிவிடுகிறது. மிட்டாயைச் சாப்பிட்டதும் யாரும் வாயைக் கொப்பளிப்பது கிடையாது. ஆகையால் அது "ஆசிட்" ஆக மாறிப் பற்களின் எனாமலையே அழித்து விடுகின்றது. பிறகு நாம் சாப்பிடும் உணவு பற்களிடையே மாட்டிக் கொள்ளும். அது சில மணி நேரத்தில் அழுகி அதிலிருந்து பல விஷக் கிருமிகள் உற்பத்தியாகும். அது இம் மாதிரியான எனாமல் இழந்த பற்கள் 'எங்கே எங்கே' என்று தேடிக் கொண்டிருக்கும். அக் கிருமிகள் அங்கு குடைந்து சென்று பலவித பல் நோய்களை உற்பத்தி செய்கின்றது.

பல் நோயுடன் மட்டும் போனால் பரவாயில்லை. உங்களுக்குத் தலைவலி உண்டானாலும் சரி, கண் பார்வை மங்கினாலும் சரி, பசி ஏற்பட்டாலும் சரி, பசியில்லாமல் மந்தமாய் இருந்தாலும் சரி, வயிற்று வலி ஏற்பட்டாலும் சரி, ஜுரம் வந்தாலும் சரி எது வந்தாலும் அது பல்லின் கோளாறுதான் என்று பல் டாக்டர் சொல்வார்கள். அவர்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை. இத்தனைக்கும் காரணமாக நோய்க் கிருமிகள் நாம் சாப்பிடும் ஆகாரத்துடன் பல்லில் ஒளிந்திருந்து கலபமாய் வயிற்றுக்குள்ளே சென்று விடுகின்றன.

ஆகையால் நாம் பற்களை மிக சுத்தமாய் வைத்திருக்கப் பழக்க வேண்டும். பிரஷ்ஷில் பற்பசை மட்டும் தடவித் தேய்த்துவிட்டால் சுத்தமாய் விட்டது என்று நினைத்து விடுகிறோம். ஆனால் அது உரிய காலத்தில் தேய்த்தால்தான் நல்லது. நாம் சாப்பிட்டபின் ஒவ்வொரு தடவையும் வாயை நன்றாய் தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும். பிரஷ் அப்பொழுது செய்தால் நல்லது. அல்லது இரவிலாவது கட்டாயம் பற்களை பிரஷினால் சுத்தம் செய்யலாம். ஆனால் காலையில் சுத்தம் செய்வதில் நமது நாட்டு முறையை அனுசரித்தால் நல்லது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்பது பெரியோர்களின் வாக்கு. ஆலம் விழுதினால் பல்லைத் தேய்க்கலாம். வேலங்குச்சி மிக மிக நல்லது. இத்தனையும் கிடைக்கவில்லை யென்றால் பற்பொடி உபயோகிப்பது நல்லது. விரல்களினால் பற்களை அழுத்தித் தேய்ப்பதால் பற்களும் வரிசையாய் வளரும். அதனால் பல் ஈறுகளுக்கும் ஒருவிதப் பயிற்சி உண்டாகின்றது. ஆகையால் பற்பசை, பிரஷையே உபயோகிக்காமல் பற் குச்சிகளையும் உபயோகித்து வரப் பழகிக் கொள்ள வேண்டும்.

பற்களுக்கு மிகக் கொடிய சத்துரு "பயோரியா" என்பது. இது ஒருவித தொத்துநோய். பல் ஈறுகளைத் தேய்த்துவிடும். சிறிது பட்டாலும் ரத்தம் வரும். முற்றினால் சீழும் வரும். பிறகு பற்களின் வேரையே தாக்கும். இதை எந்த மருந்தினாலும் அசைக்க முடியாது. பற்களை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கிவிட வேண்டியதுதான். அப்பேர்ப்பட்டவர்களும் இந்த சிரசாசனம் செய்து, அதில் பல் பயிற்சிகளும் செய்து வந்தால் காலடையில் குணமாகும். தினமும் ஒரு தடவை வெந்நீரில் சாதாரண உப்பைக் கரைத்து வாயைக் கொப்பளிக்க வேண்டும். பற்களை நன்றாக அழுக்கிச் சற்று நேரமாவது தேய்க்க வேண்டும்.

சிரசாசனத்தை விடாமல் செய்பவர்களுக்குப் பல் நோய்களைப் பற்றிப் பயமே இல்லை. நமக்கு இருக்கும் பற்களால் நன்றாய்க் கடித்துச் சாப்பிட்டு களிக்கலாம். பல் நோயும் வராது.

உடலில் உள்ள எந்த நோய்க்கும் ஏதாவது ஆசனங்களைச் சொல்லுகிறீரே என்று சிலர் ஆச்சரியப்படலாம்! விடாமல் ஆசனங்களைச் செய்து வாருங்கள். உங்கள் உடம்பின் மாறுதலே, அதன் வளர்ச்சியை நீங்களே அறிவீர்கள். (தொடரும்)

பத்து - வருஷ

ட்ரெஷரி ஸேவிங்ஸ்

டிபாஸிட்டு

ஸர்ட்டிபிகேட்டுகள்

3½ சத விகிதம் வட்டி தரும்

வட்டிக்கு வரி கிடையாது

வருஷ வாரியில் உங்கள் விலாசத்துக்கு வட்டிப் பணம் அனுப்பப்படும்

ஸர்ட்டிபிகேட்டுகள் கிடைக்குமிடம்:

(i) ரிஸர்வ் பாங்க் ஆபீஸ்கள்: கல்கத்தா, பம்பாய், சென்னை, டில்லி; மேலும் கவர்ன்மெண்ட் ட்ரெஷரி தொழில் பட்டுவாடா செய்யும் இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவின் பிராஞ்சுகள்.

(ii) இம்பீரியல் பாங்க் ட்ரெஷரி தொழில் பட்டுவாடா செய்யாத பார்ட் 'ஏ' ஸ்டேட்டுகளிலுள்ள ஜில்லா ட்ரெஷரிகள்.

(iii) பூஜ் (கட்ச்) இம்பால் (மணிப்பூர்), கூர்க் மெர்க்காரா (கொடகு), ஆகிய இடங்களிலிருக்கும் ட்ரெஷரிகள்.

நூறு ரூபாய்க் கணக்கில் ஸர்ட்டிபிகேட்டுகள் வெளியிடப்படும்.

ரூ. 25,000 வரை நீங்கள் முதலீடு செய்யலாம். இரண்டு பேர் கூட்டாக முதலீடு செய்யவும், ஸ்தாபனங்களுக்கும் முதலீட்டின் அளவு ரூ. 50,000. தர்ம ஸ்தாபனங்களுக்கு ரூ. 1,00,000.

1951, ஜனவரி 22உ யன்று நிதி மந்திரி காரியாலய அறிக்கை நெ. 7 (1). B. /51 பிரகாரம் அதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு வெளியிடப் பட்டது.

இதர விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக:

தி நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர்,

கார்ட்டன் காஸில் : ஸிம்லா - 3

AC-347 TM.



புத்தி கூர்மையுள்ள குழந்தைகள் ஆரோக்கியசாலிகளாயிருப்பது சகஜமே. ஏனெனில் புத்தி கூர்மையுள்ளவர்களுக்கு எப்போதும் சுறுசுறுப்புடன் ஒழுங்காக இயங்கும் சரீரம் இருப்பதால்தான், சிறுவர்களும் உட்புற சுத்தத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள அவர்களின் சிறு வயது விலக்கல்ல, அவர்களுக்கும் நுரைக்கும் "சலசலப்பான" ஆண்ட்ரூஸ் அவசியம்தான்!

ஆண்ட்ரூஸ் வாயைச் சுத்திகரித்து, வயிற்றைத் துப்புரவாக்கி குடலுக்கு ஊக்கமூட்டி குடல்களிலிருந்து கழிவுகளை மிருதுவாக வெளியேற்றுகிறது.

ஒரு கோப்பை ஜலத்தில் ஒரு தேக்கரண்டி போட்டு தினத்தில் எந்தச் சமயத்தில் பருகினாலும் புத்துணர்வு அளிக்கும் பானம்தான் அது.

ஆண்ட்ரூஸ்

மிகச் சிறந்த மலமிளக்கி



உங்களுக்குத் தெரியுமா?

—நுரைக்கும் பானங்கள் ஏன் புத்துணர்வளிக்கின்றன என்று? அவை கரியமில வாயுவின் சிறு குமிழிகள் இருக்கின்றன. பானத்தைப் பருகினதும் இந்தக் குமிழிகள் வயிற்றைச் சுற்றி ஒட்டிக்கொள்கின்றன. அவைகளின் வாயுக்களுக்கு இதமாக சுத்தி செய்யும் தன்மை உண்டு.

நுரைபொங்கும் ஆண்ட்ரூஸ் இந்த வேலையைச் செய்கிறது. உட்புறத்தைத் துப்புரவாக சுத்திகரித்து புதுமை உணர்ச்சி ஏற்படுத்துகிறது.


மிகவும் சிறந்தது
எப்பொழுதும் மிகவும்
சுத்தமானதாயிருக்கும்
கிளாக்ஸோ தான் குழந்தைகளுக்கான சிறந்த உணவு—ஒழுங்கான முறையில் சமநிலையாக்கப்பட்ட இது உஷ்ணமான தேசங்களில் உபயோகிக்க உத்தமமானது. கெடுதல் விளைவிக்கக் கூடிய கிருமிகள்யாதும் இல்லை. ஆதலால் சாதாரண பால் உபயோகித்தால் அநேகமாக உண்டாகும் தொத்து வியாதிகள் கிளாக்ஸோ உபயோகிப்பதனால் ஏற்படுவதில்லை. இதில் சேர்க்கப்பட்டுள்ள விடமின் "டி", அயம் இவைகள் அனீமியா, ரிக்கட்ஸ் போன்ற வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது. கிளாக்ஸோ கொடுப்பதால் உங்கள் குழந்தை புஷ்டியாக வளரும்.
Glaxo
கிளாக்ஸோ குழந்தைகளுக்கான மிகவும்
சுத்தமான பால் உணவு.
Copyright
LAS. (B)
கிளாக்ஸோ லேபரட்டரீஸ் (இந்தியா) லிட். பம்பாய் கல்கத்தா மதராஸ்


நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன்
செய்தீர்களா?
உங்கள் பற்களையும், ஈறுகளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக் கொண்டு காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதில் சொரசொரப்பான பொருள் ஏதுமில்லை. மிருதுவாகவே உங்கள் பற்களை பளபளப்பான வெண்ணிறம் உண்டாகும்படி சுத்தம் செய்யும். வாயில் ஊறும் அபாயகரமான புளிப்பு நீர்களைக் கரைத்து பல்சொத்தை பிடிப்பதைத் தடுக்கும்.
மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை மிகச் சுத்தமானது. உபயோகிப்பதற்கு ஆனந்தமாயிருக்கும். அதனால் தான் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் தினமும் இருதடவை தங்கள் பற்களை மக்ளீன்ஸினால் துலக்குகிறார்கள்.
இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்
MACLEANS
PEROXIDE TOOTH PASTE
HTY-5 TAM
வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா), லிமிடெட், மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய்



டாடா அக்ரிகோ கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன

எல்லாவித உழவு வேலைகளுக்கும்
அக்ரிகோ
கருவிகள் இருக்கின்றன.



மண்வெட்டிகள்:





கோடாரிகள், செம்மட்டிகள் :

டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்,

என்றுமே மதிப்பில் குறையாத முதலீடுகள்.

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்.

பத்து வருஷ ட்ரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்.

கிடைக்கும் வட்டிக்கு

வரி கிடையாது

இந்தியா நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், நிமந்திரி காரியாலயம், கார்ட்டன் காஸில், ஸிம்லா வெளியீடு.

AC 361. TM

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


ருசிமிக்க
நர்கிஸி
கபாப்
சுலபமாக எளிதில்
தயாரிக்கும் முறை:
இதை தவற விடாதீர்கள்!
டால்டா அட்வைசரி சர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1
டால்டாவில்
தயாரித்தது
DALDA
சமநிலை உணவில் உங்களுக்குத் தேவையான கொழுப்பை அளிக்கிறது.

HVM. 171-50 TM

Regd. No. M 4392

Registered as a newspaper in Ceylon

